www.padippakam.com

# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 481 | 1997 ஆகஸ்ட் | ரூபா 6.00

## செல்லையா இராஜ்குமார் விடுதலையானார்

பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் 13 மாதங்களாக பொலநறுவை அரலகங்கவில பொலிசிலும் பிந்துனுவவை புனர்வாழ்வு முகாமிலும் சிறைவைக்கப்பட்டிருந்த சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர் செல்லையா இராஜ்குமார் ஜூலை 20ம் திகதி விடுதலையானார். அவர் உயிர்வாழ்வதும் விடுதலையானதும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் சகல பகுதிகளும் இலங்கையின் தமது தோழமைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியுடன் சேர்ந்து உலக சோசலிஸ்ட் இயக்கத்தினை தலையிட செய்து நடாத்திய பலம் வாய்ந்த பிரச்சாரத்தின் பெறுபேறேயாகும்.

"இந்தப் பிரச்சாரம் இல்லாது போயிருந்தால் எவரும் அறியாத விதத்தில் அரலகன்வில பொலிசில் என்னை கொன்று புதைத்த இடத்தில் இன்று புல்லும் ம்ளைத்து இருக்கும்" என விடுதலையானதும் பண்டாரவளை பிந்துனுவவை புனர்வாழ்வு முகாமில்



சோ.ச.க. அலுவலகத்தில் இராஜ்குமார்

இருந்து நேரடியாக கொழும்பு சோசலிச சமத்துவக் கட்சி அலுவலகத்துக்கு வந்த இராஜ்குமார் தொழிலாளர் பாதைக்குத் தெரிவித்தார். தமது விடுதலைக்காகப் போராடிய அனைத்துலகக் குழுவுக்கும் சோசலிச சமத்துவக் கட்சிக்கும் அதன் பேரில் தலையிட்ட மற்றும் சகலருக்கும் அவர் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இராஜ்குமார் ஜூலை 21ம் திகதி அவரது வசிப்பிடமான உடப்புக்கு சென்றதும் சோசலிச சமத்துவக் கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் கலந்துகொணட

(4ம் பக்கம் பார்க்க)

### பகிரங்கக் கூட்டம்

பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் கைதாகி சிறையில் இருக்கும் தமிழ் இளைஞர்களின் அனுபவம்: கைதாகி ஓராண்டுகாலம் சிறையிருந்து விடுதலையான இராஜ்குமார் விளக்குகின்றார்

**ஆகஸ்ட் 15 4.30மணி**

**அரசாங்க லிகிதர் சேவைச் சங்க மண்டபம்,**

**கொழும்பு .2**

**சோசலிச சமத்துவக் கட்சி,**
**இளம் சோசலிஸ்டுகள்**

### உள்ளே


- தங்கத்துரை, மஹ்ரூப் கொலை விடுதலை புலிகளின் ஆத்திரமூட்டும் நடவடிக்கை ... 2
- குஜ்ரால் அரசாங்கம் நூலிழையில் தொங்குகின்றது .. 3
- பீகிங் அனைத்துலக மூலதனத்தின் பொலிஸ்காரன் 4
- ஜனதா விமுக்தி பெரமுனை: தீவிரவாதத்தில் இருந்து பாசிசம் வரை
- பாசிசமும் மாபெரும் யூத மக்கட் படுகொலைகளும் .... 7–10
- இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் .......................... 12–14


**கறுப்பு ஜூலைக்கு 14ஆண்டுகள், இந்திய -இலங்கை உடன்படிக்கைக்கு 10 ஆண்டுகள்**

# இனவாத யுத்தத்தின் படிப்பினைகளைக் கற்போம்! சோசலிசத்துக்கான போராட்டத்துக்கு ஒன்றிணைவோம்!

இனவாத யுத்தம் பொதுமக்கள் மீது திணித்து வரும் பேரழிவுக்கு முற்றுப்புள்ளி வைத்து, சமாதானத்துடனும் சமத்துவத்துடனும் வாழும் நிலைமைகளைச் சிருஷ்டிப்பது, தமிழ்-சிங்கள தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர் வர்க்கங்கள் ஒன்றிணைந்து ஒடுக்கப்படும் மக்களின் ஒத்துழைப்புடன் ஈழம்-சிறீலங்கா சோசலிசக் குடியரசு ஒன்றியத்தினை ஸ்தாபிதம் செய்வதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும் என்பதை சோசலிச சமத்துவக் கட்சி மீண்டும் வலியுறுத்துகின்றது.

இனவாத யுத்தத்துக்கு அத்திவாரமிட்ட முதலாளித்துவ கூட்டரசாங்கத்தின் 1972 இனவாத அரசியலமைப்பின் பின்னர் 25 ஆண்டுகளும் யூ.என்.பி.அரசாங்கத்தின் அப்பட்டமான இனவாத யுத்தம் ஆரம்பமான 1983 கறுப்பு ஜூலையின் பின்ன் 14 ஆண்டுகளும் கழிந்து சென்றுள்ளது. அவ்வாறே இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கு அழைப்பு விடுத்த இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு 10 ஆண்டுகளும் கழிந்து சென்றுள்ளன. இலங்கையின் பிற்போக்கு ஆளும் வர்க்கம் இந்திய முதலாளிகளின் முண்டுடனும் ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவுடனும் இந்தக் காலப்பகுதி பூராவும் மக்களின் உரிமைகளைக் துவம்சம் செய்தபடி இன்றைய காட்டுமிராண்டி நிலைமையை வந்தடைந்தது எப்படி என்பதை தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் திரும்பிப் பார்ப்போம்.

இன்றுள்ள நிலைமை என்ன? * இனவாத யுத்தத்தின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள தமிழ் மக்கள் வார்த்தைகளால் வருணிக்க முடியாத கொடிய பேரழிவுகளுக்கு பலியாகி உள்ளனர். 'ஜய சிக்குறுயி' இராணுவ நடவடிக்கையின் மூலம் திரும்பவும் வீடுவாசல்களைத் துறந்து ஓட்டமெடுக்கத் தள்ளப்பட்ட இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் இன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு மட்டுமன்றி விடுதலைப் புலிகளின் ஒடுக்குமுறைகளுக்கும் பலிகடாக்களாகும் நிலை உருவாகியுள்ளது. அரசாங்கம் இம்மக்களுக்கு தொன் கணக்கில் உணவுப் பொருட்களை அனுப்பிவைத்துள்ளதாக அறிக்கைகள் விடுத்தபோதிலும் மக்களிடம் இருந்து கிடைக்கும் அறிக்கைகள் அவை பொய்யானவை என்பதை அம்பலமாக்குகின்றது. பொதுமக்கள் பட்டினி போடப்பட்டு, நோய்நொடிகளுக்கு உள்ளாக்கப்பட்டு தொற்று நோய்களுக்கு பலியாக்கப்பட்டு மக்கட் படுகொலைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். முதலாளிகளின் வேறு எந்த யுத்தத்திலும் கடைப்பிடிக்கப்படுவதைப் போலவே இந்த இனவாத யுத்தத்திலும் காட்டுமிராண்டி உபாயங்கள் கையாளப்படுகின்றன.

அரசாங்கம் விடுவித்துக் கொண்டதாகக் கூறிக் கொள்ளும் பிராந்தியங்களில் இராணுவ ஆட்சி இடம்பெறுகின்றது. இராணுவ முற்றுகைகளும் யுத்த மோதுதல்களும் பெண்களுக்கு எதிரான கற்பழிப்புக்களும் சித்திரவதைகளும், கைதுகளும், காணாமற்போதலும் மக்களின் அன்றன்றாடைய காட்சிகளாக இருந்து கொண்டுள்ளன. அரசாங்க அதிகாரிகள் "உதவிமானியத்தை" சுரண்டுவதாக இடம்பெற்றுவரும் பிரச்சாரத்தின் பின்னணியில் அரசாங்கம் முழு நிர்வாகத்தையும் இராணுவத்தின் கரங்களில் கையேற்கும் திட்டத்தை தயார் செய்து கொண்டுள்ளது. சந்திக்குச் சந்தி குடியிருப்புக்கு குடியிருப்பு இராணுவ காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

* 1983 கறுப்பு ஜூலையை நினைவு கூருவதற்கு பிரிவினைவாத விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடாத்தப் போகின்றார்கள் என்ற பிரச்சாரம் இந்நாட்களில் நாடுபூராவும் இனவாதிகளால் உக்கிரமாக்கப்பட்டுள்ளது. தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிரான பொலிஸ், இராணுவ தேடுதல்களும் நடுச்சாமக் கைதுகளும் கொழும்பு, தெகிவளை மாநகரசபை பகுதிகளிலும் தலைநகரின் மற்றும் பகுதிகளிலும் உக்கிரம் கண்டுள்ளது.

*இனவாத யுத்தத்தையும் தென் மாகாணங்களுக்கு விடுதலைப் புலிகள் தொடுக்கக்கூடிய தாக்குதல்களையும் பற்றி பரப்பும் பீதிகளை முதலாளித்துவ வர்க்கமும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் தமது உரிமைகள் உடைத்து எறியப்படுவதற்கு எதிராகக் கிளர்ந்து எழும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை நசுக்கப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. இதன் புதிய பலிகடாவாக மத்திய வங்கி ஊழியர் சங்கம் மாற்றப்பட்டுள்ளது. "விடுதலைப் புலிகளுக்கு உதவும் விதத்தில் செயற்படுகின்றனர்" என அதற்கு நேரடியாகத் தாக்குதல் நடாத்திய மத்திய வங்கி நிர்வாகிகள் இன்று அதற்கு எதிராக நீதிமன்ற தடை உத்தரவை பெற்றுக் கொண்டுள்ளனர். தொழிலாளர்கள் எங்கெல்லாம் தமது உரிமைகளைக் காக்கப் போராட்டத்தில் இறங்குகின்றார்களோ அங்கெல்லாம் அரசாங்கம் அதை இனவாத யுத்தத்துக்கு கீழ்ப்படுத்தி மூழ்கடிக்கப் பாய்ந்து விழுந்து வருகின்றது.

* இளைஞர்கள் இனவாத யுத்தத்தின் துப்பாக்கி குண்டுகளாக மாற்றப்பட்டுள்ள நிர்வாணக் கோலம் மீண்டும் வெளியரங்குக்கு வந்துள்ளது. பெரியமடு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய பதில் தாக்குதலில் இருந்து உயிர்பிழைக்க ஓட்டமெடுத்த 50 பொலிசார் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இராணுவத்தில் இருந்து ஓட்டமெடுத்து "பொதுமன்னிப்பின்" கீழ் மீண்டும் இராணுவத்தில் சேர மறுத்த 10000க்கும் அதிகமான இராணுவத்தினரை இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை வழங்குவது ஆரம்பமாகியுள்ளது. ஜூலை 7ம் திகதி மூன்று மாஜி இராணுவத்தினர் இவ்வாறு விசாரிக்கப்பட்டு 3 வருடங்கள்

(3ம் பக்கம் பார்க்க)

**இனவாத யுத்தம் வேண்டாம்!**
**சிங்கள- தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**

www.padippakam.com

# தங்கத்துரை, மஹ்ரூப் கொலை விடுதலை புலிகளின் ஆத்திரமூட்டும் நடவடிக்கை

திருகோணமலை தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ஏ.தங்கத்துரை ஜூலை 5ம் திகதி திருமலை பாடசாலை கட்டிடத் திறப்பு விழா இறுதியில் கொலை செய்யப்பட்டுள்ளார். அதில் இருந்து 15 நாட்களின் பின்னர்-ஜூலை 20ம் திகதி யூ.என்.பி.யின் திருமலை எம்.பி.யான எம்.ஈ.எச்.மஹ்ரூப் கொலை செய்யப்பட்டுள்ளார். இக்கொலைகளுக்கு விடுதலைப் புலிகள் உரிமை கோராத போதிலும் இந்த அரசியல் கொலைகள் இரண்டும் விடுதலைப் புலிகளால் செய்யப்பட்டவையாகவே தோன்றுகின்றன.தமிழ், முஸ்லீம், சிங்கள மக்களுக்கு எதிராக ஆத்திரமூட்டல்களைத் தூண்டிவிடும் நோக்கத்துடன் இடம்பெற்றுள்ள இந்தக் கொலைகளை நாம் கண்டனம் செய்கின்றோம். சில கிழமைகளுக்கு முன்னர் தமது ஆத்திரமூட்டும் இயக்கத்தின் ஒரு பாகமாக பாடசாலை மாணவர்களும் உட்பட்ட முஸ்லீம், சிங்கள, தமிழ் மக்கள் 39 பேர் விடுதலைப் புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதோடு அதில் இன்னமும் 32பேர் விடுதலை செய்யப்படாமல் உள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தத்தின் எதிரில் இராணுவப் பின்னடைவுகளுக்கு உள்ளாகியுள்ள விடுதலைப் புலிகள் தமது "பலத்தை" காட்டும் துணிச்சல் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்கும் இடையேயான பெருந்தெருக்களை மீண்டும் கைப்பற்ற பொதுஜன முன்னணி அரசாங்கம் மேற்கொண்டுள்ள காட்டுமிராண்டி "ஜயசிக்குறு" இராணுவ நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைக்கு "செய் அல்லது செத்து மடி" எனப் பெயரிட்டுள்ளனர்.

தங்கத்துரை, மஹ்றூப் கொலைகள் மீண்டும் ஒரு தடவை விடுதலைப் புலிகளின் அரசியல் வங்குரோத்தையும் பிற்போக்கு தொழிற்பாட்டையும் அம்பலமாக்கிக் கொண்டுள்ளது. அரசியல் எதிர்ப்பாளர்களைக் கொலை செய்வதன் மூலம் விடுதலைப் புலிகள் தமது அரசியல் ஆளுமையை காத்துக் கொள்ளவும் தமிழ் முதலாளி வர்க்கத்தின் ஏகப் பிரதிநிதிகளாக விளங்கவும் இந்தத் துணிச்சல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள, முஸ்லீம் இனவாதத்தை தூண்டிவிடும் - அவ்வாறே தமிழ் மக்களிடையே இனவாதத்தைக் கிளறிவிடும் பிற்போக்கு அவசியத்துடன் விடுதலைப் புலிகள் இந்த அரசியல் படுகொலைகளை ஒழுங்கு செய்துள்ளன.

கடந்த ஒரு தசாப்த காலத்தில் விடுதலைப் புலிகள் வலதுசாரித் திசையில் பயணம் செய்யும் வேகம் என்றும் இல்லாத முறையில் அதிகரித்துள்ளது. இந்த அமைப்பானது தொடர்ந்தும் தமிழ் மக்களின் எந்த ஒரு ஜனநாயக உரிமைகளுக்காகவும் நின்று வராத ஒரு அமைப்பாகப் பரிணாமம் கண்டுள்ளது. சிங்கள முதலாளி வர்க்கத்தின் இனவாத யுத்தத்துக்கு ஆளாகி அழிவுக்குள்ளாகி வரும் தமிழ் மக்கள் பற்றி இந்த அமைப்பு முதலைக் கண்ணீர் வடிப்பது தமது பிற்போக்கு அரசியல் ஆளுமையை பொதுமக்கள் மீது கொண்டிருப்பதற்காகவே. அதன் நிர்வாகத்தினுள் இருந்து வரும் பிராந்தியங்களுக்குள் பொதுமக்களுக்கு எந்தவிதமான ஜனநாயக உரிமையும் கிடையாது. மக்கள் விடுதலைப் புலிகளுக்காகவே உயிர் வாழ வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடு. விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத யுத்த இயக்கத்தின் இலக்கு, சிங்கள



ஏ. தங்கத்துரை



எம்.ஈ.எச். மஹ்ரூப்

முதலாளி வர்க்கத்துடன் ஒரு பொதுக் கொடுக்கல் வாங்கல் மூலமாக பெறும் ஒரு தனியான அரசைப் பிரித்துக் கொள்வதன் மூலம் ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டலுக்கான கதவுகளைத் திறந்து விடுவதேயாகும். "மூன்றாம் தரப்பு தலையீடு" மூலம் பொதுஜன முன்னணி அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கு விடுதலைப் புலிகள் நடாத்திவரும் பிரச்சாரம் ஏகாதிபத்திய தலையீட்டை உருவாக்குவதற்கான ஒரு பிற்போக்கு முயற்சியாகும்.

விடுதலைப் புலிகளின் அரசியல் படுகொலைகளும் வடக்கு-கிழக்கு எல்லைக் கிராமங்களில் வாழும் சிங்கள-முஸ்லீம் மக்களுக்கு தொடுக்கப்படும் கொலைகாரத் தாக்குதல்களும் தென்மாகாணங்களில் பொதுமக்களின் கொலைகளும் இனவாத யுத்தத்தை நடாத்தும் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினதும் அதன் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் கைகளையே பலப்படுத்துகின்றது. இதன் பயங்கர விளைவகளுக்கு முகம் கொடுப்பவர்கள், தமிழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள். தங்கத்துரை, மஹ்றூப் கொலைகளை சகல முதலாளித்துவ வெகுஜன தொடர்புச் சாதனங்களும் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை தவிடுபொடியாக்கும் பேரில் இனவாத யுத்தத்தினை உக்கிரமாக்குவதை நியாயப்படுத்தப் பயன்படுத்திக் கொண்டன.

கடந்த சில வருடங்களாக தமிழ் மக்களிடையே செல்வாக்கிழந்து போன தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈபீடிபி, ஈபீஆர்எல்எப், புளொட், டெலோ முதலான தமிழ் முதலாளித்துவ , குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் முன்னர் யூ.என்.பி. அரசாங்கத்தினதும் இன்று பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் இனவாத யுத்தத்துக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவு வழங்கி வருகின்றன. அவற்றின் இலக்கு சிங்கள முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து வடக்கு-கிழக்கு மாகாணங்களை தத்தமது ஆளுமைக்குள் கொணரும் கொடுக்கல் வாங்கல்களுக்கு செல்வதேயாகும். ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டின் மூலம் செய்து கொள்ளும் "தீர்வுகளுக்கு" விடுதலைப் புலிகளைப் போலவே இந்த தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களும் தயாராக உள்ளன இனக்குழு பிரச்சினைக்கு தீர்வு காணும் பேரில் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் யூ.என்.பி.க்கும் இடையே சமீபத்தில் கைச்சாத்தான இருதரப்பு உடன்படிக்கையை இந்தத் தமிழ் குழுக்கள் ஒரு பெரும் சாதனையாக தலைமேல் வைத்துக் கொண்டாடியது தெரிந்ததே.

தமிழர் விடுதலைக் கூட்டணி இனவாத யுத்தத்தினை நடாத்தும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் சகபாடியாக உள்ளதையும் யூ.என்.பி.யுத்தத்தை தொடுப்பதற்கு நேரடி ஆதரவு வழங்கி வருவதையும் விடுதலைப் புலிகள் தங்கத்துரையையும் மஹ்றூபையும் கொலை செய்வதை நியாயப்படுத்தப் பயன்படுத்த முடியாது. அத்தகைய கொலைகள் இனவாத ஒடுக்குமுறை முதலாளி வர்க்கத்துக்கும் அதன் கையாட்களுக்கும் எதிராக ஜனநாயக உரிமைகளின் அடிப்படையில் பொதுமக்களை அணிதிரட்ட இலாயக்கற்ற வங்குரோத்து, பிற்போக்கு அமைப்புக்களின் நடவடிக்கைகளாகும். விடுதலைப் புலிகள் முண்டியடித்துக் கொண்டுள்ளது ,இந்த ஒடுக்கும் முதலாளி வர்க்கத்துடனும் ஏகாதிபத்தியவாதிகளுடனும் சமரசத்தை நாடியேயாகும். குத்துவெட்டு எதற்காக? முதலாளித்துவ சலுகைகளை பங்கிட்டுக் கொள்ளுவதற்கேயாகும்.

தமிழ் தேசிய இனத்தின் "ஏகப் பிரதிநிதி"களாக தம்மைப் பேர்சூட்டிக் கொண்டுள்ள விடுதலைப் புலிகள் இன்று தமிழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை பேரழிவினை நோக்கி இட்டுச் சென்றுள்ளது. தமது எதிர்ப்பாளர்களைக் கொன்று தள்ளி விடுதலைப் புலிகள் நடாத்தி வரும் பிற்போக்கு நடவடிக்கையின் மூலம் அது எந்தளவுக்கு தமிழ் மக்களை ஒடுக்குமுறை ஆட்சிக்கு பலிகடாக்களாக்கத் தயார் என்பதைக் காட்டிக் கொண்டுள்ளது. ஏகாதிபத்தியவாதிகள் பக்கம் சாய்ந்து அவர்களின் தலையீட்டுடன் கூடிய தனிநாட்டை அமைக்கவோ அல்லது சிங்கள முதலாளி வர்க்கத்துடன் நல்லுறவு கொண்டாடி அணிசேரவோ விடுதலைப் புலிகள் முயற்சிக்கின்றது. இந்த வங்குரோத்து, பிற்போக்கு தொழிற்பாட்டினால் தமிழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் முன்னிலையில் அவர்களின் ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க இந்த முதலாளிகள் முற்றிலும் தோல்வி கண்டமையும் அத்தோடு இந்த ஒடுக்குமுறை ஆட்சிக்குள் தம்மை அடிமைகளாக்கி சுரண்டுவதற்கு இவர்கள் தயாராகுவதும் அம்பலமாகிக் கொண்டுள்ளது. பிரிவினைவாதம் ஒரு பிற்போக்குப் பொறிக்கிடங்காகியுள்ளது.

தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளை தமிழ் பேசும் தொழிலாளர்கள் தென்மாகாணங்களில் சிங்களம் பேசும் தொழிலாளர்களுடன் ஐக்கியத்தை ஊர்ஜிதம் செய்து கொண்டு மற்றும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை தமது போராட்டத்தைச் சூழ அணிதிரட்டுவதன் மூலம் சிங்கள-தமிழ் முதலாளி வர்க்க ஆட்சியை தூக்கி வீசுவதன் மூலம் மட்டுமே உறுதி செய்ய முடியும். இந்தப் போராட்டம் இலங்கையில் முதலாளி வர்க்க ஆட்சியை காக்க இடைவிடாது தலையீடு செய்யும் இந்தியத் துணைக் கண்ட முதலாளி வர்க்கத்துக்கும், இந்த முதலாளி வர்க்கங்கள் அணிதிரட்டும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் ஒன்றிணைந்து தொடுக்க வேண்டிய ஒரு போராட்டமாகும் . இதை நீண்டகாலப் போராட்ட படிப்பினைகள் உக்கிரமான முறையில் நிரூபித்துள்ளன. தமிழ்-சிங்கள தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர் -ஒடுக்கப்படும் மக்கள் அனைத்துலக சோசலிச முன்னோக்கின் அடிப்படையில் ஸ்தாபிதம் செய்யப்படும் இந்தியத் துணைக்கண்ட சோசலிசக் குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக ஈழம்-சிறீலங்கா சோசலிச குடியரசு ஒன்றியத்தை அமைப்பதன் மூலம் மட்டுமே ஒன்றுபட்டு வாழ முடியும்.

பொதுஜன முன்னணி-யூ.என்.பி.இனவாத யுத்தமும் விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதமும் சிங்கள-தமிழ் முதலாளிகளின் பிற்போக்கு அணிதிரள்வும் இரு தேசிய இனங்களதும் பொதுமக்களை ஒடுக்கித் தள்ளி, சர்வாதிகார ஆட்சிக்கு உள்ளாக்கி ஏகாதிபத்திய சுரண்டலின் அடிமைகளாக மாற்றும் வேலைத் திட்டமாகும்.


பகிரங்க விரிவுரை

**ஜே.வீ.பி: தீவிரவாதத்தில் இருந்து பாசிசம் வரை**

**(புதிய கம்கறு மாவத்த வெளியீடு)**

**அட்டன் நகரசபை மண்டபம்**

**ஆகஸ்ட் 10 காலை 10 மணி**

சோசலிச சமத்துவக் கட்சி,

இளம் சோசலிஸ்டுகள்


படிப்பகம்

www.padippakam.com

# குஜ்ரால் அரசாங்கம் நூலிழையில் தொங்குகின்றது

தீபால் ஜயசேகர



குஜ்ரால்



லல்லு யதேவ்

பிரதமர் குஜ்ராலின் ஜனதா தளம் கட்சியின் முன்னாள் தலைவர் பிரஷாத் யாதேவ் ஆதரவாளர்களுடன் ' கட்சியில் இருந்து பிரிந்தது அரசாங்கத்துக்கு நெருக்கடியை உருவாக்கி உள்ளது. ஜூலை 3 ம் திகதி நடைபெற்ற கட்சி தலைவர் தெரிவுக்கான தேர்தலைப் பகிஷ்கரித்த பிரஷாத் யாதேவும் ஆதரவாளர்களும் ஜூலை 5ம் திகதி ராஸ்திரிய ஜனதா தாள் என்ற பெயரில் ஒரு புதிய கட்சியை அமைத்துக் கொண்டுள்ளனர். இவரின் எதிர்ப்பாளரான ஷராத் யாதவ் தேர்தலில் ஜனதா தாள் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவானார். ஷராத் யாதேவின் ஆதரவாளர்கள் அவரின் வாய்ப்புக்காக வாக்காளர் பட்டியலை மோசடி செய்துள்ளதாகக் கூறி, லல்லு யாதவும் ஆதரவாளர்களும் இந்தத் தேர்தலை பகிஷ்கரித்து இருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

இன்றைய இந்திய பிரதமர் குஜ்ராலின் பாராளுமன்ற அங்கத்தவர்கள் 45 பேரில் 18 பேரும் அமைச்சர்கள் 3 பேரும் லல்லு யாதேவின் கட்சிக்குச் சென்றுள்ளனர்.தமது கட்சி தொடர்ந்தும் குஜ்ராலின் அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வரும் என யாதேவ் கூறிக்கொண்டாலும் அது அரசாங்கம் இன்று முகம் கொடுக்கும் ஈடாட்ட நிலைமையைப் போக்குவதில் வெற்றி பெறவில்லை. உண்மையில் குஜ்ரால் அரசாங்கத்தின் நாட்கள் விரல்விட்டு எண்ணப்பட்டு வருகின்றது.

பீஹார் மாநில முதல் அமைச்சரான லல்லு யாதவ் கால்நடை உணவு கொள்முதல் தொடர்பாக 280 மில்லியன் டாலர்களை மோசடி செய்தார் என்ற வழக்கில் முக்கிய குற்றவாளியாக இருந்து வருகின்றார். அது தொடர்பாக அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு சீ.பீ.ஐ. அரசியலமைப்புச் சட்டத்தின் படி பீஹார் ஆளுனரின் அங்கீகாரத்தைச் சமீபத்தில் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டின் எதிரில் அவர் முதல் அமைச்சர் பதிவியில இருந்தும் ஜனதா தாள் தலைவர் பதவியில் இருந்தும் இராஜினாமாச் செய்ய வேண்டும் என அரசாங்க, எதிர்க்கட்சியைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் விடுத்த வேண்டுகோளை அடியோடு நிராகரித்த யாதவ், சீ.பி.ஐ.அமைப்பினை அரசியல் கைத்தேங்காய் எனக் குற்றம் சாட்டினார்.

குஜ்ரால் அரசாங்கத்துக்கு தாம் தொடர்ந்து ஆதரவளிக்கப் போவதாக காங்கிரஸ் கட்சியினர் முன்னர் அறிவித்திருந்த போதிலும் இன்று அரசாங்கக் கட்சியினுள் இடம்பெற்றுள்ள பிளவினால் முடிந்தால் தமது கட்சி அரசாங்கத்தினை அமைக்க முயன்று கொண்டுள்ளனர். ஜனதா தாள் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ள ஒரு நிலைமையில் காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர்களை புது டில்லிக்கு அழைத்த காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி இது தொடர்பாக தாம் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறை தொடர்பாகக் கலந்துரையாடி உள்ளார்.லால் யாதேவின் புதிய கட்சியுடன் சேர்ந்து புதுடில்லியில் அரசாங்கம் அமைக்க சீதாராம் கேசரி கணக்குப் பார்த்துக் கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. பீஹார் மாநில அரசாங்கத்தில் ஜனதா தாள் அங்கத்தவர்களில் குறைந்தது 50 பேர் தன்னும் லல்லு யாதவுக்கு எதிராக இருந்து வரும் ஒரு நிலையில் பீஹாரில் தொடர்ந்தும் யாதேவ் அரசாங்கத்தை வைத்திருக்க காங்கிரஸ் ஆதரவு அளிப்பதும் அதற்குச் சன்மானமாக புதுடில்லியில் புதிய ஒரு காங்கிரஸ் அரசாங்கத்தை அமைக்க யாதேவின் ஆதரவு கிடைப்பதும் இடம்பெறலாம் என முதலாளித்துவ அரசியல் விமர்சகர்கள் மதிப்பிட்டுக் கொண்டுள்ளனர்.

இன்றைய ஆளும் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த ஸ்டாலினிச கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சீபீஐ)யும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி( மார்க்சிஸ்ட்)யும் யாதேவின் புதிய கட்சியில் சேர்ந்த மூன்று அமைச்சர்களையும் அரசாங்கத்தில் இருந்து விலக்க வேண்டும் எனவும் புதிய கட்சியை ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் சேர்க்கக் கூடாது எனவும் கூறிவருகின்றன. எனினும் ஜூலை 14ம் திகதி ஒளிபரப்பப்பட்ட இந்திய தூரதர்ஷன் பேட்டியில் பிரதமர் குஷ்ரால் அந்த மூன்று அமைச்சர்களையும் விலக்கப் போவதில்லை எனவும் அத்தோடு புதிய கட்சியையும் முன்னணியினுள் சேர்த்துக் கொள்ளப் போவதாகத் தெரிவித்தார். அப்படிச் செய்யாது போனால் யாதேவின் கட்சி காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து தமது அரசாங்கத்தை உடைத்துவிடக் கூடும் என்பதையிட்டு குஜ்ரால் பீதி கொண்டுள்ளார். இந்நிலையில் தி.மு.க,வும் தமது ஆதரவை விலக்கிக் கொண்டுள்ளது.

இந்த விதத்தில் ஜனதா தாள் உள்ளேயான பிளவு ஆளும் ஐக்கிய முன்னணியினுள் குத்துவெட்டுக்களை மேலும் உக்கிரமாக்கியுள்ளது. இந்நிலையில் குஜ்ராலின் ஆளுமை பெருமளவுக்கு ஈடாட்டம் கண்டுபோயுள்ளது.

## பீ.ஜே.பி.யின் தயாரிப்பு

இந்து சோவினிச பாரதீய ஜனதா கட்சி அரசாங்க நெருக்கடியைப் பாவித்து, மத்திய அரசாங்க ஆட்சியைத் தட்டிக்கொள்ளப் பார்த்து வருகின்றது.ஐக்கிய முன்னணியுடன் காங்கிரஸ் கட்சிக் காரர்களும் குழம்பிப்போயுள்ள ஒரு நிலைமையில் ஒரு தேர்தலில் தாம் அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனக் கணக்குப் போட்டுக் கொண்டுள்ள பீ.ஜே.பி. குஜ்ரால் இராஜினாமாச் செய்து தேர்தலை நடாத்த வேண்டும் எனப் பிரச்சாரம் செய்து வருகின்றது."பிரதமருக்கு ஆட்சி செய்யும் தார்மீக உரிமை இல்லாது போயுள்ளது . தலையெடுப்பதற்கான ஒரே வழி புதிய தேர்தலே" என பீ.ஜே.பி.தலைவரான யஷ்வந் சிங் தெரிவித்துள்ளார்.

இன்றைய அரசியல் நெருக்கடி குஜ்ராலின் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் நடைமுறைக்கிடப்படும் ஏகாதிபத்தியச் சார்பு பொருளாதார வேலைத்திட்டத்தினை ஸ்தம்பிக்கச் செய்து விடுமோ என்பதையிட்டு முதலாளிகள் கலக்கம் அடைந்துள்ளனர். எண்ணெய் உபமானியத்தை வெட்டியும் எண்ணெய் விலையை மேலும் உயர்த்துவதும் தொடர்பாக கலந்துரையாட ஐக்கிய முன்னணியின் நடவடிக்கைக் குழு இரண்டாம் தடவையாகக் கூடிய போதிலும் அது தொடர்பாக தீர்மானம் செய்ய முடியாது போய்விட்டது. இன்றைய அரசியல் நெருக்கடியினால் ஜூலை 8ம் திகதி கூடிய நடவடிக்கைக் குழு இரத்துச் செய்யப்பட நேரிட்டது.

"உதவிமானியம் வழங்குவது ஏழைகளின் பெயரிலாகும். ஆனால் அவை எந்த ஒரு ஏழையையும் சென்றடைவது கிடையாது" எனவும் ஆதலால் மானியங்களை வெட்ட வேண்டும் எனவும் மாஜி.காங்கிரஸ் நிதி அமைச்சர் மன்மோகன் சிங் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார். இன்றைய நிதி அமைச்சர் மே மாதத்தில் உதவி மானியம் பற்றிய "தேசிய விவாதத்துக்கு" அழைப்பு விடுத்திருந்தார். அதில் மாஜி .நிதி அமைச்சர் மேற்கண்டவாறு கலந்து கொண்டார்.

அரசுடமையான கம்பனி பங்குகளில் நாலில் ஒரு பகுதியை விற்றுத் தள்ளப்போவதாக அரசாங்கம் ஜூலை 5ம் திகதி அறிவித்தது. இதன் மூலம் 1998 நிதி ஆண்டின் இறுதியில் 1.4 பில்லியன் டாலர்களை சம்பாதிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் பங்குகளில் 20 மில்லியன்களையும் இந்தியன் எரிவாயு அதிகார சபையின் பங்குகளில் நூற்றுக்கு 25 வீதத்தினை அல்லது 210 மில்லியன் பங்குகளையும் டெலிபோன் லிமிடெட்டின் பங்குகளில் அரசுக்குரியவற்றில் நூற்றுக்கு 49 வீதத்தினையும் இந்தியன் கொன்டேனர் கூட்டுத்தாபனத்தின் பங்குகளில் 6 மில்லியன் பங்குகளை இதே முறையில் விற்றுத் தள்ளவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

## அரசியல் நெருக்கடி

இதன் மூலம் ஐக்கிய முன்னணி அரசாங்கம் காட்டிக் கொள்வது என்ன? இன்றைய அரசியல் நெருக்கடியைப் பொருட்படுத்தாமல் பொருளாதாரச் சீர்திருத்த வேலைத்திட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும் என்பதைக் காட்டிக் கொண்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் எந்த ஒரு அரசாங்கத்துக்கும் தெளிவான பெரும்பான்மை கிடைக்காத ஒரு நிலைமையில் புது டில்லி அரசாங்கம் , காங்கிரஸ் முதலாளிகள் அரசாங்கத்துக்கு வெளியில் இருந்து கொண்டு வழங்கும் முண்டில் முழுமனே தங்கியுள்ளது என்பது தெளிவாகியுள்ளது. ஸ்டாலினிஸ்டுகளையும் பல்வேறு மாநிலக் கட்சிகளையும் கொண்டே ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்டது. கடந்த மார்ச் 30ம் திகதி காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொண்டதுடன் தேவ கௌடாவின் அரசாங்கம் வீழ்ச்சி கண்டதுடன் ஏப்பிரல் 21ம் திகதி ஜனதா தாள் கட்சியின் குஜ்ரால் தலைமையில் இன்றைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. எனினும் இரண்டு மாதங்களும் இரண்டு வாரங்களும் கழிவதற்குள் ஆளும் ஜனதா தாள் கட்சி இரண்டாகப் பிளவுபட்டதோடு குஜ்ரால் அரசாங்கம் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளது.

## தற்செயலானதல்ல

இன்று வெடித்தள்ள நெருக்கடி லல்லு யாதேவின் தன்னிச்சையான நடவடிக்கைகளால் தலையெடுத்தது அல்ல. இது முழு இந்திய முதலாளி வர்க்கத்தினையும் பீடித்துள்ள அரசியல் நெருக்கடியின் பரிமாணத்தை உயர்ந்த மட்டத்தில் படம்பிடித்துக் காட்டுகின்றது.ஐக்கிய முன்னணியின் கட்சிகளுக்கும் காங்கிரசுக்கும் பீ.ஜே.பி.க்கும் இடையே பல்வேறு குத்துவெட்டுக்கள் இருந்த போதிலும் ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள், வங்கிகள் கட்டளையிடும் விதத்தில் அனைத்துலக மூலதனத்தின் சுரண்டலுக்கான நிலைமைகளை நாட்டினுள் சிருஷ்டிப்பது தொடர்பாக இவை அனைத்தும் இணைந்து கொண்டுள்ளன.

நாட்டை ஏகாதிபத்திய மூலதனத்துக்குத் திறந்துவிடும் திட்டத்தின் கீழ் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தொடுத்து வரும் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. அந்நிலையில் அந்த பொதுமக்கள் இயக்கத்தினை நசுக்கித் தள்ளி, தமது ஏகாதிபத்தியச் சார்பு பொருளாதார சீர்திருத்தத்தினை முன்னெடுப்பது எப்படி என்பதே அரசாங்கமும் முழு முதலாளி வர்க்கமும் இன்று முகம் கொடுத்துள்ள நெருக்கடியாகும்.கௌடாவும் அவ்வாறே குஜ்ராலின் அரசாங்கமும் இந்தப் பொருளாதார திட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருந்தாலும் அதன் வேகம் தொடர்பாக உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எதுவிதத்திலும் திருப்தியடைவதாய் இல்லை. சீர்திருத்தங்களைதப் பெரிதும் விரைவுபடுத்த வேண்டும். தமது முதலீடுகளுக்குப் பெரும் இலாபத்தைக் கறந்து கொள்ளும் நிலைமை உருவாக்கப்பட வேண்டும். காட்டுமிராண்டி சுரண்டலுக்கு எதிராக வெடிக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டங்களை மிலேச்சமான முறையில் நசுக்க வேண்டும். இவைதான் முதலீட்டாளர்கள் இந்திய அரசாங்கத்துக்கு விடுக்கும் கட்டளைகள். இல்லையேல் உலகில் வாய்ப்பான நிலைமைகள் இருந்து வரும் வேறு நாடுகளுக்கு முதலீடுகளைக் கொண்டு செல்லப் போவதாக இவர்கள் புது டில்லி அரசாங்கத்தை மிரட்டி வருகின்றார்கள்.

## ஸ்டாலினிஸ்டுகள்

முதலாளித்துவ வர்க்க ஆட்சி முகம் கொடுக்கும் நெருக்கடியின் மத்தியில் அதைக் கட்டிக் காப்பதில் முக்கிய பாத்திரத்தினை ஸ்டாலினிஸ்டுகள் வகிக்கின்றார்கள்.ஏப்பிரல் மாதத்தில் உருவான அரசாங்க நெருக்கடியின் போது ஐக்கிய முன்னணியின் கட்சிகளுடனும் காங்கிரஸ் தலைவர்களுடனும் ஸ்டாலினிசக் கட்சிகளின் தலைவர்கள் ஓய்வு ஒழிச்சலின்றிச் செயற்பட்டனர். அவர்கள் இத்தடவை அதே விதத்தில் இரகசிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் அதே வேளையில் லல்லு யாதேவின் கட்சியை முன்னணிக்குள் சேர்த்துக் கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அதே வேளையில் தமக்கும் குஜ்ராலுடன் கருத்துவேறுபாடுகள் இருப்பதாக காட்டிக் கொள்ளப் பார்க்கின்றனர்.

உண்மையில் இந்திய ஸ்டாலினிஸ்ட் கட்சிகளுக்கு குஜ்ரால் அரசாங்கத்தின் ஏகாதிபத்தியச் சார்பு பொருளாதாரக் கொள்கை தொடர்பாக எந்தவிதமான மூலோபாயக் கருத்து வேறுபாடும் கிடையாது . ஊழல் சகதியில் சிக்கிக் கொண்டுள்ள லல்லு யாதேவினை முன்னணியில சேர்த்துக் கொள்வதானது முன்னணியின் பேரிலான பொதுமக்களின் கொதிப்பை மேலும் உக்கிரமடையச் செய்யும் என்பதையிட்டே ஸ்டாலினிஸ்டுகள் கவலை கொண்டுள்ளனர்.

ஆளும் வர்க்கம் மோசமான அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள நிலையில் அதன் பலனை அடையத் தொழிலாளர் வர்க்கம் சுயாதீனமான அரசியல் கிளர்ச்சியில் இறங்குவதை தடுத்துக் கொண்டு இருப்பவர்கள் ஸ்டாலினிஸ்டுகளே.அது பீ.ஜே.பி. யினதும் அதன் பாசிச சகபாடியான சிவசேனை போன்ற வலதுசாரிகளதும் நிழலைப் பலப்படுத்துகின்றது. இந்த நிலைமை தொழிலாளர் வர்க்கத்துக்கும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் மிகவும் ஆபத்தானது.

ஸ்டாலினிஸ்டுகளின் துரோகச் செயற்பாட்டுக்கு எதிராகப் போராடி இந்தியாவின் தொழிலாளர் வர்க்கத்துக்கும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் சுயாதீன முன்வழியைக் காட்டுவது ட்ரொட்ஸ்கிச சோசலிசத் தொழிலாளர் கழகமேயாகும். அது முதலாளித்துவ அமைப்பைத் தூக்கி வீசி, சோசலிச வேலைத்திட்டத்துக்குச் சபதம் பூண்ட தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்கும் முன்நோக்குடனும் வேலைத் திட்டத்துடனும் போராடுகின்றது.சோ.தொ.க. இலங்கையின் தனது தோழமை இயக்கமான சோசலிச சமத்துவக் கட்சியுடன் சேர்ந்து இந்தியத் துணைக்கண்ட சோசலிசக் குடியரசினைக் கட்டியெழுப்ப போராடுகின்றது.

படிப்பகம்

www.padippakam.com

## ஹொங்கொங் சீனாவிடம் கையளிப்பு:

# பீகிங் அனைத்துலக மூலதனத்தின் பொலிஸ்காரன்

ஜூலை 1ம் திகதி பிரிததானியக் காலனியான ஹொங்கொங் சீனாவிடம் கையளிக்கப்பட்டமை ஒரு அனைத்துலக சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாகும். வெளியேறிச் செல்லும் பிரித்தானிய ஆளுனருக்குப் பதிலாக சீனாவினால் நியமனம் செய்யப்பட்ட துங்-சீ-குவா பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றுவார். சீனாவின் படைகள் மங்கள வாத்தியங்களை முழங்கவும் தேசியக் கொடி ஏறவும் வைபவ ரீதியில் அங்கிருந்து வெளியேறும் கடைசி பிரித்தானியப் படைகளுக்குப் பதிலாக சீனப்படைகள் இடம்பிடித்துக் கொள்ளும்.ஆனால் அங்கு வேறு எதுவும் மாறப் போவதில்லை. சீன ஸ்டாலினிச ஆட்சியின் வர்க்கத் தன்மையும் அது ஏகாதிபத்தியத்துடன் கொண்டிருந்த நேரடி ஒத்துழைப்பும் சீனாவின் உள்ளான பாரிய சந்தைக்குள் மலிவான உழைப்பு, சந்தை வளங்களை சுரண்டிக் கொள்ள ஹொங்கொங் உலக முதலாளித்துவத்துக்கு இடமளிக்கப் போவதை நன்கு காட்டிக் கொண்டுள்ளது.

156 வருடகால பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட சமூக, பொருளாதார உறவுகளில் கைவைக்கப்பட மாட்டாது. ஹொங்கொங் தொடர்ந்தும் ஒரு முதலாளித்துவ களமாகவும் உலகின் ஒரு பெரும் வர்த்தக நிலையமாகவும் ஒரு முன்னணி அனைத்துலக நிதி மையமாகவும் தொடர்ந்தும் இருந்துவரும்.1984ல் சீன-பிரித்தானிய கூட்டு பிரகடனம் கைச்சாத்தான போது பீகிங் குறைந்த பட்சம் 50 ஆண்டுகளுக்கேனும் தனிச் சொத்துடமையையும் வர்த்தக சொத்துடமையையும் வெளிநாட்டு முதலீட்டையும் காக்க உத்தரவாதம் அளித்தது. ஹொங்கொங் சீனாவுடனான அதன் எல்லையைத் தொடர்ந்தும் கொண்டிருக்கும்.அது தனக்கேவுயுரித்தான சட்டங்கள், கடவுச்சீட்டுக்கள், அனைத்துலக உடன்படிக்கைகளைக் கொண்டு ஒரு சிறப்பு நிர்வாகப் பிராந்தியமாக ஆளப்பட்டுவரும்.ஹொங்கொங் அமெரிக்க டாலருடன் பிணைக்கப்பட்ட ஒரு முற்றிலும் மாற்றத்தக்க நாணயத்தையும் கொண்டிருக்கும்.

ஹொங்கொங் ஒரு பிரித்தானியக் காலனியாகத் தொடர்ந்தும் இருந்து வந்தமை சீன மக்கள் ஏகாதிபத்தியச் ச்க்திகளால் நீண்டதும் உக்கிரமானதுமான ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வந்துள்ளமைக்கான ஒரு வரலாற்று வெளிப்பாடாகும்.

இன்றைய ஹொங்கொங்கின் கையேற்பு காலனித்துவ மேலாதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாக பீகிங் கூறிக் கொள்வது ஹொங்கொங், சீன பாட்டாளி வர்க்கத்தின் நிஜ புரட்சிகர போராட்டங்களை-குறிப்பாக 1920களில் இடம்பெற்ற போராட்டங்களை அவமானம் செய்கின்றது.

### மாஓசேதுங்

மாஓசேதுங் தலைமையிலான சீன ஆட்சியாளர்கள் ஹொங்கொங் பிரித்தானிய ஆதிக்கத்துக்கு உட்பட்டு இருப்பதை ஒரு போதும் நிஜமான முறையில் சவால் செய்தது கிடையாது. 1966ல் கலாசாரப் புரட்சியின் உச்சக் கட்டத்தில் செங்காவலர்கள் பீகிங்கில் பிரித்தானியக் கொடியை எரித்த போது ஹொங்கொங்கில் மாஓ ஆதரவாளர்கள் அரசாங்க இல்லத்துக்கு வெளியே பெருமளவுக்கு அமைதியானதும் ஒழுங்குமுறையானதுமான எதிர்ப்புக்களுடன் நின்று கொண்டார்கள். சீனா பிரித்தானியா ஹொங்கொங்கை ஒரு காலனித்துவ களமாகக் கொண்டிருக்கவும் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கான சாதனங்களை வழங்கவும் அருமையான வெளிநாட்டு நாணயக் கையிருப்புகளை கட்டியெழுப்பவும் அனுமதி வழங்கியது.

பீகிங் ஆட்சியாளர்கள் முதலாளித்துவ ஹொங்கொங்குடன் நடாத்திவந்த சகவாழ்வானது அவர்களது வர்க்கத் தன்மையை தெளிவுபடுத்தி உள்ளது. 1949ல் மாஓவையும் அவரது விவசாயிகள் இராணுவத்தையும் ஆட்சிக்கு கொணர்ந்த திருப்பமானது ஒரு போதும் ஒரு பாட்டாளி வர்க்க புரட்சியாக இருக்கவில்லை. ஊழலும் எதிர்ப்புரட்சியும் நிறைந்த சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவம் கூட இரண்டாம் உலக் யுத்தத்தின் பின்னர் கிழக்கு ஐரோப்பாவில் முதலாளித்துவ சொத்து உறவுகளை மாற்றிவிட இறுதியில் நெருக்கப்பட்டது. ஏனெனில் அது இன்னமும் மோசமான விதத்தில் சீரழிந்து போன ஒரு தொழிலாளர் அரசின் அத்திவாரத்தில் நின்று கொண்டிருந்ததே அதற்குக் காரணமாகும். எவ்வாறெனினும் ஹொங்கொங்கின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்பதன் மூலம் மாஓவாதிகள் தனியார் சொத்துடமை உரிமைகளை "ஒரு நாடு இரண்டு அமைப்பு" என்ற திட்டத்தின் கீழ் உத்தரவாதம் செய்ய விரும்புவதற்கும் அப்பால் சென்றுள்ளனர்.

1972ல் அமெரிக்க ஜனாதிபதி நிக்சனுக்கும் மாஓவுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளின் பின்னரே பிரித்தானியா ஹொங்கொங்கின் எதிர்காலம் பற்றி முதலில் மறுபரிசீலனை செய்தது. அமெரிக்கா "ஒரு சீனா" என அங்கீகரித்தமை ஆசியாவில் ஏகாதிபத்தியக் கொள்கைகளில் ஒரு அடிப்படையான பெயர்ச்சியை ஏற்படுத்தியதோடு ஹொங்கொங்கும் மகுவும் தாய்வானும் தொடர்ந்து சுதந்திரமாக நின்றுவருவதற்கு குழிபறித்தது. அதே ஆண்டில் பிரித்தானியா சீனாவுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண்டதும் எட்வேட் ஹீத் தலைமையிலான டோரி அரசாங்கம் ஹொங்கொங்கை இறுதியாக சீனாவிடம் கையளித்து விடுவதற்கான முதலாவது வழக்காறற்ற உத்தரவாதத்தினை வழங்கியது.

### தட்ச்சர் அரசாங்கம்

1979ல் தட்ச்சர் அரசாங்கத்தின் கீழ் மேலும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இருப்பினும் அது அதிகாரத்தை ஸ்டாலினிஸ்டுகளிடம் ஒப்படைப்பதை ஆரம்பத்தில் எதிர்த்தது. ஆனால் சீனத் தலைவர் டெங்ஷியாவோபிங் 1970பதுகளின் கடைப்பகுதியில் சீனாவை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு திறந்து விட்டு நாட்டின் தேசியமயமாக்கப்பட்ட சொத்து உறவுகளை பாதிக்கச் செய்ததும் டோரிகள் சீனாவில் பிரித்தானிய மூலதனத்துக்கு உருவாகிவரும் பெரிதும் இலாபகரமான வாய்ப்பினை இனங்கண்டனர். பேச்சுவார்த்தைகள் 1984 உடன்படிக்கையுடன் உச்சக்கட்டத்தை அடைந்தன.அது சீனாவினுள் முதலீட்டுக்கும் வர்த்தகத்துக்குமான முக்கிய படிக்கல்லாக ஹொங்கொங் மாறப் போவதை ஊர்ஜிதம் செய்தது.

ஹொங்கொங்கில் அரசியல் நடவடிக்கைகள் மீது சீனா தடை விதிப்பதற்கு எதிரான இராஜதந்திர ஆட்சேபனைகள் அனைத்தும் முற்றிலும் வேஷம் நிறைந்தவை. ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலம் பிரித்தானியா மிகவும் ஆரம்ப நிலையிலான மக்கள் பிரதிநிதித்துவத்தைத் தன்னும் வழங்க மறுத்தது. வேலைநிறுத்தங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நசுக்கியது.

ஜூன் 23ம் திகதிய நியூஸ்வீக் சஞ்சிகையில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மேட்லின் அல்பிரைட் ஜனநாயக உரிமைகளுக்கான இன்றைய பிரச்சார இயக்கத்தின் நிஜ இலக்கினை அம்பலப்படுத்தினார்: "சிவில் சுதந்திரங்களை காக்காமல் ஹொங்கொங்கின் வாழ்க்கை முறையினைக் காப்பது சாத்தியம் இல்லை. ஜனநாயகம் அடக்கப்பட்டால் முதலீட்டாளர் நம்பிக்கை தொடராது. ஹொங்கொங்கின் வெற்றி பொருளாதார, அரசியல் திறந்த மனப்பான்மை இரண்டிலும் தங்கியுள்ளது." என்றார்.

மறுவார்த்தையில் சொன்னால் அமெரிக்காவுக்கு ஹொங்கொங்கின் சாதாரண தொழிலாளர்களின் உரிமைகளையிட்டு அக்கறை கிடையாது. தனிப்பட்ட முதலீட்டாளர்களின் உரிமைகளை காப்பதிலேயே அக்கறை கொண்டுள்ளது. ஜனநாயகத்துக்கான அழைப்பின் இலக்கு ஹொங்கொங்கிலும் சீனாவிலும் தடையற்ற பொருளாதார பாதைக்கு மேலும் சலுகைகளையும் உத்தரவாதங்களையும் வழங்கும்படி நெருக்குவதேயாகும்.

'ஜனநாயக உரிமைகள் தொடர்பான தமது எதிர்ப்புக்களுக்கு இடையேயும் சகல பெரும் வல்லரசுகளும் ஜூலை 1ம் திகதி ஹொங்கொங் கையளிப்பு விழாவில் தமது சிரேஷ்ட பிரதிநிதிகளைக் கலந்து கொள்ள வைத்தும் வாழ்த்துக்களை வழங்கியும் உள்ளனர். என்னதான் கருத்துவேறுபாடுகள் இருந்த போதிலும் அவர்கள் அனைவரும் ஹொங்கொங்-சீன எல்லையின் இருபுறத்திலும் தொடர்ந்து தொழிலாளர் வர்க்கத்தினை சுரண்டுவதை உக்கிரமாக்குவதில் பரஸ்பரம் அக்கறை கொண்டுள்ளதை அங்கீகரிக்கின்றனர்.



சீனாவில் வேலையற்றவர்களின் கியூ

# செல்லையா இராஜ்குமார்...

1ம் பக்கத் தொடர்ச்சி

சுமார் 200 மக்கள் அவரை உத்சாகத்துடன் வரவேற்றனர் . தமது விடுதலையின் பேரில் சோ.ச.க.நடாத்திய போராட்டத்தினை சுருக்கமாகக் குறிப்பிட்ட இராஜ்குமார் ஒடுக்கப்படும் மக்கள் சார்பாக போராடும் இக்கட்சியை கட்டியெழுப்ப வேண்டும்" என வலியுறுத்தினார்.

1996 ஜூன் 13ம் திகதி தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தினதும் வேட்டையினதும் ஒரு பாகமாக இராஜ்குமார் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டார். வவுனியாவுக்கு பயணம் செய்து கொண்டிருக்கையில் வழிமாறிப் போன நிலையில் அவர் கைதானார். அவரின் ஆளடையாளம் நிரூபிக்கப்பட்ட போதிலும் அதை ஏற்க மறுத்த பொலிசார் கூட்டில் தள்ளி சித்திரவதை செய்தனர். சோசலிச சமத்துவக் கட்சிக்கு நிலைமையை அறிவிக்கும் கடிதம் ஒன்றை அனுப்பிவைக்க இராஜ்குமார் எடுத்த முயற்சி வெற்றி கண்டதால் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையம் தெரியவந்தது. சோ.ச.க. பொதுச் செயலாளர் விஜே டயஸ் இராஜ்குமார் விடுதலைப் புலிகள் அமைப்பின் சந்தேக நபர் என்ற குற்றச்சாட்டுக்கு எதிராக அவர் தமது கட்சி அங்கத்தவர் என்ற சத்தியக் கடதாசியை சமர்ப்பித்த போதிலும் தொடர்ந்தும் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டார்.

அனைத்துலகக் குழுவும் சோ.ச.க.வும் தொடுத்த பிரச்சாரத்தினால் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாகக் கைது செய்யப்பட்ட ஏனைய தமிழ் தேசிய இனத்தினருக்கு ஏற்பட்ட தலைவிதியை இராஜ்குமாருக்கும் உருவாக்குவதில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஒடுக்குமுறை இயந்திரம் வெற்றி பெறவில்லை. ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் இராஜ்குமாரை உடன் விடுதலை செய்யும்படி நெருக்கியும் கைது செய்ததை கண்டனம் செய்தும் நூற்றுக்கணக்கான கடிதங்களும் பெட்டிசங்களும் அனுப்பப்பட்டன. அவர் சோ.ச.க. அங்கத்தவர் எனத் தெரிய வந்ததன் பின்னரும் அவரை விடுதலை செய்யாததற்கு நனவான அரசியல் தீர்மானமே காரணம்.

பொலிசார் சித்திரவதைகள் மூலம் இராஜ்குமாரிடம் இருந்து பொய் வாக்குமூலங்களை பெற்றுக் கொள்ள முயன்ற போதும் அவை சரிப்பட்டு வரவில்லை. அவருக்கு எதிராக எந்தவிதமான குற்றச்சாட்டையும் சோடிக்க முடியாது போனதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சு குற்றச்சாட்டு எதுவும் இல்லாத குற்றவாளியான இராஜ்குமாரை பண்டாரவளை பிந்துனுவவை மூளைச் சலவை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பியது.

1996 டிசம்பர் திகதி புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டதில் இருந்து இராஜ்குமாரை பார்வையிட பாதுகாப்பு அமைச்சு சோசலிச சமத்துவக் கட்சிக்கும் அங்கத்தவர்களுக்கும் அனுமதி மறுத்துவிட்டது. அரசாங்கத்தின் புனர்வாழ்வின் இலட்சணத்தை இது அம்பலப்படுத்தியது. இராஜ்குமாரின் பேரில் சோ.ச.க.தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவை விசாரணைக்கு எடுப்பதை நீதிமன்றம் தொடர்ந்து ஒத்திப்போட்டு வந்தது. சோ.ச.க. சட்டத்தரணியும், கட்சிப் பிரதிநிதியும் இராஜ்குமாரை முகாமில் பார்வையிடும் வாய்ப்பு அவர் விடுதலையாவதற்கு ஒரு கிழமைக்கு முன்னரே கிடைத்தது என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இனவாத யுத்தத்தின் படுகொடூரமான அழிவுகளுக்குள் தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் நசுக்கப்பட்டு வரும் நிலைமையில் சோ.ச.க.அங்கத்தவரைக் காக்கவும் விடுதலை செய்யவும் இடம்பெற்ற பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவு தந்த சகலருக்கும் நாம் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அனைத்துலக குழுவின் தோழமைப் பகுதிகளுக்கும் அதன் பிரச்சார நடவடிக்கைகளில் பங்கு கொண்ட சகலருக்கும் சோ.ச.க. தோழமை வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

இப்பிரச்சாரத்தின் போது சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் சோசலிச சமத்துவக் கட்சியினதும் இராஜ்குமாரினதும் ஜனநாயக உரிமைகளைக் காக்க சின்னி விரலைத் தன்னும் உயர்த்த மறுத்துவிட்டன. உண்மையில் இக்கட்சிகள் ஜனநாயக உரிமைகளைத் துவம்சம் செய்யும் முதலாளிகளுடன் சேர்ந்து இயங்குபவை என்பது இதன்மூலம் மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கப்பட்டுள்ளது.

இராஜ்குமார் விடுதலை செய்யப்பட்ட போதிலும் அவரைக் கைது செய்தமையும் ஒரு சோசலிஸ்டாக அவரின் ஆளடையாளம் நிரூபிக்கப்பட்ட நிலையிலும் அவர் தொடர்ந்து 13 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டமையும் தொழிலாளர் வர்க்கத்தின் ஜனநாயக உரிமைகளை சர்வாதிகார ஆட்சிக்கு கீழ்ப்படுத்தும் ஆளும் வர்க்கத்தின் தயாரிப்புக்கு ஒரு கண்டிப்பான எச்சரிக்கையாகும். சோசலிச சமத்துவக் கட்சி தொழிலாளர் வர்க்கத்துக்கு அனைத்துலக சோசலிச வேலைத் திட்டத்தை முன்வைக்கும் ஒரே அமைப்பாக இருப்பது பொதுஜன முன்னணி அரசாங்கம் உட்பட்ட முழு ஆளும் வர்க்கத்தின் கொதிப்புக்கு பாத்திரமாகியுள்ளது.

தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைக் காக்கச் சபதம் பூண்ட அனைத்துலகக் கட்சி சோசலிச சமத்துவக் கட்சி மட்டுமே.

படிப்பகம்

www.padippakam.com

# ஜனதா விமுக்தி பெரமுனை: தீவிரவாதத்தில் இருந்து பாசிசம் வரை

## சோ.ச.க. கருத்தரங்கம் வெற்றி

சோசலிச சமத்துவக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் கம்கறு மாவத்த ஆசிரியருமான கே.ரத்னாயக்க எழுதிய ஜனதா விமுக்தி பெரமுன: தீவிரவாதத்தில் இருந்து.பாசிசம் வரை என்ற நூல் பற்றிய ஒரு கருத்தரங்கம் கடந்த ஜூன் 24ம் திகதி கொழும்பு பொதுநூல்நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.


கம்கறு மாவத்த ஆசிரியர் கே.ரத்னாயக்க தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்குக்கு கொழும்பு பல்கலைக்கழக தற்கால வரலாற்று, அரசியல் விஞ்ஞான துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி ஜோர்ஜ் கூரே சிறப்பு விரிவுரையாளராகக் கலந்து கொண்டார். சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் விஜே டயஸ் பிரதான உரையை நிகழ்த்தினார். இக்கருத்தரங்கில் 150க்கும் அதிகமான தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.


சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மாஜி. பொதுச் செயலாளர் தோழர்.கீர்த்தி பாலசூரிய 1970ல் ஜே.வீ.பி.யின் அரசியலும் வர்க்கத் தன்மையும் என்ற தலைப்பில் புகழ்பெற்ற மார்க்சிச ஆய்வுகளைக் கொண்ட கட்டுரைத் தொடரை எழுதினார். அக்காலத்தில் பு.க.க.பத்திரிகையான கம்கறு புவத் பத்திரிகையில் வெளியான இக்கட்டுரைகளைப் பின்னர் நூலாக வெளியிட நடவடிக்கை எடுத்தது. ஜே.வீ.பி. ஒரு பாசிச அமைப்பாக நாற்றம் காணும் என்பதை தோழர்.கீர்த்தி பாலசூரிய தீர்க்கதரிசனமாகக் கண்டார்.

“இன்று நாம் மதிப்பீடு செய்யும் ஜே.வீ.பி. தீவிரவாதத்தில் இருந்து பாசிசம் வரை என்ற நூல் குட்டி முதலாளித்துவ தீவிரவாத அமைப்பாக 1960 பதுகளின் கடைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஜே.வீ.பி.1988-89 அளவில் ஒரு பாசிச அமைப்பாக பரிணாமம் கண்டதைப் பற்றிய ஒரு ஆய்வாகும்.” என கே.ரத்னாயக்க தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்.

தம்மை இக்கருத்தரங்கில் பங்கு கொள்ள அழைத்ததையிட்டு சோ.ச.க.வுக்கு நன்றி தெரிவித்து பேச்சை ஆரம்பித்த கலாநிதி.ஜோர்ஜ் கூரே தாம் சோ.ச.க.வின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தவராக இருந்ததாகவும் இன்று வரையும் சோ.ச.க.வின் ஆதரவாளராக இருந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

பாசிசம் என்பது வெறும் இலங்கையில் மட்டும் உள்ள ஒரு பிரச்சினையாக அல்லாது அது ஒரு உலக தோற்றப்பாடு என்னும் விளக்கத்தை இந்நூல் வழங்குவதாக கலாநிதி கூரே குறிப்பிட்டார். ஜே.வீ.பி.போன்ற குட்டி முதலாளித்துவ இயக்கத்தின் தோற்றத்துக்கு லங்கா சமசமாஜக் கட்சி போன்ற பழைய தொழிலாளர் வர்க்கக் கட்சிகள் ஆற்றிய பாத்திரத்தினை தெளிவுபடுத்துகையில் கூரே பின்வருமாறு குறிப்பிட்டார்:





“1971 ஏப்பிரல் கிளர்ச்சி இடம்பெற்ற நாட்களில் முதிர்ச்சியற்றவனாக இருந்த நான் கொழும்பு பல்கலைக் கழகத்தில் ஒரு விரிவுரையாளனாக கடமையாற்றினேன். அன்று நான் சமசமாஜக் கட்சியின் அங்கத்தவன். பொலிசார் பல்கலைக் கழகத்தை சுற்றி வளைத்து மாணவர்களை கைது செய்யப் போவதாகக் கேள்விப்பட்ட நான் சமசமாஜக் கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு சென்று அதன் தலைவர்களைச் சந்தித்ததோடு அத்தகைய ஒரு நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டேன்.பல்கலைக் கழக விரிவுரையாளர் என்ற முறையில் மாணவர்களைக் காக்க முடிந்த சகலதையும் செய்ய வேண்டும் என்று எண்ணியே அப்படிச் செய்தேன். ஆனால் பற்றி வீரக்கோன் உட்பட்ட சமசமாஜ தலைவர்களின் பதில் “இப்போது அதைப் பற்றி பேச வேண்டாம். சமசமாஜக்காரர்கள் கைது செய்யப்பட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுப்போம்” என்பதேயாகும்.

“1950 பதுகளில் இருந்து இலங்கையின் அரசியல் அபிவிருத்திகளை நோக்கி வந்த நான் ஒரு இளைஞன் என்ற முறையில் சமசமாஜக் கட்சியில் சேர்ந்தது அதன் சில முற்போக்கு தன்மைகள் எனக்கு வெளிப்பட்டதாலாகும். எனினும் நிஜமான ஒரு மார்க்சிச கட்சி என்ற முறையில் சமசமாஜக் கட்சியின் வரலாற்றை (1930-1940 காலப்பகுதி) நான் கற்றது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திடம் இருந்துதான். 1970பதுகளில் கூட்டரசாங்கத்துக்கு கிடைத்த தேர்தல் வெற்றியை நாம் ஒரு மக்கள் வெற்றியெனக் கண்டோம். பின்னர் அமைக்கப்பட்ட மக்கள் கமிட்டிகளில் (Peoples Committee) ஆரம்பத்தில் இடதுசாரி ஈர்ப்பு கொண்டவர்கள் சேர்ந்த போதிலும் பின்னர் யூ.என்.பி.அங்கத்தவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இக்கமிட்டிகளுள் கலந்துரையாடப்பட்டது வேலைநிறுத்தம் உட்பட்ட தொழிலாளர்களின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவது பற்றி அல்ல. அவற்றை நிறுத்துவது பற்றியே. முற்போக்கு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கி “சோசலிசத்தை நோக்கி” செல்வது பற்றியேயாகும்.

“நான் அக்காலத்தில் மொரட்டுவை சமசமாஜக் கட்சி லோக்கலில் (கிளை) அங்கத்தவனாக இருந்தவன். அதன் கூட்டத்துக்கு வந்த பற்றி வீரக்கோன் அப்பகுதிகளில் ஒரு தொழிற்சாலையில் இடம்பெற்றுவந்த வேலைநிறுத்தத்தை முடிந்த மட்டும் விரைவில் நிறுத்திவிட நடவடிக்கை எடுக்கும்படி எமக்கு ஆலோசனை கூறினார்.”

ஜே.வீ.பி.யின் பாசிச குணாம்சங்கள் பற்றிய பிரச்சினையை விளக்குகையில் கூரே ஜேர்மனியில் ஹிட்லரின் இயக்கத்தின் பாசிச பரிணாமங்கள் பற்றிக் கூறியதாவது: பாசிச இயக்கம் எந்த ஒரு சுலோகத்தையும் பயன்படுத்த முடியும். தாய்நாடு இல்லையேல் மரணம் (மவ்பிம நத்னம் மரணய) போன்ற சுலோகங்களை ஜே.வீ.பி.பயன்படுத்தியது. ஹிட்லர் தமது நாசி இயக்கத்துக்கு கூறியது என்னவெனில் எந்த ஒரு பொய்யையும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமானால் அந்தப் பொய்யை இடைவிடாது தொடர்ந்து கூறியாக வேண்டும் என்பதாகும். நாசி பிரச்சார திரைப்படங்களில் நாசி இளைஞர்கள் புகைப் பிடிக்காத, பியர் குடிக்காத இளைஞர்களாகவும் கம்யூனிஸ்ட் இளைஞர்கள் புகைப்பிடித்து பியர் குடிக்கும் ஆட்களாகவும் காட்டப்பட்டனர். அவ்வாறே வன்முறை கலாச்சாரத்துக்கு எதிரானது அல்ல எனவும் அது சீனாவின் கலாச்சாரம் எனவும் அப்படங்களில் காட்டப்பட்டது.” என்றார்.

பாசிச இயக்கங்களின் முக்கிய பண்பான இனவாதம் ஜே.வீ.பி.யினுள் வெளிப்பாடாகிய விதத்தையும் அவர்கள் தமிழ் மக்களை ஒடுக்குவதை அங்கீகரித்ததையும் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பான ஜே.வீ.பி.நிலைப்பாட்டையும் நிதர்சனமாகக் காட்டுகையில் கலாநிதி.கூரே கூறியதாவது: “வர்க்க ரீதியில் பாசிச இயக்கம் எத்தகையது -அதன் குட்டி முதலாளித்துவம் தொழிலாளர் வர்க்கத்தினை தனது எதிரியாகவே கணிக்கின்றது. ஜே.வீ.பி.வன்முறை பயங்கரங்கள் மூலம் பெரிதும் ஒடுக்கப்பட்டோர் ஒடுககப்படும் மக்கள் பகுதியினரே. அவர்களின் தாக்குதல்களுக்கு பு.க.க.அங்கத்தவர்கள் உட்பட்ட ஒடுக்கப்படும் மக்கள் ஆட்பட்டனர், வன்முறை மூலம் பாடசாலைகள் மூடப்பட்டமை, பொதுமக்கள் பயமுறுத்தப்பட்டமை போன்ற பாசிச இலட்சணங்கள் இடம்பெற்றன. அவர்கள் பயன்படுத்திய “தாய்நாடு அல்லது மரணம்” என்ற சுலோகம் நாஸிகளுக்கு சமமான சுலோகம். ஜே.வீ.பி.வன்முறை அரச இயந்திரத்துடன் சமாதானமாக நடாத்திய ஒன்றாகும்.”



கலாநிதி ஜோர்ஜ் கூரே

கொழும்பு பொதுநூல்நிலைய கேட்போர் கூட கருத்தரங்குக்கு வருகைதந்தவர்களில் ஒரு பகுதியினர்

சோசலிச சமத்துவக் கட்சி பொதுச் செயலாளர் விஜே டயஸ் தமது உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: “30 ஆண்டு காலமாக ஒரு விசுவாசமான தோழமை கொண்டு ஒரு முன்நோக்குக்காக தொடர்ந்து போராடிய ஒரு தோழரின் நூலைப் பற்றி பேசக் கிடைத்தமை எனக்கு பெருமகிழ்ச்சி தருகின்றது.

“ஜே.வீ.பி.பற்றி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் சோசலிச சமத்துவக் கட்சியும் தொடர்ந்து அரசியல் விளக்கத்தில் ஈடுபட்டு வந்துள்ளன. பு.க.க.வின் ஆரம்ப காலத்தில் அன்றைய பொதுச் செயலாளர் தோழர்.கீர்த்தி பாலசூரிய ஜே.வீ.பி.யைப் பற்றி அத்தகைய ஒரு ஆய்வினை செய்யும் சவாலை பொறுப்பேற்றார்.அவை தொடர் கட்டுரைகளாக வெளிவந்தன. அன்றில் இருந்து நாம் தொடர்ந்து ஜே.வீ.பி.பற்றிய மார்க்சிச அரசியல் ஆய்வின் அடிப்படையில் ஜே.வீ.பி.க்கு எதிராக போராடினோம். அந்தப் பாரம்பரியங்களின் புதியதோர் நடவடிக்கையாகவே தோழர்.ரத்னாயக்க ஜே.வீ.பி.பற்றி ஆய்வு செய்யும் பொறுப்பை ஏற்றார்.

“இந்தக் கட்டுரைகள் ஆரம்பத்தில் கட்டுரைத் தொடர்களாக பத்திரிகையில் வெளிவந்து கொண்டிருந்த போது தோழர்.ரத்னாயக்கவுக்கும் கட்சிக்கும் ஜே.வீ.பி.யிடம் இருந்து பல்வேறு மிரட்டல்கள் கிடைத்தன. இந்தக் கட்டுரைகளை நிறுத்தும்படி மிரட்டல்கள் கிடைத்தன. எனினும் நாம் அஞ்சிவிடவில்லை. ..ஜே.வீ.பி.க்கு எதிராகப் போராடுகையில் நாம் எமது தோழர்கள் மூவரை இழந்தோம்.நாம் அதனை தொழிலாளர் வர்க்கத்துக்கு மார்க்சிசத்தை புகட்டுகையில் கொடுக்க நேரிட்ட நஷ்டஈடாக கருதுகின்றோம். கடைகெட்ட பப்லோவாத திரிபுவாதியான எட்மண்ட் சமரக்கொடி அன்று பு.க.க.வை குற்றம் சாட்டினார். பு.க.க.வின் தவறுகளினாலேயே பு.க.க.அங்கத்தவர்கள் மூவர் ஜே.வீ.பி.யினால் கொலை செய்யப்பட்டதாக அவர் கூறினார். பு.க.க.ஜே.வீ.பி.யை விமர்சித்ததால் இது நடைபெற்றதாக அவர் கோழைத்தனமாகக் குறிப்பிட்டிருந்தார். ஜே.வி.பி.க்காரர்கள் அவரைச் சந்திக்க வந்து, வாய்திறக்க வேண்டாம் எனக் கூறிய கட்டளையை அணுவும் பிசகாமல் கடைப்பிடித்ததால் உயிர்பிழைத்ததாக கோழைத்தனமாகக் கூறியிருந்தார். இத்தகைய கோழைகளுக்கு முரண்பட்ட விதத்தில் அன்று பு.க.க.போராடியது.” எனவும் விஜே டயஸ் சுட்டிக் காட்டினார்.

www.padippakam.com



மறியல் போராட்டம் செய்யும் தொழிலாளர்

# போடைஸ் தோட்டத் தொழிலாளர் தொழில்களைக் காப்போம்!

அட்டன் பகுதியில் போடைஸ் தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமையைப் பெற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ள போராட்டத்துக்கு 25 நாட்கள் ஆகிறது. இந்த வேலைநிறுத்தம் போடைஸ் தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் உரியது அல்ல .முழுத் தோட்டப் பகுதியிலும் உள்ள தொழிலாளர்களுக்கு முக்கியமான கோரிக்கைகளின் அடிப்படையில் ஆரம்பமாகி உள்ள ஒன்றாகும். அவர்களது போராட்டத்தைக் காக்கவும் அதற்கு ஆதரவு அளிக்கவும் அதில் இணையுமாறு நாம் சகல தோட்டத் தொழிலாளர்களையும் வேண்டுகின்றோம்.

தொழிலாளர்கள் ஜூன் 16ம் திகதி வேலை நிறுத்தத்தில் இறங்கியதற்குக் காரணம், மே மாதத்தில் புதிதாகப் பதிவுசெய்து கொண்ட 72 தொழிலாளர்களுக்கு ஜூனில் வேலை வழங்க மறுத்ததற்கு எதிராகவாகும். களனிவலி தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான தோட்டக் கம்பனி முகாமையாளர் ஜூலை 2ம் திகதி தொழிற் சங்கத்துடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளில் சுமார் 30 தொழிலாளர்களுக்கு தொழில் வழங்கும் விடயத்தை கவனத்தில் கொள்வதாகக் குறிப்பிட்டிருந்தார். இந்த வெறும் வாக்குறுதியை ஏற்றுக்கொண்ட தொண்டமானின் இ.தொ.கா.தலைவர்கள் தொழிலாளர்களை வேலைக்குத் திரும்புமாறு அறிவித்தனர். இந்தக் காட்டிக்கொடுப்பு பற்றிக் குறிப்பிட்ட தொழிலாளர்கள் "தொழிற்சங்கத் தலைவர்கள் நல்ல பாடம் படிப்பித்துள்ளனர்" என்றனர்.

தொழிலாளர்கள் ஜூலை 2ம் திகதியில் இருந்து பக்டரி எதிரில் இராப்பகலாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அட்டன் பொலிசாரும் உள்ளே நுழைவது சாத்தியமாகவில்லை.

ஜூலை 9ம் திகதி இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் தோட்ட நிர்வாகிகள் 72 தொழிலாளர்களை எந்த விதத்திலும் வேலைக்கு எடுக்க முடியாது என்றனர். வேலை இருக்கும் போது மட்டும் வேலை வழங்கும் திட்டத்தினைத் தாம் ஆரம்பித்துள்ளதாக தோட்ட நிர்வாகிகள் கூறினர். செல்லச்சாமியின் இலங்கை தேசிய தொழிலாளர் சங்கத்தினதும் சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணியினதும் தலைவர்கள் முதலாளிகளின் எதிரில் உரத்த குரலில் கதைத்துவிட்டு வெறும் கையுடன் திரும்பினர்.

தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமையை ஒழித்துக் கட்ட அரசாங்கமும் தோட்ட நிர்வாகிகளும் செயற்படும் முறை போடைஸ் தோட்ட நிலைமையில் இருந்து தெளிவாகின்றது.1992ல் முகாமைத்துவக் கம்பனி தோட்டத்தை பொறுப்பேற்கும் போது தோட்டத்தில் 1034 தொழிலாளர்கள் வேலை செய்தனர்.இன்று 634 பேர் மட்டுமே உள்ளனர்.நிர்வாகம் புதிதாக கியூவில் வேலைக்குச் சேர்ந்து கொள்ளும் தொழிலாளர், இளைஞர், யுவதிகளை பதிந்து கொள்வது கிடையாது. வேலை செய்யும் தொழிலாளர்களும் வேலைநீக்கம் செய்யப்படுகின்றார்கள். வேலை இருக்கும் போது மட்டும் வேலை வழங்கும் திட்டம் இப்போது தோட்டங்களில் திணிக்கப்பட்டு வருகின்றது.அந்த நிலையில் முன்னைய மாதத்துக்கு 25 நாட்களுக்கு வேலை வழங்கும் முறை அடியோடு ஒழிக்கப்பட்டு வருகின்றது. இது ஏற்கனவே பல தோட்டங்களில் ஒழிக்கப்பட்டுவிட்டது. அப்போது தொழிலும் இல்லாமல் செய்யப்படுகின்றது. சம்பளமும் வெட்டப்படுகின்றது. தனியார்மயத்தைத் தொடர்ந்து தொழிலாளர்கள் மீது அதிக அளவில் வேலை திணிக்கப்படுகின்றது - வேலை விரைவுபடுத்தப்படுகின்றது. இது நாடு பூராவும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை நாசமாக்க. பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளிகளும் கடைப்பிடிக்கும் வேலைத் திட்டத்தின் ஒரு பாகமாகும்.

போடைஸ் தோட்டத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்ட 72 தொழிலாளர்களுக்கும் வேலை வழங்கு ! தொழில் இல்லாத சகல தோட்டத் தொழிலாளார்களுக்கும் தொழில்களை உத்தரவாதம் செய் ! எனக் கோரி போடைஸ் தொழிலாளர்களின் போராட்டத்தை சூழ சகல தோட்டத் தொழிலாளர்களையும் அணிதிரட்டுவதை உடன் ஆரம்பிக்க வேண்டும். தனியார்மயத்துக்கு எதிராக நிரந்தர மாதச் சம்பளம், குடியுரிமை, வீட்டு , சுகாதார சேவை உரிமைகளை உத்தரவாதம் செய்யும்படி கோரும் தோட்டத் தொழிலாளர்களின் போரார்டத்தினை காலதாமதம் இன்றி உடன் ஆரம்பிக்க வேண்டும்.

> இப் போராட்டம் கோரிக்கைகளை வழங்க எதுவிதமான உறுதியான வாக்குறுதியும் இல்லாத நிலையில் தொழிற் சங்க தலைமைகளால் கைவிடப் பட்டுள்ளது.

இலாபத்தை மலையெனக் குவிக்கும் - தொழிலாளர்களின் உரிமைகளை பலியெடுக்கும் முதலாளித்துவ அமைப்பினுள் தோட்டத் தொழிலாளர்களோ ஏனைய தொழிலாளர்களோ தமது உரிமைகளை காக்க முடியாது. அவர்கள் ஒன்றிணைந்து தோட்டங்கள், வங்கிகள், கைத்தொழில்கள் உட்பட்ட முக்கிய முதலாளித்துவ நிறுவனங்களை தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்கும் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர வேண்டும்.

போடைஸ் தொழிலாளர்களைக் காட்டிக்கொடுக்கும் தொழிற்சங்கத் தலைவர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தமது போராட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கைக் குழுக்களை அமைக்க வேண்டும். ஏனைய தோட்டங்களிலும் அயல் கிராமங்களிலும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் ஒத்துழைப்பை அதற்கு வென்றெடுக்க வேண்டும்.சோசலிச சமத்துவக் கட்சியும் பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் தொழிலாளர் போராட்டத்துடன் ஒன்றிணைந்து நிற்கும் அமைப்புக்களாகும். பெ.கை.தொ.ச.கிளைகளை அமையுங்கள்! சோசலிச சமத்துக் கட்சியில் சேருங்கள்!

# குருக்குந்தே தோட்ட தொழிற் சங்கத் தலைவர் சுந்தரலிங்கத்தின் வேலை இடைநிறுத்தத்தை நீக்கு!

பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தின் பண்டாரவளை-எஸ்லப் தோட்ட குருக்குந்தே டிவிசன் கிளையை உடைக்கும் தாக்குதலை தோட்ட நிர்வாகம் தொடுத்துள்ளது. இத்தாக்குதலின் புதிய நடவடிக்கையாக அச்சங்கக் கிளைச் செயலாளரான எஸ்.சுந்தரலிங்கத்திற்கு எதிராக ஆத்திரமூட்டலைத் தூண்டி அவரை வேலை இடைநிறுத்தம் செய்தமை விளங்குகின்றது. இந்த வேலை இடைநிறுத்தம் பெ.கை.தொ.ச.க்கு எதிராகத் தோட்ட நிர்வாகம் தொடுத்துள்ள வேட்டையாகும் எனக் கண்டனம் செய்யும் பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் சோசலிச சமத்துவக் கட்சியும் இதைத் தோற்கடிக்கும் பெரும் பிரச்சார இயக்கத்தில் இணையுமாறு தோட்டத் தொழிலாளர் உட்பட்ட தொழிலாளர் வர்க்கத்தினையும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றது.



எஸ். சுந்தரலிங்கம்

நிர்வாகத்தின் இந்த வேட்டையானது முன்கூட்டியே திட்டமிடப்பட்டதென்பது நன்கு வெளிப்படை. சுந்தரலிங்கம் பெ.கை.தொ.ச. குருக்குந்தே கிளைச் செயலாளராக விளங்கி, தொழிலாளர்கள் உரிமைகளைப் பேண முன்னின்று உழைத்தவர். இந்தப் போராட்டத்தை உடைக்கும் பிற்போக்கு இலக்குடனேயே சுந்தரலிங்கத்துக்கு எதிரான வேலை இடைநிறுத்தத்தை நிர்வாகம் ஆரம்பித்துள்ளது.

கடந்த யூலை 5ம் திகதி வேலையில் ஈடுபட்டிருக்கையில் தண்ணீர் குடிக்கச் சென்று கால தாமதமாகி திரும்பினார் எனக் குற்றம் சாட்டிய கங்காணி சரவணமுத்து அவருக்கு அன்று வேலை வழங்க மறுத்தார். இதையிட்டு சுந்தரலிங்கம் வேலைக்கள மேற்பார்வையாளரிடம் முறையிட்டார். அவர் கங்காணியை கூப்பிட்டு விசாரித்தார். அச்சமயத்தில் கங்காணி சுந்தரலிங்கத்தை தூஷணத்தில் ஏசி, தாக்கத் தயாரானார்.இச்சமயத்தில் சுந்தரலிங்கம் தற்காப்பு நடவடிக்கை எடுக்க நேர்ந்தது. இதைச் சாட்டாக வைத்துக் கொண்டு சுந்தரலிங்கம் வேலைநீக்கம் செய்யப்பட்டார்.


இந்த வேலைநீக்கம் ஒரு தற்செயலான சம்பவம் அல்ல. தனியார்மயமான தோட்டத் தொழிலாளர்களது தொழில், சம்பளம், வாழ்க்கைத் தரம் , ஜனநாயக உரிமைகளில் தோட்ட நிர்வாகமும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் கொடிய தாக்குதல்களை நடாத்திக் கொண்டுள்ள ஒரு தருணத்திலேயே பெ.கை.தொ.ச. கிளைச் செயலாளர் இந்த வேட்டைக்கு இலக்காகியுள்ளார். இ.தொ.கா.தலைமையின் பூரண ஆதரவுடன் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைத்த அற்ப வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு படியைக் கூட வெட்டி, சம்பளம் கட்டியாக்கப்பட்டுள்ளதோடு தொழிலாளரை வேலைநீக்கம் செய்யவும், மிலேச்ச சுரண்டல்களுக்கு அவர்களை பலியாக்கியும் உள்ளனர்.

தனியார்மயத்துக்கு எதிராக தோட்டத்தை தொழிலாளர் ஆட்சியின் கீழ் தேசியமயமாக்குவது உட்பட்ட சோசலிச வேலைத் திட்டங்களின் அடிப்படையில் சோசலிச சமத்துவக் கட்சியும் பெ.கை.தொ.சங்கமும் தோட்ட நிர்வாகத்தினதும் அரசாங்கத்தினதும் தாக்குதலுக்கு எதிராக தோட்டத் தொழிலாளரை அணிதிரட்டப் போராடுகின்றது.மலையக மக்கள் முன்னணி, தேசிய தொழிலாளர் சங்கம், செல்லச்சாமியின் இ.தெ.கா, சமசமாஜ-கம்யூனிஸ்ட்--நவசமசமாஜ தொழிற் சங்கங்கள் உட்பட்ட தோட்டத் துறையில் இயங்கும் சகல தொழிற் சங்கங்களும் தோட்ட நிர்வாகங்களதும் அரசாங்கத்தினதும் தாக்குதல்களில் ஒன்றிணைந்து கொண்டுள்ளன. இக்காரணத்தினாலேயே அவர்கள் பெ.கை.தொ.ச.க்கு எதிராக தோட்ட நிர்வாகத்துடன் கைகோர்த்துக் கொண்டுள்ளன.

சுந்தரலிங்கத்தினை வேட்டைக்கு இலக்காக்கி பெ.கை.தொ.ச.த்தைத் தகர்க்கும் முயற்சியானது தனியார்மயத்தின் கீழ் கொடிய நிலைமைகளை தொழிலாளர் மீது திணிக்கும் தயாரிப்புக்களுடன் தொடர்புபட்டது என்பதை இது தெளிவுபடுத்துகின்றது. இதற்கு இடமளிப்பின் இதைக்காட்டிலும் பன்மடங்கு மோசமான தாக்குதல்களை தொழிலாளர் மீது கட்டவிழ்க்கும் நிர்வாகத்தின் பிற்போக்குக் கரங்களைப் பலப்படுத்துவதாக இது அமையும். ஆகவே சுந்தரலிங்கத்தின் வேலை இடைநிறுத்தத்தை நிபந்தனையின்றி வாபஸ் பெறுமாறும் அவருக்கு மீண்டும் வேலை வழங்குமாறும் சோசலிச சமத்துவக் கட்சியும் பெ.கை.தொ.ச.மும் ஆரம்பித்துள்ள பிரச்சாரத்தில் இணையுமாறு குருக்குதே தோட்டத் தொழிலாளர் உட்பட்ட தோட்டத் தொழிலாளர்களிடமும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களிடமும் நாம் வேண்டுகின்றோம். தம்மீது தொடுக்கப்படும் தோட்ட நிர்வாக , அரசாங்கத் தாக்குதல்களுக்கு எதிராகப் போராட எம்முடன் இணையுமாறும், தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கைக் குழு அமைக்க முன்வருமாறும் நாம் குருக்குந்தே தோட்ட தொழிலாளர்களையும் ஏனைய தொழிலாளர்களையும் வேண்டுகின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com



# பாசிசமும் மாபெரும் யூத மக்கட் படுகொலைகளும்

## டானியல் கோல்ட்ஹகனின் Hitler's willing Executioners என்ற நூல் பற்றிய விமர்சன ஆய்வு

**மிச்சிக்கன் மாநில பல்கலைக் கழகத்தில் சோசலிச சமத்துவக் கட்சியின் தேசிய செயலாளர் டேவிட் நோர்த் நிகழ்த்திய விரிவுரை**

### கடந்த இதழின் தொடர்ச்சி

டேர் எவிக் ஜூட் (Der weige Jude) அல்லது என்றும் நிறைந்த யூதர் பற்றி நாசிகள் சிருஷ்டித்த பிசாசுக்கு அவர் முன்வைக்கும் பதில் யூதர் மக்களின் ஓயாததும் மாற்றமடையாததுமான எதிரியான என்றும் நிறைந்த ஜேர்மனியன் (Der evige Deutsche)

ஜேர்மன் இனத்தவனுக்கும் யூத இனத்தவனுக்கும் இடையே நிலையான பிளவைத் தவிர வேறு எந்தவிதமான உள்ளார்ந்த வேறுபாடுகளும் கிடையாத ஒரு தேச இனத்தை ஸ்தாபிதம் செய்ய கோல்ட்ஹகனுக்கு அதற்காக நிஜ வரலாறு கிடையாத ஒரு தேசிய இனத்தினையும் பிரதிஷ்டை செய்ய நேரிடுகின்றது. ஹிட்லர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னைய 100 ஆண்டுகளுள் ஜேர்மனியர்களின் அபிவிருத்தியை நிர்ணயம் செய்த சம்பவங்களும் தனிநபர்களும் பற்றிய எந்தவிதமான குறிப்புக்களும் அடியோடு கிடையாது.

கோல்ட்ஹகனின் நூலில் சோசலிச இயக்கத்தையே கண்டுகொள்ள முடியாது. 622 பக்கங்களைக் கொண்ட இந்நூலில் கார்ள் மார்க்ஸ், பிரடெரிக் எங்கேல்ஸ், பேர்டினன்ட் லசேல், ஆகஸ்ட் பேபல் அல்லது வில்ஹெல்ம் லீப்நேக்ட் பற்றி எந்த ஒரு குறிப்பைத் தன்னும் காணமுடியாது. பிஸ்மார்க் ஆட்சியினால் அமுல் செய்யப்பட்ட 1878-90 காலப்பகுதியின் சோசலிச எதிர்ப்பு சட்டங்களைப் பற்றி ஒரு வார்த்தையைத் தன்னும் காணமுடியாது. வரலாற்றில் முதலாவது பரந்த கட்சியும் 1912ல் ஜேர்மன் பாராளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையிலான ஆசனங்களைக் கொண்டிருந்ததுமான சமூக ஜனநாயகக் கட்சி (SDP) பற்றி இடைக்கிடை மட்டுமே குறிப்பிடப்படுகின்றது. 1918 புரட்சியைப் பற்றியோ அல்லது ஸ்பார்ட்டசிஸ்ட் லீக்கின் கிளர்ச்சியைப் பற்றியோ எதுவும் கிடையாது.

இந்தத் தவறுகள் ஒரு அசட்டையினால் ஏற்பட்டதென விளங்கிக் கொள்ள முடியாது. கோல்ட்ஹகன் ஜேர்மன் சோசலிச இயக்கத்தினை ஆய்வுக்கு உள்ளாக்காமல் விடுவது தற்செயலானது அல்ல. அதன் வரலாற்று தோற்றம் அவரின் முழுக் கோட்பாட்டையும் நிராகரிப்பதை பிரதிநித்துவம் செய்கின்றது. மேலும் ஜேர்மன் சோசலிசத் தொழிலாளர் இயக்கத்தின் தோற்றத்தை ஆய்வு செய்யாமல் நவீன யூதர் எதிர்ப்பின் தன்மையையும் முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ள முடியாது.

### நவீன யூதர் எதிாப்பு அரசியலின் எழுச்சி

யூதர்களுக்கு எதிரான பகைமை உண்மையில் ஒரு நவீன தோற்றப்பாடு அல்ல. அவ்வாறே ஜேர்மனிக்கு மட்டும் உரிய ஒன்றும் அல்ல. ஆனால் இது 19ம் நூற்றாண்டின் மூன்றாவது காலாண்டுகளில் மட்டுமே யூதர் எதிர்ப்பு ஜேர்மனியில் மட்டுமன்றி பல ஐரோப்பிய நாடுகளில் ஒரு தனித்துவமானதும் சக்திவாய்ந்ததுமான அரசியல் இயக்கமாகத் தோன்றியது. யூதர் எதிர்ப்பு அரசியல் இயக்கங்கள் நவீன கைத்தொழில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடன் தொடர்புபட்ட சிக்கலான சமூகப் போக்குக்களில் வேரூன்றி இருந்தன என்பது சர்ச்சைக்கு அப்பால் பட்டது.

இவற்றில் பெரிதும் முக்கியமானது ஒரு புதியதும் பெரிதும் சக்திவாய்ந்ததுமான சமூக வர்க்கமுமான கைத்தொழில் பாட்டாளி வர்க்கத்தின் தோற்றமேயாகும்.

1870பதுகளில் -உண்மையில் 1871 பாரிஸ் கம்யூனின் பின்னர் சோசலிச சித்தாந்தத்தின் அதிகரித்த செல்வாக்குடன் ஒரு பரந்த தொழிலாளர் வர்க்கம் தோன்றியமை முதலாளித்துவ நலன்களுக்கு ஒரு உள்ளார்ந்த புரட்சிகர அச்சுறுத்தலாக அங்கீகரிக்கப்பட்டது.

இந்த ஆபத்தின் பிரதிபலிப்பாக வசதிவாய்ப்புக்கள் கொண்ட வர்க்கங்கள்- முதலாளி வர்க்கமும் இன்னமும் கணிசமான நிலவுடமை நலன்களும்-இருந்து வரும் சமூக அமைப்பைக் காப்பதற்கான ஒரு பரந்த அடிப்டையை விதைக்க முயன்றன. சுய முரண்பாடுகளுடன் சோசலிச தொழிலாளர் இயக்கத்துக்கு எதிரான முதலாளித்துவத்தின் பாதுகாப்புக்கான ஒரு பரந்த அடிப்படை மத்தியதர வர்க்க மூலகங்களில் இருந்து தோன்றியது. இதனது சமூக, பொருளாதார அந்தஸ்துகள் நவீன கைத்தொழில் அபிவிருத்தியின் போக்கினால் உறுதியான விதத்தில் பாதிப்புக்கு உள்ளாகியது.

1873ல் ஜேர்மனியில் ஒரு ஆச்சரியமான பங்குமுதற் சந்தையின் வீழ்ச்சியுடன் கூடிய ஒரு கடுமையான பொருளாதார மந்தத்தின் தோற்றம் அறிவிக்கப்பட்டது. அது சிறப்பாக மத்தியதர வர்க்க மூதலீட்டாளர்களின் சேமிப்புக்களை கடுமையாகப் பலிகொண்டது. பிஸ்மார்க்கின் சுதந்திர வர்த்தகத்துக்கும் தலையிடாக் கொள்கைக்கும் எதிரான பரந்த மனோபாவம் கணிசமான அளவு விரைவாக வளர்ச்சி கண்டது.

பங்குமுதல் சந்தையின் வீழ்ச்சியைச் சூழ்ந்த ஊழல்களில் ஒரு கணிசமான அளவு யூத பங்குமுதல் வர்த்தகர்களின் துர்அதிர்ஷ்டவசமான ஈடுபாடு தகவமைவற்ற மத்தியதர வர்க்கங்களின் ஆத்திரத்தினை திரளவைத்தது. இந்த நிலைமையில் நவீன முதலாளித்துவத்தின் கெடுதிகளுடன் யூதர்கள் இனங்காணப்பட்டமை ஒரு புதிய அரசியல் முக்கியத்துவத்தைப் பெற்றது.

அத்தகைய வேண்டுகோள்களால் மிகவும் இலகுவில் பாதிக்கப்படுகின்ற குட்டி முதலாளித்துவ உணர்வுகளுக்கு நீண்டகால மதத் தப்பபிப்பிராயங்கள் உதவின. ஆனால் முதலாளித்துவ அபிவிருத்திகளால் சிருஷ்டிக்கப்பட்ட திட்டவட்டமான புறநிலை நிலைமைகள் இந்தப் பழைய தப்பபிப்பிராயங்களைப் பெரிதும் பிற்போக்கான நிலையில் திருப்பியதோடு அவற்றுக்கு ஒரு அசாதாரணமான அழிவுச் சக்திகளையும் ஆஸ்தியாக வழங்கியது.

ஒட்டோ கலகு, ரடோல்வ் மேயர், வில்ஹெல்ம் மார் போன்ற யூதர் எதிர்ப்பு எழுத்தாளர்கள் யூதர்களை முதலாளித்துவ பேராசையின் உருவமாகச் சித்தரித்தனர். இது ஜேர்மன் சிறு வர்த்தகர்கள், தொழில் வல்லுனர்கள், வேலையற்றோர், கிலிபிடித்த தொழில்கார் நிபுணர்களிடையே ஒரு கணிசமான அளவு ஈர்ப்பைப் பெற்றிருந்தது.

ஜேர்மன் குட்டி முதலாளித்துவத்தின் குழம்பிப் போன் முதலாளித்துவ எதிர்ப்பு மனோபாவத்தினை யூதர்களுக்கு எதிரான ஆத்திரமாகத் திருப்ப எடுத்த முயற்சிக்கு பத்தொன்பதாம் நூற்றாண்டின் போது ஜேர்மன் யூதர்களின் சமூக அந்தஸ்திலான கணிசமான முன்னேற்றம் உதவியது. வரலாற்றாசிரியர் றொபேர்ட் விஸ்ட்ரீஜ் எழுதுவதாவது : "1870பதுகளில் யூதர்கள், இன்னமும் முற்றிலும் முதலாளித்துவ மாகிவிடாத நவீனமாகிவிடாத ஒரு தேசியமாகிவிடாத ஒரு புதுமையான தற்காலத்தவராக தோன்றினர். விஸ்ட்ரிஜ் வழங்கியுள்ள தரவுகளின்படி 1882ல் வங்கிகளிலும் பங்குமுதற் சந்தைகளிலும் வேலை செய்த ஊழியர்களில் நூற்றுக்கு 22 வீதத்தினர் யூதர்கள். ஜேர்மன் சனத்தொகையில் யூதர்கள் ஒரு வீதத்துக்கு சற்று அதிகமாக இருந்து வந்த ஒரு நிலையில் அவர்கள் வங்கிகளதும் கடன்நிறுவனங்களதும் சொந்தக்காரர்களிலும் பணிப்பாளர்களிலும் நூற்றுக்கு 43.25 வீதத்தவராக விளங்கினர். ஜேர்மனியின் மாபெரும் வங்கிகளில் சில- பேர்ளினில் பிளைச்றோடர், கொலனில் ஓபன் ஹேயிம், ஹம்பேர்க்கில் வார்பேர்க், பிராங்பேர்டில் றொத்சைல்ட் போன்றவை- யூதர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவையாக விளங்கின. 1900பதுகளின் ஆரம்பத்தில் புகழ்பெற்ற பொருளியலாளரான வேர்ணர் சொம்பார்ட், ஜேர்மன் கைத்தொழில்களின் 10 பெரும் கிளைகளின் பணிப்பாளர் சபைகளின் அங்கத்தவர்களில் நூற்றுக்கு 25 சத வீதத்தினர் யூதர்களாக இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜேர்மன் யூதர்களின் வெற்றியின் மற்றொரு முக்கிய பண்பு என்னவெனில் 1882ல் திறமைசார்ந்த தொழில்களில் அவர்களின் செல்வாக்கு மிகுந்த அந்தஸ்தாகும். 1882ல் சகல டாக்டர்களிலும் 11.7வீதத்தினரும் பத்திரிகையாளர்களில் 8.86 வீத்தினரும் வழக்கறிஞர்களுள் 7.9 வீதத்தினரும் யூதர்களாக விளங்கினர். இந்தப் புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுவது போல் யூதர் இளைஞர்கள் கல்லூரிகளுக்கு பெருமளவில் சென்றனர்.

இந்த வெற்றிகள் யூதர் போட்டியை வெறுத்த ஜேர்மன் குட்டி முதலாளித்துவ பாதுகாப்புள்ள யூதர் எதிர்ப்பு கோரிக்கைகளுக்கு மேலும் வாய்ப்பான நிலைமைகளை வழங்கியது.

முன்னைய ஒரு காலப்பகுதியில் யூதர் எதிர்ப்பு உணர்வுகள் யூதர்களின் தனித்துவம் எனப்படுவதன் மேல் பளிச்சிட்டது. அவர்களின் சமயமும் பாரம்பரியங்களும் அவர்களை பொதுச் ஜனத்தொகையில் இருந்து தள்ளி வைத்தது. புதிய யூதர் எதிர்ப்பு அரசியலானது யூதர்களை தேசிய வாழ்க்கையில் அளவுக்கு அதிகமாக இணையச் செய்வதை எதிர்த்தது. இந்த எதிர்ப்புக்கள் 19ம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் தீவிரமடைந்திருந்த போலியான விஞ்ஞான இனவாதக் கோட்பாடுகளைத் தாங்கி நிறுத்தியது. யூதர் தலைநகருக்கு எதிரான ஒரு போராட்டத்துக்கான பேச்சுவன்மைமிக்க அழைப்புக்கள் யூதர்மய மேலாதிக்க ஆபத்துக்கு எதிராக ஜேர்மன் இனத்தை பாதுகாப்பதற்கான ஒரு வெறிபிடித்த வேண்டுகோள்களுடன் இணைந்து காணப்பட்டன. "யூதர்மயத்துக்கும் ஜேர்மன் ஆதிக்கத்துக்கும் இடையேயான போராட்டம் ஒரு பின்வாங்கச் செய்யமுடியாத" உலக வரலாற்று தலைவிதி"யாகும் என வில்ஹெல்ம் மார் பிரகடனம் செய்தார்.

### ஐரோப்பாவில் யூதர் எதிர்ப்பு

யூதர் எதிர்ப்பு அரசியல் ஜேர்மனிக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. பிரான்சில் ஒரு இணையான தோற்றப்பாடு அபிவிருத்தி செய்யப்பட்டது. யூதர் எதிர்ப்பு அதன் சித்தாந்திகளால் தலையெடுத்து வரும் சோசலிசப் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக மட்டுமல்லாது தாராண்மை ஜனநாயகத்தின் சகல மூலகங்களுக்கும் எதிராகவும் பரந்த மக்கள் ஆதரவை அணிதிரட்டுவதற்கான மிகவும் சக்திவாய்ந்த சாதனமாகவும் நோக்கப்பட்டது. யூதர் எதிர்ப்பின் அடிப்படையில் சோசலிசத்துக்கான அழைப்பு அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ கைத்தொழில்மயத்தின் போக்குச் சிருஷ்டித்த வர்க்கப் பிரிவுகளை தாண்டிச் செல்லும் ஒரு புதிய தேசிய உணர்வைத் தோற்றுவிக்க வேண்டி

(8ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# பாசிசமும் மாபெரும் யூத மக்கட் படுகொலைகளும்

7ம் பக்கத் தொடர்ச்சி

இருந்தது. பிற்போக்கு கோட்பாட்டாளரான மோறேஸ் யூதர் எதிர்ப்பை பாட்டாளி வர்க்கத்தை தேசிய உடம்பினுள் மீள இணைப்பதற்கான ஒரு சாதனமாக புரிந்து கொண்டார். "ஒருவர் பாட்டாளி வர்க்கத்தை நசுக்க வேண்டும். இந்த மக்கள் ஒன்றைப் பாதுகாக்க ஒன்றை வெற்றி கொள்ள வழங்க வேண்டும்." என அவர் எழுதினார். இந்த தேசியத் திட்டம் யூதர் எதிர்ப்பு புரட்சி மூலம் யதார்த்தமாக்கப்பட வேண்டியுள்ளது.5

படுபயங்கரமான பிற்போக்குவாதியான சார்ள்ஸ் மொராஸ் வர்க்க குரோதத்தினை நசுக்குவதற்கு வசதி செய்து கொடுத்த யூதர் எதிர்ப்பினை நசுக்காமல் ஒரு இணைந்த தேசிய ஐக்கியத்தை அடைய முடியாது எனப் பிரகடனம் செய்தார். "யூதர் எதிர்ப்பின் அதிர்ஸ்டமான தோற்றம் இல்லாமல் அனைத்தும் முடியாததாக அல்லது பயங்கரமான விதத்தில் கஷ்டமானதாக தெரிகின்றது. இது சகலதையும் ஒழுங்கு செய்யவும் சுலபமாக்கவும் இலகுபடுத்தவும் உதவுகின்றது. தேசாபிமானத்தின் மூலம் ஒருவர் யூதர் எதிர்ப்பாளியாக இல்லாது போனால் ஒருவர் சந்தர்ப்பவாதத்தின் இலகு பதத்துக்கு உரியவராகிவிடுவார்".

1894ல் பிரான்சில் ட்ரிபஸ் வழக்கு வெடித்தது இந்தச் சிந்தாந்த மின்னலைக்கு எதிராகவேயாகும். செல்வந்த யூத இராணுவ அதிகாரி ஜேர்மனியின் சார்பில் உளவு பார்த்ததாக பொய்க் குற்றம் சாட்டப்பட்டமை கடும் யூதர் எதிர்ப்புப் பிரச்சாரத்தின் மையமாகியது. 70 பட்டினங்களும் நகரங்களும் குண்டர்களின் யூதர் எதிர்ப்பு கலவரங்களை தரிசித்தன. குண்டர்கள் "யூதர்களுக்கு மரணம்" எனக் கோஷித்தனர். யூதர்களின் மதக் கூட்டங்கள் தாக்கப்பட்டன. யூதருக்குச் சொந்தமான கடைகள் உடைத்து நொருக்கப்பட்டன. யூதர்கள் தெருக்களில் தாக்கப்பட்டனர்.

ஜேர்மனியில் போலவே யூதர் எதிர்ப்பு இயக்கம் முக்கியமாக மத்தியதர வர்க்கத்திடம் இருந்து -சிறப்பாக கடைக்காரர்கள் மற்றும் சிறிய வர்த்தகர்களின் ஏனைய பிரிவினரதும் முக்கிய ஆதரவினை பெற்றுக்கொண்டது. ட்ரிபஸ் விவகாரம் சம்பந்தமாகவோ அல்லது பிரான்சிலான யூதர் எதிர்ப்பு இயக்கங்கள் பற்றியோ பேராசிரியர் கோல்ட்ஹகனின் நூலில் எந்த ஒரு குறிப்பையும் காண முடியாதுள்ளது.

### யூதர் எதிர்ப்பும் சமூக ஜனநாயகக் கட்சியும்

Hitler's willing executioners நூலின் மைய எடுகோள் யூதர் எதிர்ப்பு உலகளாவிய ரீதியில் ஜேர்மன் சமுதாயத்தின் சகல பிரிவினராலும் அங்கீகரிக்கப்பட்டது. பேராசிரியர் கோல்ட்ஹகன் ஜேர்மனியில் யூதர் எதிர்ப்புக்கு சிறிதளவிலேனும் எதிர்ப்பு இருந்தது என்பதற்கு கணிசமானதோ அல்லது நம்பக்கூடிய ஆவண வடிவிலான சாட்சியோ கிடையாது என வலியுறுத்தும் அளவுக்குச் செல்கின்றார். ஒரு நிபுணத்துவ ஆராய்ச்சி படைப்பாக அர்த்தப்படுத்தப்படும் ஒரு நூலிக் அத்தகைய ஒரு அறிக்கை இடம்பெறுவது திகைப்படையச் செய்கின்றது.

ஜேர்மன் சமூக ஜனநாயகத்தின் வரலாறு - அது தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு புரட்சிகர பரந்த இயக்கத்தினைப் பிரதிநிதித்துவம் செய்த காலம்- அதாவது , 1870பதுகள் தொடக்கம் 1914 ல் முதலாம் உலக யுத்தம் வெடித்தது வரை- யூதர் எதிர்ப்புக்கு எதிரான இடைவிடாத போராட்டமாக விளங்கியது. தொழிலாளர் வர்க்கத்தினுள் அரசியல் போராட்டத்தின் அவசரச் சூழ்நிலையானது சகல வடிவிலான யூதர் எதிர்ப்பு பிரச்சாரங்களைப் பொறுத்த மட்டில் ஒரு சமரசமற்ற மனோபாவத்தை வேண்டி நின்றது. ஜனநாயக அடிப்படைக் கொள்கைகளுக்கும் தார்மீக கணிப்புக்களுக்கும் அப்பால் முதலாளித்துவ எதிர்ப்பு வாய்வீச்சுப் பிரச்சாரங்களுடன் யூதர் எதிர்ப்பின் சேர்க்கையை தொழிலாளர் வர்க்கத்தை தகவமைவு இல்லாது போகச் செய்து அதனை மத்திய தர வர்க்கத்தின் அரசியல் பிரதிநிதிகளுக்கு கீழ்ப்படுத்தும் ஒரு முயற்சியாக சமூக ஜனநாயகக் கட்சி கண்டது.

அடோல்வ் ஸ்டொக்கர் முற்றிலும் தமது யூதர் எதிர்ப்பு கிறிஸ்தவ சமூக தொழிலாளர் கட்சியை (SWP) அமைத்தமை சட்டவிரோதமாக இருந்த போதிலும் பெரிதும் செல்வாக்கானதாக விளங்கிய சமூக ஜனநாயக கட்சியில் இருந்து தொழிலாளர் வர்க்கத்தை வென்றெடுப்பதற்கான ஒன்றாகவே இந்த யூதர் தூண்டிலைப் பயன்படுத்த முயன்றது. ஸ்டொக்கருக்கு எதிராக சமூக ஜனநாயகம் யூதர் எதிர்ப்பின் பிற்போக்குத் தன்மையைப் பற்றிப் போதிக்க ஒரு பலம் வாய்ந்த பிரச்சார இயக்கத்தை நடாத்தியது. 1881 தேர்தலுக்கான சமூக ஜனநாயகக் கட்சியின் உத்தியோகபூர்வமான அறிக்கையில் அது பின்வருமாறு கூறியது.:

"யூதர் எதிர்ப்பு குழப்பங்களின் ஊழல்கள் சோசலிச எதிர்ப்பு சட்டத்தின் பின்னரே முதலில் சாத்தியமாகியது.அது யூதர் படுகொலை மட்டத்துக்கு வளர்ச்சி காணாததற்கு முற்றிலும் சமூக ஜனநாயகவாதிகளே காரணம் ஆவர். அவர்கள் இந்த அவமானத்துக்குரிய ஊக்கிகளில் இருந்து எழும் கடைகெட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக முன்கூட்டியே தொழிலாளர் வர்க்கத்தை எச்சரிக்கை செய்தனர்."7

சமூக ஜனநாயக கட்சியின் எதிர்த்தாக்குதல் தொழிலாளர் வர்க்கத்தின் மீது பிரமாண்டமான அரசியல், தார்மீக செல்வாக்கை ஏற்படுத்தியது. தொழிலாளர்கள் யூதர் எதிர்ப்பு கூட்டங்களைக் கலைத்தனர். உரத்த குரலில் ஸ்டோக்கருக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். யூதர் எதிர்ப்புக்கு பதிலளிக்கும் பலம் வாய்ந்த அடையாளமாக சமூக ஜனநாயகக் கட்சி யூதர் இனச் சோசலிஸ்டும் வர்த்தகருமான போல் சிங்கரை முக்கிய பேர்ளின் மாவட்டத்தில் தமது வேட்பாளராகத் தேர்ந்தெடுத்தது. 1887 தேர்தல்களில் சிங்கர் அந்த நகரத்தில் வேறு எந்த ஒரு வேட்பாளரைக் காட்டிலும் அதிக வாக்குக்களைப் பெற்றார்.

"யூதர் எதிர்ப்பை எதிர்ப்பது"" தொழிலாளர் இயக்கத்தினுள் ஒரு கௌரவப் பதக்கமாக அன்று மாறியதாக" விஸ்ட்ரிச் எழுதுகின்றார். ஜேர்மன் சமூக ஜனநாயகத்தினால் அடோல்வ் ஸ்டோக்கரின் பேர்ளின் இயக்கத்துக்கு எதிராக இடம் பெற்ற உக்கிரமான பிரச்சாரம் பெருமளவுக்கு தொழிலாளர் வர்க்கத்தை யூதர் எதிர்ப்புக்கு எதிரான தடுப்பூசியை வழங்கியது. அது தொழிலாளர் இயக்கத்தினுள் யூதர் எதிர்ப்பினை அரசியல் ரீதியில் முக்கியமற்ற ஒரு நிலைக்குத் தள்ளியது.ஸ்டோக்கருக்கு எதிரான போராட்டம் சமூக ஜனநாயகத்துக்கான போராட்டமாகியது. தொழிலாளர் வர்க்கத்தின் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்வதாக்கியது."8

யூதர் எதிர்ப்புக்கு எதிராக சமூக ஜனநாயகக் கட்சி ஆற்றிய பணி நீண்ட காலத்தில் அந்த அமைப்பை சநதேகத்துடன் பார்த்து வந்த ஜேர்மன் ஜனத்தொகையில் ஒரு தட்டினர் இடையே-அதாவது மத்தியதர வர்க்க யூதர் மக்கள் இடையே-பரந்த ஆதரவை வெற்றி கண்டது. சோசலிச இயக்கத்தின் ஆரம்ப காலப் பகுதியில் ஜேர்மன் யூத புத்திஜீவிகளினுள் சிறியதெனினும் முக்கியமான பகுதியினர் ஆற்றிய முக்கியமான பாத்திரத்தினை நோக்காது யூதர் மத்திய தர வர்க்கத்தினதும் முதலாளி வர்க்கத்தினதும் பரந்த தட்டினர்-பொருளாதார சுயநலன்களுக்கான காரணங்களுக்காக சமூக ஜனநாயகத்தில் இருந்து அன்னியப்பட்டு இருந்து வந்தனர். யூதர்களை சமூக ஜனநாயகக் கட்சி தொடர்பாக பல யூதர்கள் ஒரு குரோத மனப்பான்மையைக் கொண்டிருந்ததற்கு ஒரு மேலதிகக் காரணமும் இருந்தது. அது சிலவேளை உள்ளார்ந்த பாதுகாப்பற்ற ஒரு நிலைமையினுள் தோன்றிய கெயிசர் வில்ஹெல்ம் ஆட்சி தொடர்பாக நம்பிக்கை கொள்ளும் அளவுக்கு பகட்டாகக் காட்டப்பட்டதாக இருக்கலாம்.

எவ்வாறெனினும் நூற்றாண்டின் திருப்பத்தில் யூதர் எதிர்ப்பை சந்தேகத்துக்கு இடமற்ற முறையில் எதிர்த்து வந்த ஒரே கட்சி சமூக ஜனநாயகக் கட்சியே என்ற உண்மையை ஜேர்மன் யூதர்களால் புறக்கணிக்க முடியாமல் செய்துவிட்டது. உண்மையில் அரசின் தேர்தலுக்கு வேட்பாளர்களாக நிற்க யூதர்களைத் தேர்ந்தெடுத்த ஒரே கட்சி சமூக ஜனநாயகக் கட்சியேயாகும். 1903 தேர்தலில் சமூக ஜனநாயகக் கட்சி முதற் தடவையாக ஜேர்மன் யூதர் வாக்குக்களில் கணிசமான பகுதியினை வெற்றிகொண்டது.

அத்தோடு ஜேர்மனியின் 1933க்கு முன்னைய அரசியல் வரலாற்றில் மற்றொரு . முக்கிய அம்சமாகிய இதைப் பற்றி பேராசிரியர் கோல்ட்ஹகன் குறிப்பிடாது விட்டுவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமூக ஜனநாயகக் கட்சியின் போராட்டத்தின் ஒரு பெறுபேறாக யூதர் எதிர்ப்புக் கட்சிகளின் அரசியல் செல்வாக்கு 1890களின் நடுப்பகுதிக்கும் முதலாம் உலக யுத்தத்தின் வெடிப்புக்கும் இடையே செங்குத்தாக வீழ்ச்சி கண்டது. இருபதாம் நூற்றாண்டின் முதலாண்டுகளில் மிகவும் வன்முறையான யூதர் எதிர்ப்பு கலகங்கள் இடம்பெற்றது ஜேர்மனியிலோ அல்லது பிரான்சிலோ அன்றி ருஷ்யாவிலேயேயாகும்.

## ருஷ்யாவில் யூதர் எதிர்ப்பு

ருஷ்யாவில் ஏற்பட்ட இரத்தம் தோய்ந்த மாபெரும் யூதர் படுகொலையானது வளர்ச்சி கண்டு வந்த தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்துக்கு ஸார் ஆட்சி காட்டிய ஒரு பிரதிபலிப்பாகும்.

அரசாங்கம் தொழிலாளர் வர்க்கத்தை பயமுறுத்தும் பொருட்டு கறுப்பு நூற்றுவர் (Black Hundred) எனப்பட்ட வலதுசாரி பரா-இராணுவ படைகளை அமைத்தது.

ஒர்லன்டோ பிகேஷ் என்ற வரலாற்றாசிரியர் எழுதுவது போல் : "ஐரோப்பாவில் இரண்டு யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் பாசிச இயக்கங்களுக்குப் போன்றே பிளாக் ஹன்ரட்க்கும் அதிகமாக ஆதரவு கிடைத்தது, நவீனமயமாக்கத்தினதும் சீர்திருத்தத்தினதும் பெறுபேறாக சமூகத்தினுள் தமக்கு. இருந்து வந்த சிறு அந்தஸ்தும் இல்லாது போய்க் கொண்டிருந்த அல்லது இல்லாமல் போகும் எனப் பீதி கொண்டிருந்த நம்பிக்கையிழந்த லூம்பன் குழுக்களிடந் இருந்தாகும்.: அதாவது அமையத் தொழிலாளர்களாக நகரங்களுக்கு ஈர்க்கப்பட்ட நிர்மூலமான விவசாயிகள் பெரும் வர்த்தகங்களின் போட்டியினால் நசுங்குண்டு போன சிறிய கடைக்காரர்களும், கைவினைஞர்களும், சிறிய அதிகாரிகள், பொலிஸ்காரர்கள், புதிதாக எழுந்த தொழிலாளர்கள், மாணவர்கள், யூதர்களினால் ஸார் மன்னனுக்கு ஆண்டவனிடம் இருந்து கிடைத்த ஆட்சிக்கு சவால் செய்யப்பட்டதைக் கண்டு குழம்பிப்போன சகல வகையறாக்களையும் சேர்ந்த தவறணை தேசாபிமானிகள் முதலானோர்"9.

இரண்டாம் நிக்கொலஸ் ஸார் ஆட்சியானது 1905 புரட்சிகர இயக்கத்துக்கு பயங்கரத்தைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் பதிலளித்தது. இதில் யூதர்கள் முக்கிய இலக்காக விளங்கினர். ஜனநாயக நிறுவனங்களை அமைக்க ஆதரவு தருவதாக வாக்குறுதியளித்த ஸாரின் 1905 அக்டோபர் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து வந்த இரண்டு வாரங்களுக்குள் 690 கலவரங்கள் இடம்பெற்றன. இக்காலப்பகுதியில் மூவாயிரம் யூதர்கள் கொலை செய்யப்பட்டனர். ஒடிகாவில் நடைபெற்ற கலவரம் 800 யூதர்களைப் பலிகொண்டது. 500 பேர் காயமடைந்ததோடு 100,000க்கும் அதிகமானோர் வீடுகளை இழந்தனர். கலவரங்கள் அரசாங்கத்தின் நேரடி ஆதரவுடனேயே ஒழுங்குசெய்யப்பட்து என்பது உடனடியாகவே நிரூபிக்கப்பட்டது. அக்காலத்தின் ஒரு சோசலிஸ்ட் பத்திரிகையில் கலவரங்களின் அரசியல் பொறிமுறை பின்வருமாறு வருணிக்கப்பட்டது:

பழைய பழக்கமான சித்திரம்! பொலிசார் முன்கூட்டியே கலவரங்களை ஒழுங்கு செய்கிறார்கள். பொலிசார் இதனைத் தூண்டிவிடுகின்றனர். யூதர்களை படுகொலை செய்யும்படி கோரும் துண்டுப்பிரசுரங்கள்அரசாங்க அச்சகங்களால் அச்சடிக்கப்படுகின்றன. கலவரங்கள் தொடங்கியதும் பொலிசார் ஸ்தம்பித்துப் போய்விடுகின்றனர். இராணுவமும் பிளாக் ஹன்ரட்டுகளின் வேலைகளை மௌனமாகப் பார்த்து நிற்கின்றது. ஆனால் பின்னர் இதே பொலிசாரே கலவரங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் மோசடியில் இறங்குகின்றது. அதிகாரிகளால் கலவரங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் என்றும் ஒரே விதத்திலேயே செயற்படுகின்றன. அவை இழுபட்டுச் செல்கின்றன. எந்த ஒரு கலவரக்காரரும் குற்றவாழியாகத் தீர்ப்பு வழங்கப்படுவது கிடையாது. சில வேளை தாக்கப்பட்ட அல்லது வெட்டல் கொத்தல்களுக்கு இலக்கான யூதர்களும் புத்திஜீவிகளும் நீதிமன்றங்களின் முன் நிறுத்தப்படுகின்றனர். மாதங்கள் பல உருண்டோடுகின்றன. ஆனால் அடுத்த கலவரம் ஏற்படும் வரை இந்தப் பழைய என்றும் புதிய கதை மறக்கப்பட்டு விடுவதில்லை."10

1906ல் எழுதப்பட்ட இந்தக் கட்டுரையின் ஆசிரியர் லெனின்.

வரலாற்று உண்மைகளின் ஊடுருவலால் ஜேர்மன் யூதர் எதிர்ப்பு பற்றிய தமது கோட்பாடு பொறிந்து விழ இடமளிக்காத கோல்ட்ஹகன் மூன்றாவது ரைக் ஹிட்லர் ஆட்சி அமைக்கப்படுவதற்கு முன்னராக ஐரோப்பாவில் இடம்பெற்ற மோசமான பயங்கர யூதர் எதிர்ப்பு வன்முறைகள் பற்றி எதுவுமே குறிப்பிடாது தவிர்த்துக் கொள்கின்றார்.

## ஜேர்மனியில் அரசியல் யூதர் எதிர்ப்பின் மீள்தோற்றம்


முதலாவது உலக யுத்தத்தின் பின்னர் ஜேர்மனியில் புரட்சி வெடித்து ஹொஹேன் சொலர்ண் முடியாட்சி வீழ்ச்சி கண்டதோடு யூதர் எதிர்ப்பு அரசியலை ஒரு ஆயுதமாக கையாள்வது மீண்டும் ஒரு தீர்க்கமான கர்ரணமாகின்றது. நாஸிப் பிரச்சாரத்தில் முக்கிய பாத்திரத்தை வகித்த யூதர் எதிர்ப்பின் பலம்-குட்டி முதலாளித்துவத்தின் அவநம்பிக்கைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் வழிதடுமாற்றத்துக்கும் ஒரு நேரடி காரணியாகின்றது.

ஜேர்மனி யுத்தத்தில் தோல்வி கண்டதைத் தொடர்ந்து உருவான சம்பவங்களால் குட்டி முதலாளித்துவம் அதிர்ச்சிக்குள்ளானது. ஒரு சிரச்சேதம் செய்யப்பட்ட புரட்சியின் அடிப்படையில் அமைக்கப்பட்ட வீமர் குடியரசு (Weimar Republic) நெருக்கடி மேல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது.

ட்ரொட்ஸ்கி எழுதியதாவது:" யுத்தத்துக்கு பின்னைய குழப்பங்கள் கைவினைஞர்கள் , சில்லறை வியாபாரிகள், அரசாங்க ஊழியர்களைத் தாக்கியது தொழிலாளர்களை விடக் கொடூரத்தில எதுவிதத்திலும் குறைந்தது அல்ல...யுத்தம், தோல்வி, யுத்த நஷ்டஈடு, பணவீக்கம், ரூர் பிராந்தியத்தை பிரான்ஸ் கைப்பற்றிக்கொண்டமை, நெருக்கடி, தேவைகள், அவலங்கள் என்ற இவை அனைத்தையும் தழுவிய ஒரு சூழ்நிலையினுள் குட்டி முதலாளித்துவம் அதனை ஏமாற்றிய சகல பழைய கட்சிகளுக்கும் எதிராகக் கிளர்ந்து எழுந்தது. எந்த ஒரு காலத்திலும் வங்குரோத்தில் இருந்து தலையெடுக்காத சிறிய சொத்து உடமையாளர்களும், பல்கலைக் கழகம் சென்ற போதிலும் தொழிலோ அல்லது வாடிக்கையாளர்களே கிடைக்காத அவர்களின் புதல்வர்களதும், சீதனமோ அல்லது மாப்பிள்ளையோ கிடைக்காத அவர்களின் புதல்விகளதும் துயரங்களுக்கு ஒழுங்கினையும் இரும்புக் கரங்களையும் வேண்டி நின்றனர்."11

தாம் தொழிலாளர் வர்க்கத்தினுள் தள்ளப்பட்டுவிடலாம் என இடைவிடாது அச்சம் கொண்டிருந்த இந்தத் தட்டின் துணிச்சலையும் ஆர்வத்தையும் இந்தச்

www.padippakam.com



மேல் இருந்து கீழ்: மார்க்ஸ், பேபெல், லஸால், வில்ஹெல்ம் லீப்நெக்ட், லெனின், ட்ரொட்ஸ்கி

சுற்றாடலின் அதிர்ச்சியையும் ஹிட்லர் பயன்படுத்திக் கொண்டார். கீழ்மட்ட மத்தியதர வர்க்கத்தில் தோன்றிய ஹிட்லர் தமது ஆரம்ப வருடங்களை வியன்னாவில் கழித்தார். அவரின் உலக நோக்கு அங்கு இழக்கமான வலதுசாரி சாக்கடைப் பத்திரிகைகளால் உருவமைக்கப்பட்டது. அங்கு அவர் தொழிலாளர் வர்க்கம், சோசலிசம் மீதான வாழ்க்கைக் காலம் பூராவுமான வெறுப்பைத் தேடிக் கொண்டார். பாசிச எதிர்ப்பு ஜேர்மன் எழுத்தாளர் கொன்ராட் ஹெயிடனின்படி ஹிட்லரின் யூதர் எதிர்ப்பு தொழிலாளர் வர்க்கத்தின் மேல் ஹிட்லர் காட்டிய சகல வகையான வெறுப்பினதும் ஒரு துணை விளைவாகும்.

ஹெயிடன் விளக்கியதாவது: "ஹிட்லர் சக்தியை உற்பத்தியை நோக்கி இடைவிடாது பரிணாமம் செய்யச் சபதம் பூண்ட மனித இனத் தோற்றத்தின் முழு மாபெரும் அரங்கையும் வெறுத்தார். உற்பத்தி போக்கினுள் அகப்படுத்தி அதனுள் நசுக்கிவிட இடமளித்த மனிதனை அவர் வெறுத்தார். அவரின் முழு வாழ்க்கை பூராவும் தொழிலாளர்கள் அவருக்கு ஒரு பயங்கரத்தின் சித்திரமாகவும் ஒரு இருண்டதும் வெறுப்பூட்டுவதாயும் இருந்தது. ..பேச்சாளர் மேடையில் இருந்து கொண்டு உடல் உழைப்பு தொழிலாளர்களுக்கு முகஸ்துதியாக அவர் பிற்காலத்தில் கூறியவை அனைத்தும் பொய்யாகியது."

ஹிட்லர் யூதர்கள் மீது கொண்டிருந்த வெறிபிடித்த ஆவேசத்தை விளங்கிக் கொள்வதற்கான திறவுகோல் இங்குதான் உள்ளது. மெயின் காம்பில்(எனது போராட்டம்) ஹிட்லர் தொழிலாளர் இயக்கத்துடனான தனது சண்டைகள் யூதர் எதிர்ப்பாக மாற்றம் கண்டது எப்படி என்பதை விளக்கியுள்ளார். ஹிட்லர் தொழிலாளர்களிடையேயே முதலில் யூதர் தொடர்புகளைச் சந்தித்தார். அவர் வியப்புறும் வகையில் பல யூதர்கள் தொழிலாளர் இயக்கத்தினுள் முக்கியமான பாத்திரங்களை வகித்தனர். "அவருக்கு மாபெரும் வெளிச்சம் உதித்தது."என ஹெய்டன் எழுதினார். திடீரென யூதர் பிரச்சினை தெளிவாகியது... தொழிலாளர் இயக்கம் அவருக்கு வெறுத்ததற்கு அது யூதர்களால் தலைமை தாங்கப்பட்டதால் அல்ல; அவருக்கு யூதர்கள் வெறுத்ததற்கு அவர்கள் தொழிலாளர் இயக்கத்துக்குத் தலைமை தாங்கியதேயாகும்."

ஒரு விடயம் உறுதியானதென ஹெயிடன் முடிபு செய்தார்: அடோல்வ் ஹிட்லரின் யூதர் எதிர்ப்பை கொதிக்கச் செய்தது முதலாளித்துவ ரொத்சைல்ட் அல்ல; சோசலிஸ்ட் கார்ள் மார்க்சாகும்."

பேராசிரியர் கோல்ட்ஹகன் ஹெயிடன் எழுதிய ஹிட்லரின் வாழ்க்கை வரலாற்றைக் கவனமாக வாசிப்பதன் மூலம் புத்திஜீவி ரீதியில் பயனடைய இடம் இருந்தது. ஆனால் அவர் அவ்வாறு செய்திருந்தால் அவர் எழுதி வாய்ப்பு இருந்தது முற்றிலும் வேறுபட்ட ஒரு நூலாகும். அதன் மூலம் அவருக்கு (Hitler's Willing Executioners) ஹிட்லரின் விருப்புள்ள கொலையாளிகள். என்ற நூலின் மூலம் அவருக்குக் கிடைத்த தாராளமான பணம் கிடைக்காது போக இடமிருந்தது. வாழ்க்கையில் நாம் அனைவரும் இரண்டில் ஒன்றை தெரிவு செய்கின்றோம்.

## ஜேர்மன் தொழிலாளர் இயக்கத்தின் நெருக்கடி

முதலாம் உலக யுத்தத்துக்கு பின்னைய ஜேர்மனியில் யூதர் எதிர்ப்பு , சந்தேகத்துக்கு இடமற்ற விதத்தில் ஒரு பலம் வாய்ந்த சக்தியாகியது. எனினும் கோல்ட்ஹகன் என்னதான் சொன்னாலும் யூதர்கள் மீதான வெறுப்பு மட்டும் ஹிட்லர் ஆட்சிக்கு வருவதற்கான அரசியல் அடிப்படையை வழங்கிவிடவில்லை. நாசிகள் ஆட்சிக்கு வந்தது யூதர் எதிர்ப்பின் தடுக்க முடியாத அலை மீது ஏறிச் சவாரி செய்து கொண்டு அல்ல. நாஸி கட்சியின் சமூக அடிப்படைகள் பற்றிய கவனமான ஆய்வுகள் யூதர் எதிர்ப்பு அழைப்புக்கள் 1933க்கு முன்னர் வரையறுக்கப்பட்டதாக விளங்கியது என்பதை உறுதி செய்துள்ளது. உண்மையில் நாசிகளுக்கு அவர்களின் யூதர் எதிர்ப்பு சில மாகாணங்களில் அவர்களுக்கு இருந்து வந்த ஆதிக்கத்தைக் குறைத்து விட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. அந்தப் பிராந்தியங்களில் யூதர் எதிர்ப்பை வாந்தி எடுப்பதை கட்டுப்படுத்துமாறும் அவர்களின் பேச்சுக்களில் சகல யூதர் எதிர்ப்புக் குறிப்புக்களையும் தவிர்க்கும்படியும் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

எவ்வாறெனினும் 1933ல் ஜேர்மனியில் நிலவிய யூதர் எதிர்ப்பின் பரிமாணத்தை அளவிடுவது நாசிகளின் வெற்றியின் அர்த்தத்தினை தெளிவுபடுத்தி விடாது. யூதர் எதிர்ப்பின் தோற்றம் எந்தளவுக்கு வெறுப்புக்கு உள்ளானது என்பது ஒரு காரணியாக மட்டுமே விளங்கியது. அது எந்த விதத்திலும் ஜேர்மனியின் அரசியல் வாழ்க்கையில் முக்கிய காரணி ஆகிவிடவில்லை. வலதுசாரி அல்லது இடதுசாரி அரசியல் ஆட்சிகள் சனத்தொகைகியன் சகல குறைபாடுகளதும் வெறுப்புக்களதும் சில கூட்டு மொத்தத்தின் வெறும் உற்பத்தி அல்ல. அது இறுதி ஆய்வில் சமூகத்தின் முக்கிய வர்க்கங்களுக்கு இடையே அரசியல் போராட்டத்தில் உருவாக்கப்பட்ட ஏதேனும் ஒரு உறவின் வெளிப்பாடாகும். இந்தப் போராட்டங்களின் பெறுபேறுகளினுள் போட்டியிடும் வர்க்கங்களின் அரசியல் தலைமையின் தன்மையும் அவர்கள் தமது போராட்டத்தினை அடிப்படையாகக் கொள்ளும் வேலைத்திட்டமும் பிரமாண்டமான அர்த்தத்தினைப் பெறுகின்றது.

எந்த ஒரு தரப்பட்ட நாட்டிலும் யூதர் எதிர்ப்பின் தொகையை அளவீடு செய்ய முடியுமானால் இத்தொகை 1933 ஜேர்மனிக்கு குறையாத விதத்தில் 1917 ரூஷ்யாவிலும் இருந்தது என்பதை நிலைநாட்ட நன்கு இடமுள்ளது. எனினும் போல்ஷிவிக்குகளின் அரசியல் தீர்க்கமான தன்மையும் தெளிவும் நகர்ப்புற, கிராமப்புற குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினுள்-அதாவது யூதர்கள் சம்பந்தமாக அவ்வளவுக்கு அனுதாபம் காட்டாத பகுதியினரிடையே தமது ஆளுமையை நிலைநாட்டும் வல்லமையைத் தொழிலாளர் வர்க்கத்துக்கு வழங்குவதில் தீர்க்கமான பாத்திரத்தினை ஆற்றியது.

ரூஷ்யாவில் 1917ன் அரசியல் போராட்டங்கள் முற்றுப்பெற்றது பாசிஸ்டுகளின் வெற்றியோடு அன்றி சோசலிஸ்டுகளின் வெற்றியோடாகும்.

பாசிஸ்டுகளின் வெற்றி யூதர் எதிர்ப்பின் நேரடியானதும் தவிர்க்க முடியாததுமான விளைவு அல்ல. ஆனால் வர்க்கப் போராட்டத்தினால் உருவமைக்கப்பட்ட ஒரு அரசியல் போக்கின் பெறுபேறாகும். இந்தப் போக்கில் தீர்க்கமான காரணியாக விளங்கியது ஜேர்மன் சோசலிஸ்ட் இயக்கத்தின் நெருக்கடியாகும். இந்த நெருக்கடி அனைத்துலக சோசலிசத்தின் ஒரு பரந்த அரசியல் நெருக்கடியின் ஒரு பாகமாகும் என்பதைச் சுட்டிக் காட்டியாக வேண்டும்.

ஹிட்லரின் எழுச்சி எதிர்த்து நிற்கமுடியாத ஒன்றாக இருக்கவில்லை. அவரின் வெற்றி தவிர்க்க முடியாத ஒன்றாகவும் இருக்கவில்லை. யுத்தத்துக்குப் பிந்திய முழுக் காலப்பகுதியிலும் பரந்த சோசலிச, கம்யூனிஸ்ட் கட்சிகள் கதிகலங்கிப் போன பரந்த மக்களுக்கு முதலாளித்துவம் சிருஷ்டித்த பேரழிவில் இருந்து தப்புவதற்கான ஒரு பாதையை காட்ட அரசியல் ரீதியில் வங்குரோத்து அடைந்தவையாகவும் முற்றிலும் இலாயக்கற்றவையாகவும் போனதன் பின்னரே நாஸிகள் ஆட்சிக்கு வர முடிந்தது.

இந்த விரிவுரையின் வரம்பினுள் ஜேர்மன் தொழிலாளர் இயக்கத்தின் நெருக்கடியினை சுருக்கமாக மட்டுமே ஆய்வு செய்ய முடியும்.

1914 ஆகஸ்டில்- மாபெரும் யுத்தத்தின் வெடிப்பின் பின்னர் சமூக ஜனநாயகம் புரட்சிகரக் கொள்கைகளைக் கைவிட்டுவிட்டு, ஜேர்மன் அரசாங்கத்தின் யுத்தக் கடன்களுக்கு ஆதரவாக வாக்களித்தது. இந்தக் காட்டிக்கொடுப்பு- பல வருடகால சந்தர்ப்பவாத சீரழிவின் பெறுபேறாக ஒரு புரட்சிக் கட்சி என்ற முறையில் சமூக ஜனநாயகக் கட்சியின் முடிவைச் சுட்டிக் காட்டியது. இதில் இருந்து சமூக ஜனநாயகக் கட்சி மிகவும் உக்கிரமான முறையில் ஒரு முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் சிகரமாக அப்பட்டமாகச் செயற்பட்டுவந்தது. சமூக ஜனநாயகக் கட்சி முதலாளி வர்க்க முகாமினுள் சென்றமை 1918-19ம் ஆண்டுச் சம்பவங்கள் மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

1918 நவம்பர் புரட்சி மூலம் ஆட்சிக்குக் கொணரப்பட்ட சமூக ஜனநாயகக் கட்சி அரசாங்கம் தொழிலாளர் வர்க்கத்தினை அரசியல் , உடல் ரீதியில் அடியோடு நிராயுதபாணியாக்குவதிலும் முதலாளித்துவ ஆட்சியை கட்டிக் காப்பதிலும் தன்னை அர்ப்பணம் செய்தது. 1919 ஜனவரியில் அது ஸ்பார்ட்டகஸ் கிளர்ச்சியை நசுக்க ஒழுங்குகள் செய்ததோடு , கார்ள் லீப்நேக்டையும் றோஸா லக்சம்பேர்க்கையும் படுகொலை செய்ய உத்தரவிட்டது.

போல்ஷிவிக் புரட்சியின் வெற்றி ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியை (KPD) அமைப்பதற்கு அரசியல் உத்வேகத்தை வழங்கியது. ஆனால் ஆரம்பத்தில் இருந்து கட்சி முடிவற்ற அரசியல் தலைமை நெருக்கடியினால் பீடிக்கப்பட்டது. ஒரு விதத்தில் இது றோஸா லக்ஷம்பேர்க்கின் இழப்பில் இருந்து ஒரு போதும் தலையெடுக்கவில்லை. அவரின் இடத்தை எடுக்க அவருடன் ஒப்பிடத்தக்க அனுபவமும் திறமையும் கொண்ட ஒரு தலைவர் இருக்கவில்லை. போல்ஷிவிக் கட்சியின் அனுபவம் சுட்டிக்காட்டியது போல் புரட்சிகரத் தலைமையை அபிவிருத்தி செய்வது என்பது மாதம் அல்ல வருடக்கணக்காக அவசியப்பட்ட நீண்டதும் கஷ்டமானதுமான ஒரு போக்காகும்.

எனவே பிரான்சு ரூர் பிராந்தியத்தினை ஆக்கிரமித்துக் கொண்டதன் பின்னர் ,1923ல் வகித்துவந்த புரட்சிகர நெருக்கடிக்கு ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சி (KPD) முற்றிலும் தயார் இல்லாமல் இருந்தது. அதி உயர்ந்த பணவீக்கத்தின் வெடிப்பு மத்தியதர வர்க்கங்களை நாசமாக்கியது. சமூக ஜனநாயக கட்சியின் ஆளுமைக்குக் குழிபறித்தது. ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவான ஒரு சக்திவாய்ந்த எழுச்சியை தோற்றுவித்தது.

ஜேர்மனியில் ஒரு சமூகப் புரட்சிக்கான சகல நிலைமைகளும் -ஒரு அரசியல் ரீதியில் முதிர்ச்சி கண்டதும் தீர்க்கமுமான தலைமை என்ற ஒன்றைத் தவிர-இருந்து வந்தன. 1923 அக்டோபரில் நெருக்கடி உச்சக் கட்டத்தை அடைந்ததும் வீமர் அரசாங்கத்தை தூக்கி வீசுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படும் எனப் பரந்த அளவில் எதிர்பார்க்கப்பட்டது. உண்மையில் ஆயுதக் கிளர்ச்சிக்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அது கடைசி நிமிடத்தில் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் பதட்டமும் தயக்கமும் கொண்ட தலைமையினால் இரத்துச் செய்யப்பட்டது. திட்டங்களின் மாற்றங்களைப் பற்றி அறிவிக்கப்படாத ஹம்பேர்க்கில் கம்யூனிஸ்ட் தொழிலாளர்கள் ஆயுதக் கிளர்ச்சியை ஆரம்பித்தனர். ஆனால் இந்தத் தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கை இலகுவில் நசுக்கப்பட்டது. தாம் தூக்கி வீசப்படுவது தவிர்க்கப்பட முடியாதது என ஒரு சில தினங்களுக்கு முன்னர் புரிந்து கொண்டிருந்த முதலாளித்துவ அரசாங்கம் மீண்டும் மூச்சுப்பிடித்தது. நெருக்கடி முற்றுப்பெற்றது. முதலாளி வர்க்க ஆட்சி ஸ்திரப்பட்டது.

அதைத் தொடர்ந்து வந்த வருடங்களில் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் வாழ்க்கை சோவியத் யூனியனில் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வளர்ச்சி கண்டு வந்த செல்வாக்கினாலும் லியொன் ட்ரொட்ஸ்கி தலைமையிலான இடதுசாரி எதிர்க்கட்சி நசுக்கப்ப்டடதன் மூலமும் உருவமைக் கப்படடது.


1923 தொழிலாளர் வர்க்கத்தின் தோல்வியைத் தொடர்ந்து வந்த ஸ்திரப்பாட்டினதும் செழிப்பினதும் குறுகிய காலப்பகுதி 1929 அக்டோபர் வோல் ஸ்ரீட் வீழ்ச்சியோடும் உலகப் பொருளாதார மந்தத்தின் ஆரம்பத்துடனும் ஒரு முடிவுக்கு வந்தது. ஜேர்மன் கைத்தொழில்கள் வீழ்ச்சி கண்டன. பல இலட்சக் கணக்கானோர் வேலைகளை இழந்தனர். மத்தியதர வர்க்கம் நாசமாக்கப்பட்டது. நாஸிக் கட்சி மிகவும் துரிதமாக பரந்த ஆதரவைத் திரட்டிக் கொள்வதைச் சாத்தியமாக்கிய நிலைமைகள் இவைதான்.

ஆனால் தொழிலாளர் வர்க்கத்தின் இரண்டு அரசியல் அமைப்புக்களான சமூக ஜனநாயகக் கட்சியும் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியும் ஜேர்மன் அரசியலில் பிரமாண்டமான காரணிகளாகத் தொடர்ந்தும் இருந்து வந்தன. இவ்விரு கட்சிகளும் இலட்சோப இலட்சம் தொழிலாளர்களின் விசுவாசத்தைக் கொண்டிருந்தன. பாசிச எதிர்ப்புரட்சி ஆபத்துக்கு முகம் கொடுத்த நிலைமையில் - தொழிலாளர் இயக்கத்தின் அவசர மூலோபாய பணி நாசிகளுக்கு எதிரான ஒரு பொதுப் போராட்டத்தில் அதனது சக்திகளை அணிதிரட்டுவதாக விளங்கியது.

10ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# பாசிசமும் மாபெரும் யூத மக்கட் படுகொலைகளும்

9ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் சமூக ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் முதலாளி வர்க்க வீமர் ஆட்சியை காப்பதற்கு தம்மை அர்ப்பணம் செய்தனர். ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியுடனான சகல அரசியல் கூட்டுக்களையும் எதிர்த்தனர். பிரவுண் சேர்ட் (Brown Shirt) காரர்களின் தாக்குதல்களுக்கு எதிரான ஒரு ஒன்றுபட்ட பந்தோபஸ்தை அணிதிரட்டும் நோக்கத்துக்காகவும் அதை எதிர்த்தனர்.

சமூக ஜனநாயகக் கட்சியின் தடைகள் நிறைந்த நிலைப்பாட்டை நோக்காது கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு கட்சிகளுக்கும் இடையேயுமான அரசியல் முரண்பாடுகளை நோக்காது நாசி ஆபத்துக்கு எதிராக இரண்டு கட்சிகளதும் ஒன்றுபட்ட நடவடிக்கைகளின் அவசியத்தை ஏற்கும்படி சமூக ஜனநாயகக் கட்சி தலைவர்களுக்கு பகிரங்கமாக அழைப்பு விடுப்பதே செய்ய வேண்டியிருந்தது.

எவ்வாறெனினும் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்டாலினின் பணிப்பைத் தொடர்ந்து சமூக ஜனநாயகவாதிகளுக்கும் பாசிஸ்டுகளுக்கும் வாய்ப்பை வழங்கிய அரசியல் விதிமுறையைக் கடைப்பிடித்தது. 1928ல் ட்ரொட்ஸ்கியும், இடதுசாரி எதிர்க் கட்சியும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தும் கம்யூனிஸ்ட் அகிலத்தில் இருந்தும் வெளியேற்றப்பட்ட ஒரு ஆண்டின் பின்னர் ஸ்டாலினிஸ்டுகள் தீர்க்கமான புரட்சிகரப் போராட்டங்களின் மூன்றாவது காலப்பகுதி எனப்படுவதன் ஆரம்பத்தை திடீரென அறிவித்தனர். இந்தக் கொள்கை பெருமளவுக்கு சோவியத் யூனியனில் கூட்டுப் பண்ணைமயமாக்கத்தை இட்டுநிரப்புவதை நியாயப்படுத்தவும் அறிமுகம் செய்யப்பட்டது. அதனது நடைமுறை அமுலில் இந்த மூன்றாம் காலப்பகுதி சமூக ஜனநாயகம் பாசிசத்தின் இணைப்பேயன்றி வேறொன்றும் அல்ல எனக் கண்டனம் செய்வதை பெருமளவில் உள்ளடக்கி இருந்தது. இதன்படி ஜேர்மனியில் சமூக ஜனநாயகக் கட்சியுடன் ஐக்கிய முன்னணிக்குச் செல்ல இடமளிக்க முடியாது எனவும் அது பாசிசத்தின் இடதுசாரிக் கன்னை மட்டுமே எனவும் ஸ்டாலினிஸ்டுகள் வலியுறுத்தி வந்தனர். சமூக ஜனநாயகவாதிகளுக்கு "சமூக பாசிஸ்டுகள்" எனப் பெயர் சூட்டப்பட்டது.

இந்தக் கொலைகாரத்தனமானதும் பொறுப்பற்றதும் முற்றிலும் வெறிகொண்டதுமான கொள்கை சோசலிசத் தொழிலாளர் இயக்கம் பாசிசத்துக்கு எதிராக ஒரு ஒன்றுபட்ட போராட்டத்தில் ஈடுபடும் சாத்தியத்தினை புறக்கணிப்பதாகவே இருந்தது.

ஹிட்லர் 1933 ஜனவரியில் ஜேர்மன் ச்ான்சலராக(அரசின் தலைவர்) நியமனம் செய்யப்படுவதற்கு முன்னைய அரசியல் நிகழ்வுகள் பற்றிய அவரது சுருக்கமான ஆய்வில் கோல்ட்ஹகன் 1932 ஜூலை தேர்தலில் நாஸிகள் ஏறக்குறைய 14 மில்லியன் வாக்குக்களை- வாக்காளர்களில் 37.4 வீதத்தினை பெற்றதாக குறிப்பிடுகின்றார். தடித்த எழுத்துக்களில் இந்த இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருப்பது நாஸி ஆதரவு மனோநிலை அதிகரித்த விதத்தினைத் தூக்கிப் பிடித்துக் காட்டுவதற்கேயாகும்.

கோல்ட்ஹகன் சமூக ஜனநாயகக், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு கிடைத்த வாக்குக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடவில்லை. உண்மையில் சமூக ஜனநாயகக்கட்சி 7.95 மில்லியன்களையும் (21.6% ) கம்யூனிஸ்ட் கட்சி 5.2 மில்லியன்களையும் (14.6%) பெற்றன. அதாவது, இரண்டு ஜேர்மன் சோசலிஸ்ட் கட்சிகளும் கூட்டாகப் பெற்ற வாக்குக்களின் எண்ணிக்கை சுமார் 13.2 மில்லியன்கள் அல்லது 36.2 வீதமாகும். வேறு வார்த்தையில் சொன்னால் ஜேர்மனியில் அரசியல் வாழ்க்கை சோசலிசப் புரட்சிக்கும் பாசிச எதிர்ப்புரட்சிக்கும் இடையே துருவப்படுத்தப்பட்டது.

கோல்ட்ஹகன் குறிப்பிட்டிராத அடுத்த தேர்தல் 1932 நவம்பரில் நடைபெற்றது. அதில் நாஸிகளின் வாக்குக்கள் பிரமாண்டமான முறையில் 2 மில்லியன்களால் வீழ்ச்சி கண்டது. அவர்களின் மொத்த வாக்குக்கள் 11.73 மில்லியன்கள் (33வீதம்) .சமூக ஜனநாயகக் கட்சி வாக்குக்கள் 7.24 மில்லியன்களுக்கு(20.4%) வீழ்ச்சி கண்ட அதேவேளையில் கம்யூனிஸ்ட் கட்சியின் வாக்குக்கள் 5.98 மில்லியன்களாக(16.9%) அதிகரித்தது. இரண்டு சோசலிஸ்ட் கட்சிகளதும் மொத்த வாக்குக்கள் இப்போது பாசிஸ்டுகளைக் காட்டிலும் அரை மில்லியன் அதிகமானதாகும். நூற்றுவீதத்தில் சொன்னால் சமூக ஜனநாயகக் கட்சி- கம்யூனிஸ்ட் கட்சி மொத்த வாக்குக்கள் 37.3 வீதமாகும்.

இந்தத் தேர்தல் நாஸிகளுக்கு ஒரு அளவிட முடியாத ஒரு அரசியல் பேரழிவாகும். இது அவர்களின் பெருக்குக் காலம் கடந்து போய்விட்டதையும் ஹிட்லரின் அரசியல் உபாயங்கள் காலக்கெடுக்களதும் ஈடாட்டங்களதும் தவறான சேர்க்கை- நாஸிகளுக்கு பெரும் நஷ்டம் ஈட்டிக் கொடுத்ததையும் காட்டியது.

"நவம்பர் தேர்தல் ஹிட்லருக்கும் அவரின் கட்சிக்கும் ஒரு தலை கிறுகிறுக்கும் அடி கொடுத்தது" என புகழ்பெற்ற அமெரிக்க வரலாற்றாசிரியரான ஹென்றி ஆஸ்பி டேர்னர் நாசிகள் ஆட்சிக்கு வந்த கடைசிக் காலகட்டம் பற்றிய தமது சமீபத்திய ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். "இதற்கு முன்னைய மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து ஒரு நாடகப் பாணியில் ஒரு தொகை வெற்றிகளுடாகப் பயணம் செய்ததன் பின்னர் நாஸிகளின் கல் உருளை ஸ்தம்பித்தது. நாஸிகள் விரைவில் ஆட்சிக்கு வந்து ஜேர்மனியின் நிலைமைக்கு உடனடியானதும் தீர்க்கமானதுமான தீர்வுகள் வழங்குவர் என எதிர்பார்த்த அவர்களுக்கு ஜூலை தேர்தலில் வாக்களித்த பலர் சான்சலர் பதவியை கைப்பற்றும் ஹிட்லரின் முயற்சி தோல்வி கண்டதோடு எதிர்பார்ப்புக்கள் சிதறுண்ட நிலையில் விலகிக் கொண்டனர்." 12

முற்றிலும் வாக்குக்களின் எண்ணிக்கையைக் கொண்டு நோக்கினும் கூட சோசலிசத் தொழிலாளர் இயக்கம் ஹிட்லர் சான்சலர் பதவிக்கு நியமனம் செய்யப்படும் சமயத்திலும் கூட பாசிஸ்டுகளைக் காட்டிலும் ஒரு மாபெரும் எண்ணிக்கையிலான சக்திகளைப் பிரதிநிதித்துவம் செய்தது. ஒரு சமூகச் சக்தி என்ற முறையில் கைத்தொழிலினுள் ஒரு தீர்க்கமான இடத்தைப் பெற்றுக் கொண்டிருந்த சோசலிசத் தொழிலாளர் இயக்கம் உள்ளார்ந்த வித்தில் ஒரு முடிவற்ற மாபெரும் சக்தியாக விளங்கியது. 1931ல் ட்ரொட்ஸ்கி எழுதியது போல்: "தேர்தல் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் ஆயிரம் பாசிஸ்ட் வாக்குக்கள் ஆயிரம் கம்யூனிஸ்ட் வாக்குக்களின் நிறையையே கொண்டுள்ளது. ஆனால் புரட்சிகர போராட்டங்களின் அளவீடுகளினுள் ஒரு பெரும் பக்டரியில் ஒரு ஆயிரம் தொழிலாளர்கள் ஒரு ஆயிரம் சிறிய அதிகாரிகள், எழுதுவினைஞர்கள், அவர்களின் மனைவியர்கள், அவர்களின் மாமிமார்களைக் காட்டிலும் ஒரு நூறு மடங்கு பெரிய சக்தியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. பாசிஸ்டுகளின் மாபெரும் எண்ணிக்கை மனித புழுதிகளையே உள்ளடக்கியள்ளது."13

எனினும் தொழிலாளர் வர்க்கத் தலைமையின் பொறுப்பற்ற, தோல்வி கண்ட கொள்கைகளினால் அந்த வர்க்கம் அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கப்பட்டது. ஹிட்லர் ஆட்சிக்கு வந்திருந்தாலும் கூட ஜனநாயக அரசியலமைப்புச் சட்டம் தொழிலாளர் வர்க்கத்துக்கு பாதுகாப்பு வழங்கும் என உத்தரவாதம் அளித்தபடி சமூக ஜனநாயகம் வைமர் குடியரசின் நாற்றம் கண்ட பிணத்துடன் ஒட்டிக் கொண்டது. கம்யூனிஸ்ட் கட்சி தனது வளர்ச்சி கண்டுவரும் ஒழுக்கக் கேட்டை வாயடிப்புக்கள் நிறைந்த கோசங்களின் பின்னணியில் மறைத்துக்கொண்டு தனது பேரழிவுமிக்க உபாயத்தை மாற்றிக் கொள்ள மறுத்துவிட்டது.

கடைசி விளையாட்டு 1933 ஜனவரி மாதத்தில் விளையாடப்பட்டது. தொழிலாளர் வர்க்கக் கட்சிகள் இரண்டும் கண்டிப்பான எதிர்ப்பைக் காட்ட முடியாத அளவுக்கு ஸ்தம்பித்துப் போய்விட்டன என்ற முடிவுக்கு வந்த ஜேர்மன் முதலாளி வர்க்கம் அரசியலமைப்பு சட்ட வழிகள் ஊடாக ஆட்சியைக் கைப்பற்றுமாறு ஹிட்லருக்கு அழைப்பு விடுத்தது. ஒரு துப்பாக்கி வேட்டுத் தன்னும் தீர்க்கப்படாமேலே ஹிட்லர் 1933 ஜனவரி 30ம் திகதி சான்சலர் பதவிக்கு நியமனம் பெற்றார்.

தொழிலாளர் வர்க்கம் வரலாற்றில் மாபெரும் தோல்விக்கு முகம் கொடுத்திருந்தது. இந்தத் தோல்வி அடுத்து வந்த பேரழிவுக்கு வழிவகுத்தது.

## சமாதானப் புரட்சி?

கோல்ட்ஹகன் தமது நூலின் இறுதியில் எழுதுகையில் : நாஸி ஜேர்மன் புரட்சி... அசாதாரணமான ஒரு புரட்சியாகியது. ஏனெனில் அந்த நாட்டினுள் அது நிரூபிக்கப்பட்டதாவது ...முதல் சில வருடங்களில் அரசியல் இடதுசாரிகளை ஒடுக்குவது இடம்பெற்றாலும் பிரமாண்டமான பலாத்காரமும் வன்முறையும் இல்லாமல் சாதிக்கப்பட்டது... பரந்த அளவில் நோக்கின் அது ஜேர்மன் மக்கள் தமது சுய விருப்பில் கலந்து கொண்ட ஒரு சமாதானப் புரட்சியாகியது. உள்நாட்டு அடிப்படையில் நோக்கின் நாஸி ஜேர்மன் புரட்சி முழுமையாக நிறைவேறியது." ( பக்கம் .456)


அந்த வார்த்தைகளை வாசிக்கும் வரை நான் கோல்ட்ஹகனை பெருமளவுக்கு ஒரு பெரிதும் கவலையும பரிதாபமுமான ஒரு புள்ளியாகவும் ஐரோப்பிய யூதர்களின் தலைவிதியைப் பற்றி ஆய்வு செய்ததால் உளவியல் ரீதியில் இல்லாது போனாலும் புத்திஜீவி ரீதியில் மோசமான வேதனைக்குள்ளான ஒரு இளைஞனாக நோக்கத் தள்ளப்பட்டேன்.ஆனால் இந்தப் பந்திகளில் மிகவும் வேறுபட்டவை தலைநீட்டுகின்றன. நாஸிகளை அது கையாண்ட விதம் தவிர நாஸி "புரட்சி" - கோல்ட்ஹகன் "எதிர்ப்புரட்சி" என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை- பொதுவில் பயனுள்ளதாக இருந்தது. "அரசியல் இடதசாரிகளை அடக்கியமை" என்ற வசனத்தை அவர் அடைப்புக் குறிக்குள் புகுத்தியிருப்பது இது எந்த விதத்திலும் ஒரு பெரும் விவகாரமாக இருக்கவில்லை எனக் காட்டும் வகையிலாகும்.

நாஸிகள் ஆட்சியைக் கைப்பற்றியமை "ஜேர்மன் மககள் தமது சுய விருப்பில் கலந்து கொண்ட ஒரு சமாதானப் புரட்சி" ஆகியது என உரிமை கொண்டாடுவது ஒரு கீழ்த்தரமான பொய்மைப்படுத்தலாகும். "அரசியல் இடதுசாரிகளை அடக்கியும்" என கோல்ட்ஹகன் குறிப்பிடுவது உண்மையில் இலட்சோபலட்சம் தொழிலாளர்களதும் ஒரு நீதியானதும் கண்ணியமுமான உலகுக்காக நின்றுவந்த ஜேர்மன் புத்திஜீவிகளினதும் சிறந்த மூலகங்களினதும் நம்பிக்கைகளையும் அபிலாசைகளையும் பிரதிநிதித்துவம் செய்து வந்த பரந்த சோசலிஸ்ட் கட்சிகளை உடல்ரீதியாக நிர்மூலமாக்குவதை உள்ளடக்கி இருந்தது. ஜேர்மன் சோசலிசம் ஒரு அரசியல் இயக்கம் மட்டுமல்ல: அது அதன் உள்வாரி முரண்பாடுகள் என்னவாக இருந்த போதிலும் மனித புத்திஜீவியத்தினதும் கலாச்சாரத்தினதும் அதிசிறந்த புஷ்பங்கள் பெறுவதற்கு ஊக்கமளிப்பவர்களது வெளிப்பாடாகவும் விளங்கியது. அதை அழிப்பதற்கு காட்டுமிராண்டி விதிமுறைகள் அவசியப்பட்டது. இதில் நாஸிகள் மேம்பட்டு விளங்கினர்.

நூல்களை எரித்துத் தள்ளியமை, விஞ்ஞானிகள், கலைஞர்கள்,எழுத்தாளர்கள் ஓட்டம் பிடித்தமை, ட்ச்சோ (Dachau) சித்திரவதைக் கூடங்களை அமைத்தமை, பல்லாயிரக் கணக்கான இடது கன்னை அரசியல் எதிர்ப்பாளர்களை சிறையிடுதல், தேசிய சோசலிஸ்டுகள் (நாஸிகள்) தவிர ஏனைய சகல அரசியல் கட்சிகளையும் சட்ட விரோதமாக்குதல், தொழிற் சங்கங்களை தவிடு பொடியாக்குதல் என்ற இவை எல்லாம் நாஸி ஆட்சியின் ஒரு சில மாதங்களுக்குள் ஈட்டப்பட்ட முக்கிய "சமாதான புரட்சியின்" சாதனைகளாகும்.

நாசிகள் கட்டவிழ்த்துவிட்ட பயங்கரங்களுக்கு இடையேயும் அங்கு உறுதியானதும் கணிசமானதுமான எதிர்ப்பு இருந்து வந்தது.

"சமூக ஜனநாயகவாதிகளதும் கம்யூனிஸ்ட்டுகளதும் ஒரு கணிசமான சிறுபான்மையினர்" வரலாற்றாசிரியர் எப்.எல். கார்ஸ்டன் எழுதுவது போல் "அடிபணிந்து போகவோ அல்லது ஆட்சியாளர்கள் அவர்களுக்கு உத்தரவிடுவது அனைத்தையும் சாத்வீகமாக ஏற்கவோ விரும்பவில்லை. ஆட்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து வந்த பரந்த அளவிலான பயங்கரங்களும் ஆரம்ப மாத காலப் பரந்த கைதுகளும் அவர்களுக்கு போதிய அளவில் புகட்டியது. பெரும் எண்ணிக்கையிலானோர் இரகசிய குழுக்களை அமைத்தும் இரகசிய துண்டுப் பிரசுரங்களையும் பத்திரிகைகளையும் அச்சடித்து விநியோகித்தும் தம்மால் முடிந்த மட்டும் நாஸி பிரச்சாரங்களை தடைப்படுத்தியும் அதற்குப் பதிலளித்தனர். 1933லும் 1934லும் நூற்றுக் கணக்கான இரகசியக் குழுக்கள் ஜேர்மன் முழுவதும் தோன்றின. அவை இவற்றுக்கு சமமாக



நாஸிகளால் பலியெடுக்கப்பட்ட மக்களின் திருமண மோதிரங்கள்

14ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

# மத்திய வங்கி ஊழியர் சங்கத் தேர்தல்–1997–98

# தலைவர் பதவிக்கு சோ.சக. எம்.ஜி.கிரிபண்டா போட்டி

மத்திய வங்கி ஊழியர் சங்கத் தேர்தல் இம்முறை சங்கத்தின் வரலாற்றில் என்றும் இடம்பெற்றிராத பிரமாண்டமான தாக்குதலைத் தோற்கடிக்கும் பொறுப்பு எம்முன்னால் தோன்றியுள்ள ஒரு நிலையில் நடைபெறுகின்றது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் தூண்டிவிடப்பட்டு, மத்திய வங்கி நிர்வாகத்தினால் நடைமுறைக்கிடப்பட்ட அரச வேட்டையைத் தோற்கடிப்பது என்பது தொழிற்சங்க உரிமைகள் உட்பட்ட தொழிலாளர் வர்க்கத்தின் ஜனநாயக உரிமைகளைக் காக்கும் ஒரு தீர்க்கமான போராட்டமாகும். மத்திய வங்கி ஊழியர்களின் உரிமைகளைக் காக்கவும் வெற்றி கொள்ளவும் இடைவிடாது போராடிய சோசலிச சமத்துவக் கட்சியின் எமது குழு இம்முறை தேர்தலுக்கு நிற்பது. இந்த வேட்டைக்கு எதிராக அரசியல் ரீதியிலும் சட்டரீதியிலும் மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஜனநாயக உரிமைகளைக் காக்க முன்னணியில் நிற்கும் ஒரே அமைப்பான அந்த கட்சியின் பிரதிநிதிகளாக ஆகும். சங்கத்தின் இன்றைய தலைமையான அந்திராதி குழுவோ அல்லது வேறு எந்த ஒரு குழுவோ சங்கத்துக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள அரச வேட்டையைத் தோற்கடிக்க இலாயக்கான எந்த ஒரு வேலைத் திட்டத்தையும் சமர்ப்பித்தது கிடையாது என்பதை நாம் உங்களுக்குக் கூறியாக வேண்டும்.

ஜூலை 2ம் திகதி கைத்தொழில் சட்ட நிறுவனத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் ம.வ.ஊ.ச.த்துக்கு தடை உத்தரவு பிறப்பித்தது பற்றி சட்ட மா அதிபர் பேசியதை நீங்கள் வாசித்திருப்பீர்கள் என நாம் நினைக்கின்றோம். இலங்கையின் வரலாற்றில் முதற்தடவையாக தொழிற்சங்கத்துக்கு எதிராக தடை உத்தரவு பிறப்பிக்கத் தாம் நேரடியாக தலையிட்டு, நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் புளுகிக் கொட்டியுள்ளார். "பொதுஜன அவசியங்களை கணக்கில் எடுக்கும்" பேரில் தமது உரிமைகளுக்கான போராட்டத்தில் ஈடுபடும் தொழிலாளர்களையும் அவர்களின் அமைப்புக்களையும் நசுக்க அரசாங்கத்தின் சார்பில் சட்ட மா அதிபர் திணைக்களம் நேரடியாகத் தலையிட்டுள்ளது. இதனை சட்ட மா அதிபரின் பேச்சு எடுத்துக் காட்டுகின்றது.

இந்தத் தாக்குதலாக இருக்கட்டும் அல்லது சம்பளக் கோரிக்கையின் பேரில் நடாத்திய பிரச்சாரத்தினை நசுக்கித் தள்ள எடுத்த நடவடிக்கையாக இருக்கட்டும் இவை எதுவும் மத்திய வங்கி ஆளுனரின் வெறும் கயமைத்தனத்தினால் ஏற்பட்டவையாகக் காட்டி அவற்றின் முக்கியத்துவத்தை தரம் குறைத்துவிட சங்கத்தின் இன்றைய அந்திராதி தலைமையிலான பகுதியினர் எடுக்கும் முயற்சி தவறானது; மோசடியானது. பொதுஜன முன்னணி அரசாங்கம் தொழிலாளர் போராட்டங்களை நசுக்கிவிட அரசின் மேல்தட்டு அதிகாரிகளையும் திரட்டிக் கொண்டு நீண்டகாலமாக தயார் செய்து வந்த தாக்குதலை நடைமுறைக்கிடுவது இன்று மத்திய வங்கியினுள் ஆரம்பமாகி உள்ளது.

தொழிலாளர் போராட்டங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த, மின்சார சபையிலும் உருக்கு கூட்டுத்தாபனத்திலும் செய்தது போல் தொழிலாளர்களை நசுக்கித் தள்ளிவிட மிலேச்ச இராணுவ-பொலிஸ் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொதுஜன முன்னணி அரசாங்கம் இப்போது நாட்டின் சாதாரண சட்டங்களில் இடம்பெறாதவற்றைக் கூட முன்னணிக்குத் தள்ளி ஜனநாயக உரிமைகளைத் தவிடு பொடியாக்கும் இந்தப் புதிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது. யூ.என்.பி.தலைவர்களுடன் இருதரப்பு உடன்படிக்கை செய்து கொண்டு ஆரம்பமாகியுள்ள இந்தத் தாக்குதல் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்கித் தள்ளி, அவர்களின் தொழில், சம்பளம், சேவை நிலைமைகள், நலன்புரி சேவைகள், உதவி மானியங்களைத் துடைத்துக் கட்டவும் சர்வாதிகார ஆட்சியின் கீழ் ஏகாதிபத்தியவாதிகளிற்கு சுரண்டலுக்கு வாய்ப்பான எந்த நிலைமையையும் சிருஷ்டித்துக் கொடுக்கவும் செய்யும் திட்டத்தின் ஒரு பாகமாகும். இவை ஏகாதிபத்தியவாதிகளதும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளதும் கட்டளைகளாகும்.



எம்.ஜீ. கிரிபண்டா

எமது உரிமைகளின் பேரில் நாம் செய்த பிரச்சாரம் 'சட்டவிரோதமானது', 'தொழில் சாராதது' என்ற பிற்போக்கு பொய்யினை அளந்து கொண்டுள்ள மத்திய வங்கி நிர்வாகம் இப்போது சங்கத்துக்கு எதிரான தடை உத்தரவை பிறப்பித்துக் கொண்டு செய்து வரும் நடவடிக்கைகளைப் பாருங்கள். சம்பள முரண்பாட்டினை போக்கும் பொய்யின் கீழ் சம்பள முரண்பாட்டினை விரிவுபடுத்தும் அற்ப "சம்பள அதிகரிப்பினை" மத்திய வங்கி ஊழியர்கள் மீது திணிக்க நிர்வாகிகள் முயற்சிக்கின்றார்கள். வாழ்க்கைச் செலவு புள்ளிக்கு வழங்கும் கொடுப்பனவை வெட்டித்தள்ளும் இந்த சம்பள அதிகரிப்பு எனப்படுவது உண்மையில் ஒரு சம்பள வெட்டாகவே அமுலுக்கு வரும். ஊழியர்களின் போராட்டங்களில் வங்கியில் வேலை செய்வதற்காக ரூபா.200 நாள் சம்பளத்துக்கு -8மணித்தியாலத்துக்கும் அதிகமாக வேலை வாங்கவென ஊழியர்கள் சில கிளைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள். இது காட்டுவது என்ன? இது ஊழியர்களின் போராட்டங்களைத் தவிடு பொடியாக்குவதற்கான தயாரிப்பு மட்டும் அல்ல. எதிர்காலத்தில மத்திய வங்கி ஊழியர்களின் சேவை நிலைமைகளை ஆதாளபாதாளத்திற்குத் தள்ளுவதற்கான தயாரிப்புமாகும். மத்திய வங்கி ஊழியர்களின் பிரச்சார இயக்கத்தினை 1996 ஜனவரி 31ம் திகதி மத்திய வங்கியினை நாசமாக்க முயற்சித்த பயங்கரவாதிகளுக்கு செய்யும் உதவியாக சேறடித்து, இனவாத யுத்தத்தின் சுமையினால் இதனை நசுக்கித் தள்ளிவிட இந்த நிர்வாகிகள் துண்டுப்பிரசுரம் வெளியிட்டது. இது அரசாங்கத்தின் பிரச்சாரத்தினை முன்னெடுப்பதாக விளங்கியது. மத்திய வங்கியின் சில கிளைகளைச் சேர்ந்த ஊழியர்களை போராட்டங்களின் போது இராணுவம் கைது செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்த விதத்தினை கடந்த பிரச்சாரத்தின் போது நாம் கண்டு கொள்ள முடிந்தது.

## நிஜ நிலைமை

நாம் முகம் கொடுத்துள்ள இந்த நிஜ நிலைமையைக் குறைத்து எடைபோடுவோர் நிச்சயமாக உண்மையைப் பூசிமெழுக முயற்சிக்கின்றனர். எமது பணி, இந்த மோசடிகளால் ஏமாந்து விடாது, அரசாங்கத்தினதும் மத்திய வங்கி நிர்வாகிகளதும் தாக்குதல்களில் இருந்து சங்கத்தைக் காக்க தொழிலாளர் வர்க்கத்தினது ஒத்துழைப்பை அணிதிரட்டப் போராடுவதேயாகும். சட்டரீதியில இந்தத் தாக்குதலுக்கு எதிராகப் போராடுவது, போராட்டத்துடன் இணைந்த ஒன்றாகும். "ஒருவருக்கு தொடுத்த தாக்குதல் அனைவருக்கும் தொடுக்கப்பட்ட தாக்குதலாகும்" என்ற தொழிலாளர் வர்க்க அடிப்படைக் கொள்கையின் அடிப்படையில் ஏனைய நிறுவனங்களின் தொழிலாளர்களின் பலம் வாய்ந்த இயக்கத்தினை ம.வ.ஊ.ச.த்துக்கு எதிரான அரச வேட்டையைத் தோற்கடிக்க அணிதிரட்ட ஊக்கத்துடன் தொழிற்பட வேண்டிய காலம் வந்து விட்டது.

ஆனால் மத்திய வங்கி ஊழியர் சங்கத் தலைமையில் உள்ள அந்திராதி குழுவின் நடவடிக்கைகள் இதற்கு முற்றிலும் வேறுபட்டவையாகும். சங்கமும் செயற்குழுவும் தடை உத்தரவுக்கு ஆட்பட்டு உள்ளதால் இத்தடவை அவர்களையே போட்டியின்றித் தெரிவு செய்வதன் மூலம் நிர்வாகத்துக்கு "எதிர்ப்பைக்" காட்ட வேண்டும் என்ற கருத்தை இக்குழு கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதற்கு முன்னர் இவர்கள் சங்கத்தின் தலைமையை வலதுசாரிக் குழு கைப்பற்றிக் கொள்ளப் போவதால் ஏனையவர்கள் நியமனப் பத்திரங்களை கொடுக்காமல் இருக்க வேண்டும் எனக் கூறிவந்தனர். கடந்த காலங்களில் எமது குழுவுக்கு எதிராக அந்திராதி குழுவுடன் சேர்ந்து நின்ற யூ.என்.பி, பொதுஜன முன்னணி கைக்கூலிகள் ஒரு சிலர் பொதுஜன முன்னணிக்கு பந்தம் பிடிக்கும் ஒரு அமைப்பை அமைத்துக்கொண்டு இருந்த போதிலும் சங்கத்தை நாசமாக்கும் வேலைத் திட்டத்திற்கு அவர்கள் தோள் கொடுத்துக் கொண்டுள்ளதால் தேர்தலுக்குத் தோற்ற முடியாது உள்ளது.

மீண்டும் தம்மையே பதவியில் இருத்தும்படி அந்திராதி குழு முன்னெடுத்துவரும் பிரச்சாரத்தின் அர்த்தம் என்ன? அரசாங்கம் தூண்டிவிட்டுள்ள வேட்டையின் நிச ஆபத்தை மூடிமறைக்கின்றதும் அந்த வேட்டையை தோற்கடிக்க எந்த ஒரு வேலைத் திட்டமும் கொண்டிராததுமான ஒரு தலைமையை சங்கத்தின் தலைமையில் இருத்த வேண்டும்! அது நிர்வாகிகளுக்கு எதிர்ப்புக் காட்டுவது அல்ல. ஒரு பெரும் உதவியாக முடியும். வலதுசாரிகளின் உதவியைப் போன்ற ஒரு உதவியாகும். வெறும் வாய்வீச்சுக்களின் மூலம் தமது பிற்போக்கு வேலைத்திட்டங்களைத் தோற்கடிக்க முடியாது எனவும் பொதுமக்களை தவறான வழியில் இட்டுச் செல்லும் அத்தகைய வாய் வீச்சுக்கள் தமக்கு உதவியாகும் எனவும் அறியாத எந்த ஒரு அரசாங்கமும் முதலாளித்துவ எஜமானும் இருக்க முடியுமா? மேலும் மேலும் தொழிற்சங்கவாத வாய்வீச்சுக்களை அவர்களிடம் இருந்து கறந்து கொள்ள நிர்வாகிகள் மேலும் செயற்படுவர். தொழிற் சங்கத்துக்கு எதிரான வேட்டைகள் ஆரம்பமாகி ஒன்றரை மாதங்கள் கழிந்து விட்டன. அதைத் தோற்கடிக்க எந்த ஒரு வேலைத் திட்டத்தினையும் இந்த தலைவர்கள் உங்களுக்கு வழங்கி உள்ளார்களா? "கிடையாது" என்பதே இதற்கான பதிலாகும்.

தொழிற்சங்க வாத பேரம்பேசல்கள் மூலம் முதலாளித்துவ அரசாங்கங்களிடம் இருந்தோ அல்லது முதலாளித்துவ எஜமானர்களிடம் இருந்தோ கோரிக்கைகளை வெற்றி கொள்ளவும், பாதுகாக்கவும் வாய்ப்பு இருந்து வந்த காலம் முற்றுப் பெற்றுவிட்டது. உலகம் பூராவும் சுரண்டலில் ஈடுபடும் மூலதனத்தின் அவசியங்களுக்கு ஏற்ப முதலாளித்துவ எஜமானர்களும் அரசாங்கமும் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளுக்கு உச்சி அடி கொடுக்க பாய்ந்து விழுந்துள்ளது. இந்த நிலைமையின் உள்ளேயே தொழிற்சங்கவாத பேரம்பேசும் வேலைத்திட்டம் வங்குரோத்து அடைந்துள்ளது. முதலாளித்துவ அரசாங்கம் தொழிலாளர் அமைப்புக்களை தவிடுபொடியாக்க ஆயுதம் தூக்கியுள்ள ஒரு நிலைமையில் அந்திராதி குழுவின் வங்குரோத்து இந்த இலட்சணத்தில் வெளியரங்குக்கு வந்துள்ளது.

இந்த நிலைமையிலேயே நாம் நிர்வாகத்தின் திட்டங்களைத் தோற்கடித்து, கோரிக்கைகளை வென்றெடுக்கப் பொருத்தமான வேலைத்திட்டத்துக்கு வருமாறு நாம் கடந்த பிரச்சாரத்தின் போது உங்களுக்கு கூறியிருந்தோம். மத்திய வங்கி ஊழியர்களின் நடவடிக்கைக் குழுவை அமைத்தல், கொழும்பு நடவடிக்கைக் குழுவுடன் அதை இணைத்தல், அதன் மூலம் எஞ்சிய தொழிலாளர்கள் - ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவை வென்றெடுக்க பிரச்சாரம் செய்தல் ஆகியவற்றை நாம் முன்மொழிந்தோம். அப்போராட்டம் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கொள்கைகளைத் தோற்கடிப்பதுடன் இணைந்து கொண்டுள்ளதால் ஏனைய தொழிலாளர்களுடன் சேர்ந்து தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைக் காக்கும் தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரும் முன்நோக்கின் அடிப்படையில் செயற்படும் அவசியத்தினை நாம் சுட்டிக் காட்டினோம். அங்ஙனம் குறிப்பிட்டதும் அரசாங்கத்தின் கொள்கைகளை மாற்ற சங்கத்தின் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலருக்கு இடமளிக்க முடியாது என்று ஏனைய இடங்களில் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் விடுத்த மிரட்டலையே மத்திய வங்கி நிர்வாகிகளும் விடுத்தனர்.

இந்நிலைமையினுள் மத்திய வங்கி ஊழியர்கள் கடைப் பிடிக்க வேண்டியது இதே வேலைத் திட்டமே என்பது தெளிவாக இல்லையா? நாம் உங்களுக்கு அத்தகைய ஒரு உண்மையான வேலைத்திட்டத்தை முன்வைக்க முடிந்ததற்குக் காரணம், நாம் அனைத்துலக சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் நின்று கொண்டுள்ளதேயாகும்.

சங்கக் கூட்டத்தில் நாம் முன்வைத்த இந்த வேலைத் திட்டத்தை நீங்கள் அனுமதித்தீர்கள் என்பது உண்மை. ஆனால் அந்திராதி குழு நீங்கள் எடுத்த நடவடிக்கையை வெறுத்தது . அது செய்ததோ தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் பக்கம் திரும்பி, அவர்களின் ஆதரவைத் திரட்டும் இந்த வேலைத்திட்டத்தை குப்பைக் கூடைக்குள் போட்டதே. அந்திராதி குழு எமது பிரச்சாரத்தினை மத்திய வங்கிக்குள் கால்கட்டுப் போடும்- முதலாளித்துவ அரசாங்கத்துக்கு மேன்முறையீடு செய்யும் உதவாக்கரையானதும் பிற்போக்கானதுமான நடவடிக்கையில் ஈடுபட்டதேயாகும். தொழில் அமைச்சரிடம் குறையிரங்குவது அதில் ஒன்றாகும். அது சங்கத்தை வீழ்த்து வதற்குத் தோண்டப்பட்ட பொறிக்கிடங்கு என்பது இப்போது நன்கு அம்பலமாகியுள்ளது. தொழிற் சங்கத்துக்கு எதிராக தூண்டிவிடப்பட்டுள்ள அரச வேட்டையில் அவர்கள் ஜனாதிபதியின் தலையீட்டைக் கோரி, அவளுக்கு மேன்முறையீடு செய்வது அவளது அரசாங்கத்தினதும் அவளதும் அங்கீகாரத்துடன் இந்த வேட்டை தூண்டிவிடப்பட்டுள்ளது என்பதை நன்கு அறிந்து கொண்டாகும்.

## தனிமைப்படுத்தல்

கடந்த ஆண்டில் அந்திராதி குழுவின் நடவடிக்கைகள் இத்தகையதாகவே அமைந்து இருந்தன. அதன் கெடுதிகளை நாம் தங்கள் முன் திரும்பத் திரும்ப முன்வைத்து வந்துள்ளோம். அந்தக் குழுவின் நடவடிக்கைகள் மத்திய வங்கி நிர்வாகிகளின் வேட்டைகளுக்கு மத்தியில் மத்திய வங்கி ஊழியர்களை தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் ஏனைய தரப்பினரிடம் இருந்து தனிமைப்படச் செய்துள்ளது. இது அரசாங்கத்தினதும் மத்திய வங்கி நிர்வாகிகளதும் கைகளைப் பலப்படுத்தி உள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தினை ஆட்சிக்கு கொணர தொழிற்பட்ட இந்தத் தலைமைக்கு அரசாங்கத்தின் பின்னால் வயிறளப்பதைத் தவிர வேறு வேலைத்திட்டம் கிடையாது. இந்தக் குழுவினர் சமசமாஜ, கம்யூனிஸ்ட்; நவசமசமாஜ கட்சிகளதும் தொழிற்சங்கத் தலைவர்களதும் காட்டிக்கொடுப்பு பாதையில் பயணம் செய்கின்றனர்.

இந்த நிலைமையை மாற்றியாக வேண்டும். எந்த விதமான கவலையீனத்துக்கும் இடம் கிடையாது. மத்திய வங்கி ஊழியர் சங்கத்துக்கும் செயற்குழு உறுப்பினர்களுக்கும் தொடுக்கப்பட்டுள்ள வேட்டைக்கு எதிராகத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் பரந்த இயக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அதைச் செய்ய முடியும். சட்ட ரீதியிலும் அரசியல் ரீதியிலும் இதைச் செய்ய நாம் முன்னணியில் நிற்கின்றோம். சோசலிச சமத்துவக் கட்சி ஏற்கனவே இந்த வேட்டையின் அர்த்தத்தினைத் தெளிவுபடுத்தும் கூட்டத்தினையும் மறியல் போராட்டத்தையும் நடாத்தியுள்ளது. எமது சங்கத்துக்கு இந்த நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவும் ஒழுங்கு செய்யவும் வல்லமை உள்ளது. அதைச் செய்ய வேண்டும். நாம் மேலே குறிப்பிட்ட வேலைத் திட்டத்தின் ஊடாக அதற்காக முன்நோக்கிப் பயணம் செய்வோம். எமது குழுவின் சார்பில் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் தோழர்.எச்.பி.கிரிபண்டாவை (மாவிக்கும்புர) வெற்றியீட்டச் செய்வதன் மூலம் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல இணையுங்கள். இந்த வேலைத்திட்டம் , முன்நோக்கின் அடிப்படையில் போராடும் தலைமையை மத்திய வங்கி ஊழியர் சங்கத்தினுள் கட்டியெழுப்ப எம்முடன் இணையுங்கள்.



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

விஜே டயஸ்

பாகம்-5

இரண்டரை வருட காலங்கள்-1975 பெப்ரவரி வரை- காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடாத்துவதை நிராகரித்ததன் மூலம் 1972 முதலாளித்துவ கூட்டரசாங்கத்தின் அரசியலமைப்பின் இனவாத யுத்த இலக்குகள் மேலும் வெளிச்சத்துக்கு வந்தன. இயற்றப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் பேரில் தமிழ் மக்கள் தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தைத் தன்னும் வழங்காதிருப்பது ஆளும் வர்க்கத்தின் தீர்மானமாக விளங்கியது. சமசமாஜ-ஸ்டாலினிச தலைவர்கள் இந்த முடிவுக்குத் தோள் கொடுத்து வந்தனர்.

தம்மீது திணிக்கப்பட்டுள்ள அரசியலமைப்புச் சட்டம் தொடர்பாக கருத்து தெரிவிக்க பொதுமக்களின் எந்த ஒரு தரப்பினருக்கும் வாய்ப்பு வழங்காதிருப்பது சர்வாதிகார ஆட்சி முறையின் ஒரு இலட்சணமாகும். முதலாளித்துவ ஜனநாயகத் திரைமறைவில் பொதுமக்களுக்கு எதிராக உள்நாட்டு யுத்தத்தின் பாதையில் ஆளும் வர்க்கம் திரும்பியுள்ளமை இதன் மூலம் பிரபல்யமாகியுள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் முதலாளித்துவ பிரிவினைவாத அரசியலை நோக்கி அவர்களைத் தள்ளவும் இரத்தம் சிந்தும் இனவாத யுத்தத்தின் மூலம் அவர்களை நசுக்கித் தள்ளவும் அத்திவாரமிடப்பட்டது 1972ம் ஆண்டின் அரசியலமைப்பின் மூலம் -இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னராகும் என்பதை அது நிரூபிக்கின்றது.

இடைத் தேர்தலில் கருத்து வெளிப்பாட்டுக்கான சந்தர்ப்பம் தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளதோடு மட்டும் நின்றுவிடாது இன்னும் நச்சுத்தனமான இனவாத நடவடிக்கைகள் பலவற்றை 1972-75 காலப்பகுதி முதலாளித்துவக் கூட்டரசாங்கம் எடுத்தது.

இக்கட்டுரைத் தொடரின் மூன்றாம் பாகத்தில் குறிப்பிடப்பட்ட பல்கலைக் கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு பாகுபாடு காட்டுவதை இலக்காகக் கொண்ட 1971ம் ஆண்டின் தரப்படுத்தல் கொள்கை மேலும் இனவாத அடிப்படையில் அமுலுக்கு வந்தது. அந்த க.பொ.த. (உயர்தர) விஞ்ஞானப் பாடங்கள் தொடர்பாக இதுவரை காலமும் நடைமுறையில் இருந்து வந்த செய்முறைப் பரீட்சை இரத்துச் செய்யப்பட்டது. இந்தப் பிற்போக்கு நடவடிக்கையானது விஞ்ஞான கூடங்கள் இல்லாத கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அநீதியானது என்ற பிரச்சாரத்துடனேயே செய்யப்பட்டது. கிராமப்புறப் பாடசாலைகளில் இருந்து வந்த கல்வி நடவடிக்கைகளை முன்னேற்றுவதன் அவசியம் பற்றி எந்த ஒரு முதலாளித்துவப் பரிந்துரையாளரும் பேசியது கிடையாது. அதற்குப் பதிலாக அவர்கள் செய்தது எல்லாம் ஏழை பாடசைலைகளின் மட்டத்திற்கு ஏற்ற விதத்தில் கல்வி முறையை மாற்றியதேயாகும். பொதுமக்களின் அவசியங்களை இட்டுநிரப்ப முடியாத முதலாளித்துவத்தின் சீர்திருத்தங்களை எதிர்பார்த்து நிற்கும் சகலரதும் பிற்போக்கு நடைமுறையை இதன்மூலம் வெளியரங்குக்கு வந்தது. இன்று உலகளாவிய ரீதியில் இவர்கள் வடிக்கும் முதலைக் கண்ணீரானது "பொருளாதார அபிவிருத்திக்கும் முதலீட்டாளர்களை ஈர்க்கவும்" உலகில் உள்ள குறைந்த மட்ட சம்பளம் அனைத்து நாடுகளதும் சம்பள மட்டம் ஆக வேண்டும் என்பதாகும். தேசியவாத சீர்திருத்தவாதங்களின் கூச்சல்காரர்கள் இன்று இத்திசையிலேயே பயணம் செய்து கொண்டுள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்று பேராசிரியரான சீ.ஆர்.டி.சில்வா 1977ல் எழுதிய ஒரு கட்டுரையில் இந்தச் செய்முறைப் பரீட்சையை இரத்துச் செய்ததைப் பற்றிக் கூறியதாவது : "இந்த வேலைத்திட்டம் கிராமப் புறங்களில் உள்ளவர்களுக்கு சம வாய்ப்புக்களை உத்தரவாதம் செய்வதாக அமைச்சர் கூறினாலும் யாழ்ப்பாண தமிழ் மக்கள் இதனை விஞ்ஞான, தொழில்நுட்ப துறைகளில் தாம் கொண்டிருந்த முன்னுரிமையை ஒழித்துக் கட்டுவதற்கான ஒரு முயற்சியாகவே அர்த்தப் படுத்திக் கொண்டனர்". தமிழ் மக்களின் "அர்த்தப்படுத்தல்" 1977 அளவில் போதுமான அளவுக்கு நிரூபிக்கப்பட்டுவிட்டதை பல்கலைக் கழகங்களுக்குள் நுழையும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி சுட்டிக்காட்டியது.

1974ல் இடம்பெற்ற மற்றுமோர் பாகுபாடு, தமிழ் இளைஞர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டுவதை முதலாளித்துவ சிறீலங்கா-சமசமாஜ-கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் மேலும் தீவிரமாக்கியது . அதனை பல்கலைக்கழக அனுமதியின் பேரில் அமுலுக்கு வந்த மாவட்ட கோட்டா முறை காட்டியது. இது பிராந்திய வாதத்தினையும் இனவாதத்தினையும் மேலும் வளர்ச்சி காண வைத்தது. 1971 தரப்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்குள் நுழைவதை கட்டுப்படுத்தி அதன் வாய்ப்பினை சிங்கள குட்டி முதலாளித்துவ தட்டினரின் கைகளில் ஒப்படைத்த போதிலும் பிராந்திய, மற்றும் இனக்குழுக்கள் இந்த வேலைத் திட்டத்தினால் ஊக்கமடைந்து தலைநிமிர்த்தத் தொடங்கி இருந்தன.

இனவாதத்தின் அடிப்படையில் ஒரு மக்கள் பிரிவினருக்கு எதிராக பாகுபாடு காட்டுதல் ஆரம்பமாகும் போது அதில் இருந்து ஏனைய இனக்குழுக்கள் இடையே உருவாகும் உயிர்காப்புப் பீதியினாலும், ஆரம்ப இனவாத பாகுபாடுகளால் அடைந்த நலன்களின் ஒரு பங்கினை பங்கிட்டுக் கொள்ளவும் ஒவ்வொரு வகையிலான முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவக் குழுக்களிடையே நாய்ச் சண்டை ஏற்படுவது இயற்கை.

## முஸ்லீம் முதலாளித்துவக் கோரிக்கை

முஸ்லீம் மக்களிடையே பிரபல்யம் அடைந்திருந்த முதலாளித்துவத் தலைவரான பதியுத்தீன் மஹ்மூத் கல்வி அமைச்சராக இருந்து வந்த நிலைமையில் சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக உக்கிரமாக்கிய இனவாதப் பாகுபாடுகள் மூலம் சிங்கள குட்டி முதலாளித்துவ வர்க்கம் தட்டிக் கொண்ட வாய்ப்புக்களின் ஒரு பங்கு தமக்கும் வேண்டும் எனப் பதியூத்தின் மஹ்மூத்தைச் சூழ முஸ்லீம் முதலாளிகள் அணிதிரண்டனர். சிங்கள, தமிழ் மொழிகளின் அடிப்படையில் இடம்பெற்ற தரப்படுத்தல் தமிழ் மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றும் முஸ்லீம் இனத்தவர்களுக்கு அநீதியானது என்பது அவர்களின் இனவாத விளக்கமாக விளங்கியது. தமிழ் மக்களிடையே பாகுபாடுகளுக்கு எதிராக வளர்ச்சி கண்டுகொண்டிருந்த எதிர்ப்பை நசுக்கும்பொருட்டு தமிழ் மொழிபேசும் மக்களிடையேயும் மத அடிப்படையில் மேலும் பிளவை உண்டுபண்ணுவது வாய்ப்பானது எனக் கருதிய முதலாளித்துவ கூட்டரசாங்கம் உடனடியாக முஸ்லீம் கோரிக்கையின் நீதியைப் புரிந்து கொண்டு அதற்கான சத்திரசிகிச்சையாக பல்கலைக் கழக அனும்திக்கு மாவட்டக் கோட்டா முறையை நடைமுறைப்படுத்தியது.



எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

இந்த மாவட்ட கோட்டா முறையின்படி பல்கலைக்கழக கல்விக்கான வாய்ப்பு அந்தந்த மாவட்ட ஜனத்தொகை விகிதாசாரத்தின்படி பங்கிட முடிவு செய்யப்பட்டது. இதன் மூலம் தமக்கு கூடுதலான வாய்ப்புக்கள் கிட்டும் என மன்னார், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் வசித்த முஸ்லீம் மக்கள் எண்ணினர். மேல்நாட்டு சிங்கள இனவாதிகளும் இதே பேராசைபிடித்த நிலைப்பாட்டிலேயே நின்று கொண்டிருந்தனர். அவர்களின் நிலைப்பாட்டில் பெரிதும் நாற்றம் கண்டது என்ன தெரியுமா? தாமும் சேர்ந்து பிரஜா உரிமையை இல்லாமல் செய்ததும் எந்த விதமான கல்வி வசதிகளுக்கும் உரிமை கொண்டாடத நிலைக்குத் ததளத்ளப்பட்டவர்களுமான தோட்டத்துறை த்மிழ் மக்களின் எண்ணிக்கையும் தமது மாவட்ட ஜனத்தொகையுடன் சேர்க்கப்பட்டு அதன் மூலம் மாவட்ட கோட்டா முறையின் கீழ் கூடுதல் வாய்ப்புக்களை தட்டிக் கொள்ளலாம் என எதிர்பார்த்தனர்.

இந்த எந்த ஒரு நடவடிக்கையும் தமிழ் மக்ளுக்கு பாகுபாடு காட்டும் இலக்கில் இடம்பெறவில்லை எனவும் தமிழ் மக்களுக்கு விசேடமான அநீதி எதுவும் இடம்பெறவில்லை, எனவும் கூறுகையில் நளின் டி சில்வா, குணதாச அமரசேகபுர தலைமையிலான முன்னணி இனவாத --- - தாம் குருடர்கள் எனக் கூறுவதுடன் மட்டுமன்றி முதலாளித்துவ அமைப்பின் கையாட்களாக இவர்கள் திரைபோட்டுக் கூறுவது என்ன தெரியுமா? இந்நடவடிக்கையின் மூலம் கிராமப்புற ஏழை மக்களின் குழந்தை மல்யுத்தத்துக்கு கிடைத்த நிவாரணம் எத்தகையது ? இதை நன்கு அறிந்தோர் அந்த மாகாண மக்களே. தமிழ் மக்களுக்கு எதிரான பாகுபாடு இனவாத யுத்த மட்டத்தை நோக்கி வளர்ச்சி கண்டதற்கு சமாந்தரமாக கிராமப்புற இளைஞர் படுகொலைகளினாலும் டயர் தீச்சுவாலைகளினாலும் வெளிப்பட்ட துப்பாக்கி வேட்டுக்களாலும் தீச்சுவாலைகளின் பிளம்புகள் புறப்பட்ட விதத்தையும் அறிந்தோர் அவர்களே. இதற்கிடையே இனவாத பிணந்தின்னும் காக்கைகள் வடக்கிலும் தெற்கிலும் கொலைக்குப் பலியானவர்களின் பிணங்களை சுற்றி வளைந்துகொள்கின்றார்கள். பல்கலைக் கழகங்களுக்குள் நுழைவது மட்டமல்ல பாடசாலை கல்வியைக் கூட ஒழுங்குமுறையாக கற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைக்காது அரச படைகளில் அலுகோசு வேலைகளில் இறக்கப்பட்டு-தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்திற்கு இட்டுச் செல்லப் படுவதன் மூலம் கொலைக்கு பின்னரும் அல்லது தெற்கில் இளைஞர் படுகொலைகளுக்கு இலக்காகும் எந்த ஒரு இளைஞனைப் பற்றித் தன்னும் எந்தவிதமான அனுதாபமும் இந்த இனவாதக் காக்கைகளுக்கு கிடையவே கிடையாது.

கல்வித்துறையிலான பாகுபாடு மூலம் பின்தங்கிய சிங்கள மக்கள் பகுதியினரிடையே ஒரு ஆர்வத்தைத் தூண்டிவிட்ட சிறீலங்கா-சமசமாஜ-கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதத் தாக்குதல்களுக்கு உள்ளாக்க விரைவாக நடவடிக்கை எடுத்தது.

1974 ஜனவரி மாதத்தின் இரண்டாவது வாரம் யாழ்ப்பாண நகரம் விழாக் கோலம் பூண்டிருந்தது. அது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் பேரில் இடம்பெற்றது. பல்வேறு நாடுகளிலும் வாழும் பரந்த அளவிலான தமிழ் புத்திஜீவிகள் கலந்து கொண்ட இம்மகாநாட்டினைத் யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் ஒரு கௌரவமாகக் கொண்டனர். சிறப்பாக இந்நாட்டு தமிழ் மக்களின் கலாச்சார, கல்வி உரிமைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்த ஒரு காலகட்டத்தில் இடம்பெற்ற இம்மகாநாடு அம்மக்களிடையே ஒரு பலம் வாய்ந்த ஆர்வத்தை தளிர்விடச் செய்தது. யாழ்ப்பாண நகரம் கலாச்சாரக் காட்சிகளால் நிறைந்திருந்தது.

அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் இறுதி நாளான ஜனவரி 19ம் திகதி மாலை பொதுமக்கள் அணிதிரண்ட ஒரு பொதுக்கூட்டம் இடம்பெற்றது. முதலாளித்துவ கூட்டரசாங்கம் பொலிசாரின் ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளுக்கு அதை ஒரு தருணமாக்கிக் கொண்டது. பொலிசார் திடீரென ஆகாயத்தில் வெடி தீர்க்கத் தொடங்கினர். பொதுமக்கள் கிலிகொண்டு ஓடத் தொடங்கினர். மின்சாரக் கம்ப வயர்களில் பட்ட துப்பாக்கிச் சூட்டினால் வ்யர்கள் அறுந்து , ஓடிய மக்கள் மீது வீழ்ந்தது. இதனால் ஒன்பது பேர் மின்சாரம் பாய்ந்து இறந்தனர்.

இது உண்மையில் பிற்காலத்தில் யூ.என்.பி.அமைச்சர்கள் கலந்துகொண்டு நடாத்திய வாக்குச் சீட்டுக் கொள்ளையின் மத்தியில் யாழ்ப்பாணத்தின் பெருமைமிக்க நூல்நிலையத்தினைச் சாம்பலாக்கிய ஆத்திரமூட்டும் யுத்த நடவடிக்கைகளுக்கான ஆரம்பமாகியது. இதனை முதலாளித்துவ கூட்டரசாங்கத்தின் பொலிசார் நடாத்தினார்.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக

இனவாத யுத்த தீச்சுவாலைகளை மூட்டுவதற்கு சிறீலங்கா-சமசமாஜ-கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் தொடர்ந்து

www.padippakam.com

வந்த வேலைகள் தோட்டத்துறை தமிழ் தொழிலாளர்களுக்கு எதிராக மற்றுமோர் கட்டத்தை எட்டியது.

1974ஜனவரி 29ம் திகதி கைச்சாத்தான சிரிமா-இந்திரா காந்தி ஒப்பந்தம் மூலம் மேலும் 75000 தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு நாடுகடத்த தீர்மானம் செய்யப்பட்டது. 1964 சிரிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவுக்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்ட 525000 த்துடன் இந்தப் புதிய தொகையும் சேர்க்கப்பட வேண்டும். 1964 மாபெரும் காட்டிக்கொடுப்பின் கீழ் சிரிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு இணக்கம் தெரிவிதத சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்தப் புதிய நடவடிக்கைகளையும் ஒருமனதாக அங்கீகரித்தன.

1949 குடியுரிமை மசோதாவின் மூலம் மலைநாட்டு தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இனவாத சிங்கள முதலாளித்துவ அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கிய அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் முழுத் தமிழ் மக்களுக்கும் எதிராக பாகுபாடு காட்ட வழிசமைத்துக் கொடுத்தது என்பதை தமிழ் மக்கள் இத்தருணத்தில் நன்கு புரிந்து கொண்டிருந்தனர். ஆதலால் தமிழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் சிரிமா-இந்திரா ஒப்பந்தத்தை தமக்கு எதிராக உக்கிரம் அடையும் இனவாத தாக்குதலின் ஒரு பாகமாக புரிந்து கொண்டிருந்தனர்.

இந்தத் தமிழ் பொதுஜன அபிப்பராயம் அன்று அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர்களின் நிலைப்பாட்டுக்கு எதிராக விளங்கியதைப் போலவே இன்று தமிழ்காங்கிரஸ் தமிழரசுக் கட்சியை உள்ளடக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாளித்துவ தலைமை கொண்டிருந்த கருத்துக்கும் முரண்பட்டதாக விளங்கியது.தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் வெளியிட்ட அறிக்கை சிரிமா இந்திரா உடன்படிக்கைக்கு வக்காலத்து வாங்கும் விதத்தில் கூறியதாவது : அது "நாடற்றவர் என்ற அவலநிலையில் இருந்து தோட்டத் தொழிலாளர்களை விடுவிப்பதாகும்." என்றது.

தமிழ்நாட்டு முதலாளிகளதும் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்ட இந்திய மத்திய அரசாங்கம் இலங்கையில் சிங்கள இனவாத ஆட்சியாளர்களினால் தமிழ் மக்களுக்கு எதிராக உக்கிரமாக்கப்பட்ட தாக்குதல்களுக்கு பரிகாரமாக வடக்கில் கச்சதீவினை இலங்கைக்கு வழங்க முன்வந்ததும் இந்தத் தருணத்திலேயேயாகும்.

கடல்போகும் மீனவர்களின் ஒரு தற்காலிக ஓய்வுக்களமாக மட்டுமே இது பயன்பட்டது. மக்கள் குடியிருப்பு இல்லாத இந்தக் காட்டுத் தீவை இலங்கைக்கு எழுதிக் கொடுத்தமையை முதலாளித்துவக் கூட்டரசாங்கம் ஒரு மாபெரும் வெற்றியாகக் காட்டிக் கொண்டது. 1948ல் மலர்க் கொத்துக்களைச் சார்த்தி பெற்ற சுதந்திரம் எனப்பட்டதை ஏகாதிபத்தியவாதிகளும் தேசிய முதலாளிகளும் பொதுமக்களை ஏமாற்றுவதற்காக சிருஷ்டித்த ஒரு சதியாகியதைப் போலவே கச்சதீவு வெற்றியும் இந்தியத் துணைக்கண்டத்தில் ஏகாதிபத்திய-முதலாளித்துவப் பிடி தொடர்ந்தும் நீடிப்பதற்கான இனவாதக் குத்துவெட்டல்களைத் தூண்டிவிடுவது பிற்போக்குத் திட்டத்தின் ஒரு பாகமாகவே தவிர வேறொன்றும் அல்ல. இத்தருணத்தில் இனவாத யுத்தப் பிளம்புகளின் மத்தியில் இலங்கையிலும் இந்தியாவிலும் மீனவர்களைத் தண்டிக்கின்றதும் சித்தரவதைக்கு உள்ளாக்குகின்றதுமான சுவர்க்கமாக கச்சதீவு எல்லையை பாவிப்பது இது நான்கு நிரூபித்துள்ளது.

## உலக நிலைமையின் பாரதூரமான மாற்றம்

சீர்திருத்தவாத சமசமாஜக் கட்சித் தலைவர்கள் முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தை திணித்தபோது இருந்து வந்த உலக நிலைமை இன்று பாரதூரமான விதத்தில் மாற்றம் கண்டுவிட்டது. யுத்தத்தின் பின்னைய உலக ஏகாதிபத்திய அமைப்பின் எதிரில் தலைகுனிந்து , நான்காம் அகிலத்தின் சுயாதீன புரட்சிகரப் பணியை நிராகரித்த பப்லோவாதத்தின் கைத்தேங்காயாகச் செயற்பட்ட சமசமாஜக் கட்சியும் அதன் தலைமையும் முதலாளித்துவம் அதனது அடிப்படை முரண்பாடுகளைத் தீர்த்துக் கொண்டுவிட்டது என்ற மாயையில் மூழ்கி இருந்தன. இந்த மாயைக்கு இணங்க கணக்குப் போட்டுக் கொண்ட இவர்கள் ட்ரொட்ஸ்கிச அனைத்துலகக் குழுவுக்கு எதிராக சோசலிசத்தை நோக்கிய பாராளுமன்றப் பாதையும் முதலாளிகளை(சோசலிசத்துக்கு ) தள்ளிச் செல்லும் சந்தர்ப்பமும் ஏற்பட்டுள்ளதாகக் கூறிக்கொண்டனர்.

இந்த மார்க்சிச எதிர்ப்பு ஸ்டாலினிச சார்பு நப்பாசைகள் 1971 ஆகஸ்டில் தங்கத்துக்கும் டாலருக்கும் இடையேயான மதிப்பு தொடர்பான உடன்பாடு சிதறுண்டு போனதாலும் அதன் பெறுபேறாக சகல பொருட்களின் விலைகளும்-அவ்வாறே சிறப்பாக எண்ணெய் விலை பன்மடங்கால் அதிகரித்ததாலும் தோன்றியது. சமசமாஜ - ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் முதலாளித்துவ கூட்டரசாங்கத்தில் பதுங்கிக் கொண்டு இந்த உலக முதலாளித்துவ நிலைமைகளின் செல்வாக்கினை பொதுமக்களின் கண்களில் இருந்து மூடிமறைக்க தலைகீழாக நின்று வந்தனர். அது முக்கியமாக அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் இலங்கைப் பகுதி சமர்ப்பித்த உலக சோசலிச முன்நோக்கிற்கு எதிராக இடம்பெற்றது.

மார்க்சிச அரசியல் பொருளாதாரத்தினை எந்த விதத்திலும் புரிந்து கொண்டிராத சமசமாஜக் கட்சித் தலைவரான கலாநிதி என்.எம்.பெரேரா தாம் கலாநிதிப் பட்டத்தைத் ஈட்டிக் கொள்ள சார்ந்திருந்த கீன்சியன் (keynesian) பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படையில் புதிய ஒரு கீன்ஸ் ஆகிவிட முயற்சித்தார். கீன்சின் கோட்பாடுகளின்படி ஸ்தாபிதம் செய்யப்பட்ட பிரெட்டன்வூட்ஸ் ஒப்பந்தம் தங்கத்துக்கும் டாலருக்கும் இடையே சிருஷ்டித்த நிலையான உறவு வீழ்ச்சி கண்டுள்ள நிலைமையில் கடதாசி தங்கத்தை (paper gold) அங்கீகரிக்கும் ஒரு அர்த்தமற்ற கோட்பாட்டை அவர் முதலாளித்துவ உலகுக்கு முன்வைத்தார். எந்த ஒரு பொறுப்புள்ள முதலாளித்துவப் பொருளியலாளரும் அவரின் வழித்தடுமாற்றம் நிறைந்த கோட்பாட்டுக்கு இணக்கம் காட்ட முன்வந்தது இல்லை. ஆதலால் அது சமசமாஜ தலைமை அலுவலகத்திலும் முதலாளித்துவ கூட்டரசாங்க தஸ்தாவேசுக்களிடையேயும் மீண்டும் தலையெடுக்க முடியாத விதத்தில் புதையுண்டு போயிற்று.

அர்த்தமற்ற அது வெடித்துச் சிதறுண்டு போனதன் பின்னர் சமசமாஜக் கட்சி தலைவர்களும் கதியற்றுப் போன கூட்டரசாங்கமும் இலங்கையில் எண்ணெய் தோண்டும் முயற்சியில் தொங்கினர். இதற்குப் பெரும் ஊக்கமாக கச்சதீவு வெற்றி பறைசாற்றப்பட்டது. ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சி உடனடியாக சோவியத் யூனியனில் இருந்து எண்ணெய் அகழ்வாராய்ச்சி நிபுணர்களைத் தருவித்துக் கொண்டு இந்தச் செப்படி வித்தைக்கு மேலும் கோலங்கள் போட்டது.

எனினும் இது சந்திரனில் இருந்து அரிசி எடுததுத் தருவோம் எனக் கூட்டரசாங்கம் 1970 பொதுத் தேர்தலில் வழங்கிய பொய் வாக்குறுதிகளுக்கு ஒன்றும் குறைவான மோசடி அல்ல. இப்போது அவர்கள் கச்சதீவின் நாற்புறமும் உள்ள மணல்களைத் தோண்டி எண்ணெய் எடுப்பதாக நாடுபூராவும் அலைந்து வாக்குறுதி அளித்தனர்.

இந்தப் பொய்யளப்புக்களின் பின்னணியில் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கு எதிராக தொடுக்க ஆரம்பித்திருந்த இனவாத யுத்தத்தின் காட்டுமிராண்டித்தனம் விளங்கியது.

இந்தப் பொய் வாக்குறுதிகளால் கவரப்பட்ட பொதுமக்களை தட்டுத் தடுமாற வைத்த இன்றைய நவசமசமாஜக் கட்சித் தலைவர்கள் உட்பட்ட சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகளின் அங்கத்தவர்களில் எவரையும் ஒரு பொறுப்புள்ள அரசியல் தலைமையாக எவரும் பெயர் குறிப்பிட முடியுமா? இந்தப் பிரச்சினையை சகல வர்க்க நனவுள்ள தொழிலாளியும் ஒடுக்கப்படும் மக்களும் இளைஞர்களும் தீர்க்கமான முறையில் மனம் கொண்டாக வேண்டும்.

பிற்போக்கு, இனவாத 1972 அரசியல் அமைப்புச் சட்டத்தினை நிறைவேற்றியமையையும் அதன் அடிப்படையில் தொடுத்த இனவாத யுத்த நடவடிக்கைகளையும் அங்கீகரித்த சமசமாஜ-ஸ்டாலினிச தலைவர்கள் பொதுமக்களை அரசியல் ா ் த ் ய ் ல ் நிராயுதபாணியாக்கும்பொருட்டு இழைத்த சகல வேலைகளுக்கும் இன்று பொது மக்களே நஷ்டஈடு கொடுக்க நேரிட்டுள்ளது. 1940 பதுகளில் தொழிலாளர் - ஒடுககப்படும் மக்களின் சார்பில் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துக்கும் ஸ்டாலினிசத்துக்கும் எதிராக ஈவிரக்கமற்ற முறையில் போராடிக் கட்டியெழுப்பிய அரசியல் உருவத்தை, 1964 காட்டிக்கொடுப்பின் பின்னர் முதலாளித்துவ ஆட்சியின் பங்குதாரர்களாக மாறியதன் மூலம் அவமானத்துக்கு உள்ளாக்கிய சமசமாஜக் கட்சித் தலைவர்கள், 1975ல் வரட்டிப் பாண் கடையாக மாறியமை ஒன்றும் புதுமை அல்ல.



அ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில்

1975ல் சிரிமாவோ பண்டாரநாயக்க சமசமாஜ தலைவர்களை சவால் செய்தார். அதே ஆண்டில் நடைபெற்ற (1953) ஹர்த்தால் நினைவு தினக் கூட்டத்தில் கோழை பண்டாவின் உருவத்தை அவமானப் படுத்தியதாக குற்றம்சாட்டியபோது அது பெரும் — சம்பவமாகியது. அத்தருணத்தில் கூட்டரசாங்க அரசியலின் கீழ் பொதுமக்கள் மத்தியில் சமசமாஜக் கட்சி தலைவர்களின் உருவமே அவமானத்துக்கு உள்ளாகி இருந்தது என்பதை முதலாளித்துவ ஆட்சியாளர் என்ற வகையில் நன்கு அறிந்தறிந்தே அவள் இந்த சவாலை விடுத்தாள். முதலாளித்துவச் சார்பு சந்தர்ப்பவாதத்தினுள் சேடம் இழுக்கும் அளவுக்கு தலைமூழ்கிப் போயிருந்த சமசமாஜத் தலைவர்கள் அனாதை நிலைக்குத் தள்ளப்பட்டனர். தமது உருவத்தை எப்பாடு பட்டேனும் குறைந்த பட்சம் ஒரு சில அமைச்சர் பதவிகளையும் அவற்றைச் சுற்றிக் குந்த எழும்பும் வயிற்றுமாரி கொசுக் கும்பல்களையும் வயிற்றுப்பாட்டுக்காக பிரதமரிடம் மன்னிப்புக் கோரியேனும் அரசாங்கத்தில் தொங்கிக் கொள்ள சமசமாஜத் தலைமைப் பீடத்தில் கொல்வின் ஆர்.டி.சில்வா பிரேரித்தமையும் ஒரு பரிதாபகரமான முயற்சியாகியது. ட்ரொட்ஸ்கிசத்தின் அடிப்படையில் கம்பீரமாகத் தோன்றினாலும் தேசியவாதச் சந்தர்ப்பவாதத்தில் தலைமூழ்கி சீரழிந்து போனமைக்கான நல்ல படிப்பினை இந்த பரிதாபகரமான சந்தர்ப்பத்தினுள் பொதிந்து போயுள்ளது.

## உலகளாவிய வலதுசாரிப் போக்கு

1964ல் தொழிலாளர்களின் 21 கோரிக்கைகள் இயக்கம் முதலாளித்துவ ஆட்சியை சவால் செய்யும் விதத்தில் வளர்ச்சி கண்டு வருகையில் அரசாங்கத்தைக் காக்கும் பொருட்டு கம்பளம் விரித்து அணைத்துக் கொண்ட சமசமாஜத் தலைவர்கள் அதில் இருந்து 11 ஆண்டுகளின் பின்னர் காலால் உதைந்து கலைக்கப்பட்டமையானது உலகளாவிய ரீதியில் பற்றிப்படர்ந்து வந்த வலதுசாரிப் போக்கினை சுட்டிக்காட்டியது. 1968-75க்கு இடைப்பட்ட காலத்தில் உலக முதலாளித்துவ அமைப்பு முகம் கொடுத்த நெருக்கடி நிலைமையின் மத்தியில் தோன்றிய மக்கள் கிளர்ச்சி அலைகளை பின்வாங்கச் செய்து சீரமைத்துக் கொண்ட ஆளும் வர்க்கத்தின் பிற்போக்குப் பதில் நடவடிக்கை அதன் மூலம் வெளிப்பாடாகியது. இலங்கையில் சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகளைப் போலவே உலகம் பூராவும் ஸ்டாலினிச சீர்திருத்தவாத முதலாளித்துவக் கையாட்கள் பப்லோவாதிகளின் உதவியுடன் பிரான்சு, ஜேர்மனி, ஸ்பெயின் போர்த்துக்கல், பிரித்தானியா போன்ற ஏகாதிபத்திய நாடுகளிலு ம் அவ்வாறே இந்தியத் துணைக்கண்டம் போன்ற பின்தங்கிய நாடுகளிலும் பற்றிப்படர்ந்து வந்த ஒரு தொகை மக்கள் கிளர்ச்சிகளை முதலாளித்துவச் சிறையினுள் சிறைப்பிடித்து வைக்க முயன்றனர். இந்தக் கிளர்ச்சிகளின் உச்சக் கட்டமாக 1975ல் வியட்நாமிலும் கம்போடியாவிலும் லாவோசிலும் அமெரிக்க ஏகாபதிபத்திய கைப்பொம்மை ஆட்சியாளர்கள் வெளியேற்றப்பட்டமை விளங்கியது. இவற்றையும் சோசலிச விடுதலையை நோக்கிய பாய்ச்சலாக அல்லாது காலனித்துவ பின்தங்கிய நிலைமையின் அதி உயர்ந்த கட்டமாக வரையறுத்துக் கொள்வதில் தேசியவாத ஸ்டாலினிஸ்டுகள் கண்டிப்பாக இருந்தனர். எனினும் ஆளும் வர்க்கங்கள் தமது ஆட்சி அதிகாரத்துக்கு சவால் விடுப்பது சம்பந்தமாக தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் பீதியினால் உருவான ஆத்திரம் காரணமாக 1975யின் இறுதியில் நடவடிக்கையில இறங்கிக் கொண்டன.

இந்தியாவில் இந்திரா காந்தி அரசாங்கம் அவளின் பிரசித்திபெற்ற அவசரகாலச் சட்ட ஆட்சியை உருவிக்கொண்டு பொதுமக்களுக்கு எதிராகக் களத்தில் குதித்தது. 1971ல் பங்களாதேஷ் சுதந்திரம் எனப்பட்டதன் சுதந்திர வீரனாக நடித்த முஜிபூர் ரகுமான் 1975ல் தனிக்கட்சி ஜனாதிபதி சர்வாதிகாரத்தினை திணித்தார். அதே ஆண்டில் அவரின் மரணச் சடங்கின் மீதாகவே இராணுவம் □மார்ஷல் லோ□ ஆட்சிக்கு பங்களாதேஷ் மக்களைக் கீழ்ப்படுத்தியது.பாகிஸ்தானில் அலி பூட்டோ ஜனநாயகத்துடன் கொண்டிருந்த இரத்தம் தோய்ந்த காதலை ஒரு முடிவுக்குக் கொணர்ந்து 1977ல் ஷியா-உல்-ஹக் ஆட்சியைக் கைப்பற்றினான்.

இலங்கையினுள் கூட்டரசாங்கத்தின் கீழ் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவைச் சுற்றித் திரண்ட அதிகாரம் படைத்தவர்களின் கும்பல், சமசமாஜ-கம்யூனிஸ்ட் தலைவர்களின் துரோகத்தினால் குழப்பிப் போயிருந்த தொழிலாளர் வர்க்கம் மீதும் ஒடுக்கப்படும் மக்கள் மீதும் மிலேச்சத் தாக்குதல் தொடுப்பதற்கு களம் சமைத்துக் கொள்ள இணைந்து கொண்டனர். இந்நிலையில் சமசமாஜக் கட்சிக்கு அது இழைத்த காட்டிக் கொடுப்புக்களுக்கு கிடைத்த பரிசு கால் உதையேயாகும்.

இதன்மூலம் சமசமாஜ-கம்யூனிஸ்ட் தலைவர்களை கூட்டரசாங்கத்தில் இருந்து வெளியேறுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் விடுத்த கோரிக்கையைச் சூழ தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்துக்காக பொதுமக்களிடையே முன்னெடுத்த இயக்கத்தின் காலதேச வர்த்தமானம் மேலும் ருசுப்படுத்தப்பட்டது. தொழிலாளர் வர்க்கத்தினதும் தமிழ் மக்கள் உட்பட்ட ஒடுக்கப்படும் மக்களதும் உரிமைகளைக் காக்கும் போராட்டத்திற்கு அத்தியாவசியமான நிலைமை, முதலாளி

14ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்...

13ம் பக்கத் தொடர்ச்சி

வர்க்கத்தில் இருந்து முற்றிலும் சுயாதீனமான அரசியல் நடைமுறையில் காலூன்றுவதாகும்.ட்ரொட்ஸ்கிச நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் மையமான இதற்குப் புறமுதுகு காட்டியவர்களுக்கு இந்த நூற்றாண்டு பூராவும் கிடைத்துள்ள கசையடி படுமோசமானது. சமசமாஜக் கட்சி தலைவர்களுக்கு கிடைத்த கால் உதை இதில் இருந்து வேறுபட்டது அல்ல.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர் வர்க்க சுயாதீன அரசியல் நடைமுறைக்காக முன்னெடுத்த போராட்டம் நனவான தொழிலாளர், இளைஞர் பகுதியினர் இடையே ஈர்ப்பை வெற்றி கண்ட போதிலும் இன்னமும் அது பொதுமக்கள் இயக்கத்தினுள் மிகவும் பெரிதும் அற்பமாக விளங்கியது.இதன் கொடிய எதிரியாக சமசமாஜ-ஸ்டாலினிஸ்ட் தலைவர்களைப் போலவே சகல வகையறாக்களைச் சேர்ந்த திரிபுவாதிகளும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளும் செயற்பட்டனர். இவர்கள் சகலரும் வலதுசாரிகளைப் பலப்படுத்துவதிலும் 1977ல் யூ.என்.பி.க்கு ஐந்தில் நான்கு பாராளுமன்றப் பெரும்பான்மைப் பலத்தைப் கையளிப்பதிலும் பங்காளர்களாக விளங்கினர்.

## தமிழ் முதலாளித்துவக் கட்சிகளின் பரிணாமம்

இந்த வலதுசாரி அழுத்தம் தமிழ் முதலாளித்துவ அரசியல் இயக்கத்தின் உள்ளும் சமகாலத்தில் வெளிப்பாடாகச் செய்தது.

இந்த வலதுசாரி ஈர்ப்பானது தமிழர் விடுதலைக் கூட்டணி தனித் தமிழ் ஈழம் அரசு பற்றிய சுலோகத்தைக் கையாண்டதன் மூலம் வெளிப்பாடாகியது. 1975 பெப்ரவரி 6ல் நடைபெற்ற காங்கேசன்துறை இடைத்தேர்தல் வெற்றியின் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரச்சாரங்களில் அடிநாதமாக விளங்கியது இதுவே.

காங்கேசன்"துறை இடைத்தேர்தலில் முதலாளித்துவ கூட்டரசாங்கத்தின் வேட்பாளராக நிறுத்தப் பட்டவர் தமிழ் தேசிய இனத்தைச் சேர்ந்த ஸ்டாலினிஸ்ட் வி.பொன்னம்பலம். அது ஸ்டாலினிசம் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் உரிமைகளைத் துவம்சம் செய்ய ஆரம்பத்தில் இருந்து எடுத்த திருப்பத்தைக் குறித்து நிற்கின்றது. இங்கு ஒருவருக்கு நினைவுக்கு வருவது ஸ்டாலினுக்கு எதிராக லெனின் தமது நோய்ப் படுக்கையில் இருந்தபடியே நடாத்திய போராட்டக் காலகட்டமாகும். ஸ்டாலினுக்கு எதிராக லெனின் சமரசம் அற்ற முறையில் போராடிய ஒரு அம்சம் சோவியத் யூனியனுடன் இணைக்கப்பட்டதில் இருந்து ஜோர்ஜியன் தேசிய இனத்தவர்களுக்கு எதிராக ஜோர்ஜியன் தேசிய இனத்தவரான ஸ்டாலினால் பேரின ரூஷ்ய தேசிய வெறியை கட்டவிழ்த்து விட்டுப் பலாத்காரத்தையும் காடைத்தனங்களையும் கையாண்டதாகும். அது பற்றிய விபரங்களைத் தர இந்தக் கட்டுரையில் அவகாசம் இல்லாத போதிலும் அந்த காட்டுமிராண்டிச் சோவினிசத்தின் சம்பிரதாயங்களை முன்னெடுத்த இலங்கை ஸ்டாலினிஸ்டுகள் தமது வேட்பாளரை தமிழ் மக்களிடையே தேர்ந்தெடுத்துக் கொண்டு சிங்கள சோவினிச முதலாளித்துவ அரசாங்கத்தின் பிரதிநிதியாக காங்கேசன்துறைத் தொகுதிக்கு நிறுத்தியமை நிச்சயம் சுட்டிக்காட்டுகின்றது.

இடைத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பெரும்பான்மை வாக்குக்களால் வெற்றிபெற்றார். வெற்றியின் பின்னர் செல்வநாயகம் ஆற்றிய உரையில் சகல சிங்கள அரசாங்கங்களையும் குற்றம்சாட்டி பின்வருமாறு குறிப்பிட்டார்: "ஆட்சிக்கு வந்த சகல சிங்கள அரசாங்கங்களும் எமக்கு எமது அடிப்படை உரிமைகளை மறுத்தும் எம்மை ஒடுக்கப்பட்ட மக்களின் நிலைமைக்குத் தள்ளுவதற்காக சுதந்திரத்தில் இருந்து பெருக்கெடுத்த அதிகாரத்தை பயன்படுத்தியும் வந்துள்ளது என்பது துன்பகரமானது. நான் எனது மக்களுக்கும் நாட்டுக்கும் கூற விரும்புவது தேர்தலின் தீர்ப்பு. ஏற்கனவே தமிழ் மக்களுக்குரிய இறைமையை அனுபவித்து தமிழ் ஈழம் தேசிய இனம் சுதந்திரமடைய வழங்கப்பட்ட ஒரு ஆணையாக நான் கணிப்பதனாலாகும். தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் நான் இந்த ஆணையை நடைமுறைக்கிடுவதாக எனது உறுதியான வாக்குறுதியை வெளிப்படுத்துகின்றேன்.□

## குத்துக் கரணம்

இதில் இருந்து தனித் தமிழ் ஈழம் அரசுக்காக தமிழர் விடுதலைக் கூட்டணி தொடுத்த பிரச்சாரத்தின் முக்கிய பேச்சாளராக அ.அமிர்தலிங்கம் விளங்கினார். அது அவரின் அரசியல் வாழ்க்கையில் ஒரு பெரும் குத்துக்கரணமாக விளங்கியது. அதற்குக் காரணம் , தனித் தமிழ் அரசு பற்றிய கோரிக்கை முதலில் தலைநீட்டிய 1960ல் அதன் மூக்கிய எதிர்ப்புப் பேச்சாளராக அவர் விளங்கியதேயாகும்.

தனித் தமிழ் ஈழம் அரசு பற்றிய கருத்து முதன் முதலில் சுந்தரலிங்கத்தினால் 1960பதுகளின் முற்பகுதியில் முன்வைக்கப்பட்டது . அக்கருத்தின் அடிப்படையில் சுந்தரலிங்கம் ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி என்ற ஒரு கட்சியையும் அமைத்துக் கொண்டு, 1960 மார்ச், ஜூலை பொதுத் தேர்தல்களிலும் போட்டியிட்டார். அந்தத் தேர்தல் இயக்கத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் சுந்தரலிங்கத்துக்கு எதிரான தேர்தல் பிரச்சாரத்தில் முன்னணியில் நின்றவர் அமிர்தலிங்கம்.

இருப்பினும் 1960 டிசம்பரில் தமிழரசுக் கட்சி செயற் குழுவினுள் சுந்தரலிங்கத்தின் கருத்து ஒரு பிரேரணை உருவில் வவுனியாவைச் சேர்ந்த ஏ.சிற்றம்பலத்தினால் சமர்ப்பிக்கப்பட்டது. அது 1960ல் சிரிமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் தமிழரசுக் கட்சி அரசாங்கத்துடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் முறிந்து போனதன் பின்னராகும். கமிட்டியின் 37 பேர் பிரேரணைக்கு ஆதரவாகப் பேசிய ஒரு நிலைமையில் அதற்கு எதிரான விவாதத்துக்கு மீண்டும் முன்னணியில் நின்றவர் அமிர்தலிங்கமே. இன்னமும் அத்தகைய ஒரு பிரச்சாரத்துக்கு காலம் வரவில்லை என அவர் சுட்டிக்காட்டினார். "பிரிந்து போவது பற்றி யோசிப்பதற்கு இன்னமும் காலம் வந்து விடவில்லை"என அவர் அன்று கண்டிப்பாகக் குறிப்பிட்டார்.

1975 அளவில் தயுமிழர் விடுதலைக் கூட்டணியினுள்ளும் அமிர்தலிங்கத்தினுள்ளும் உருவான பரிணாமத்தின் பின்னணியில் இருந்த முக்கிய காரணி சமசமாஜக்-கம்யூனிஸ்ட் கட்சிகள் பங்குகொண்ட முதலாளித்துவ கூட்டரசாங்கததின் 1972 அரசியலமைப்புச் சட்டமும் அதன் அடிப்படையில் யுத்தப் பாதையில் தமிழ் மக்களுக்கு எதிராக ஒடுக்குமுறையையும் அடக்குமுறையையும் உக்கிரமாக்கியமையும் விளங்கியது. ஒரு தமிழ் முதலாளித்துவக் கட்சி என்ற முறையில் தமிழர் விடுதலைக் கூட்டணியானது; தமிழ் மக்களிடையே சிங்கள இனவாதத் தாக்குதல்களுக்கு எதிராகத் தோன்றிய எதிர்ப்புக்களைச் சுரண்டிக் கொண்ட தமிழ் முதலாளிகளின் வசதி வாய்ப்புக்களை உறுதிசெய்யும் தனிநாட்டை இலக்காக கொண்டது. அது தமிழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை விடுதலை செய்யும் அவசியத்தினால் உருவானது அல்ல. தமிழ் மக்களைக் சுரண்டிக்கொள்ளும் அவகாசத்தினை வழங்குவதற்கான பிற்போக்கு முதலாளித்துவ அவசியங்களுக்கு மட்டும் அவர்கள் தயாரானார்கள்.

முதலாளித்துவ கூட்டரசாங்கத்தினைப் போலவே இனவாத தமிழ் முதலாளித்துவக் கட்சிகளின் பிற்போக்கு வேலைத் திட்டங்களைத் தோற்கடிக்கும் சாத்தியம் இன்று போலவே அன்றும் அனைத்துலகவாத புரட்சிகர வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை ஐக்கியப்படுத்தவும் அணிதிரட்டவும் போராடிய ட்ரொட்ஸ்கிச அமைப்புக்கே உரியதாக விளங்கியது.

—தொடரும்.

# பாசிசமும் மாபெரும் யூத மக்கட் படுகொலைகளும்

10ம் பக்கத் தொடர்ச்சி

பெரு விரைவில் கெஸ்டபோவினால் வெகு விரைவாக அழித்தொழிக்கப்பட்டன. 1933-1935க்கும் இடைப்பட்ட காலத்தில் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சி சிறைவைப்புக்கள் மூலம் 75000 அங்கத்தவர்களை இழந்துள்ளதாக நம்பத்தகுந்த விதத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். அதாவது 1932ல் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களில் காற் பங்கினரை அது இழந்துள்ளது." 14

## நாஸி பயங்கரம்

நாஸி பயங்கரம் இலட்சோபலட்சம் ஜேர்மனியர்களை பயமுறுத்தி பணிய வைத்தது. தமது அமைப்புக்களின் வெட்கக் கேடான அடிபணிவினால் உத்சாகமிழந்து நம்பிக்கையிழந்து போன தொழிலாளர் வர்க்கத்தின் பிரமாண்டமான பகுதியினர் அக்கறையற்றுப் பின்வாங்கினர். எனினும் நாஸிகளின் இரக்கமற்ற கொடுமைகளுக்கு எதிரிலும் தொழிலாளர்களிடையே ஆட்சியாளர்களுக்கு கணிசமான ஊக்கமுள்ள எதிர்ப்புத் தோன்றியது.

கார்ஸ்டன் விளக்குகையில் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் நாஸிகளுடன் சமாதானத்துக்கு சென்றாலும் அரசியல் காரணங்களுக்காக சிறையில் தள்ளப்பட்டவர்களில் பெரும்பான்மையினர் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். டோர்முண்ட் பிராந்தியத்தில் ஸ்டெயின் வாஷ்ஹுில் சிறையிலிடப்பட்ட 21823 ஜேர்மன் தேசிய இனத்தவர்களுள் மிகவும் பெரும்பான்மையினர் தொழிலாளர்கள். அரசியல் எதிர்ப்பாளர்களுடன் சேர்ந்த சொலின்ஜன் நகரத்தைச் சேர்ந்த 629 பேரில் நூற்றுக்கு 70வீதத்தினரும் தொழிலாளர்களாக இருந்ததோடு கைது செய்யப்பட்ட 49 குடும்பப் பெண்களில் அதிகமானோர் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். ரூர் மாவட்டத்தில் ஒபர்ஹோசனில் இது நூற்றுக்கு 90வீதத்தினை எட்டுவதாக விளங்கிற்று. குறைந்த கைத்தொழில் மயமான பிராந்தியங்களில் இந்த எண்ணிக்கை ஓரளவுக்கு குறைந்திருப்பது புதுமை அல்ல. எனினும் அரசியல் நம்பிக்கை காரணமாக ஒடுக்குமுறைக்கு முகம் கொடுத்தவர்களில் பெரும்பான்மையினர் உண்மையில் ஜேர்மன் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக விளங்கினர். ஆனால் அரசியல் நம்பிக்கையினால் ஒடுக்குமுறைக்கு முகம் கொடுததவர்களுள் பெரும்பான்மையினர் உண்மையில் ஜேர்மன் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக விளங்கினர். 1933-1944 வரையிலான ஆண்டுகளில் இடதுசாரிகன்னை அரசியல் நடவடிக்கைகளுக்காக எசன்சில் 2162 மக்கள் கைதுசெய்யப்பட்டனர். டுசெஸ்ஸ்சோவில் 1721 பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களுள் 297 பெண்கள். பிராண்ட்பேர்க் சிறைக்குள் யுத்த காலத்தில் அரசியல் காரணங்களுக்காக கொலை செய்யப்பட்ட 1807 பேரில் 775 பேர் தொழிலாளர்கள் அல்லது தொழில் கலைஞர்களாக இருந்தனர். அவர்களால் ஆட்சியாளர்களைத் தூக்கி வீச முடியவில்லை.ஒரு முடியாத காரியமாக இருந்தது. 1944ல் இராணுவ, பழமைபேணும் வட்டாரங்களில் இது முயறிசிக்கப்பட்டது. அவர்களும் இதே விதத்திலேயே தோற்கடிக்கப்பட்டனர். ஆட்சியாளர்கள் இறுதியில் பொறிந்து வீழ்ந்தது யுத்ததின் தோல்வியின் பின்னராகும். அப்படி இருந்த போதிலும் அதன் அழிவின் மத்தியிலும் தனது எதிரிகள் பலருக்கு அழிவை உருவாக்கியது. இணைப்பு இல்லாத எதிர்க்கட்சி சர்வாதிகாரத்துக்கு ஒரு தொல்லையான ஒன்றாக மட்டுமே விளங்கியது. ஆனால் ஏனைய சிறிய குழுக்களைப் போலவே அதுவும் இரக்கமில்லாத விதத்தில் ஒடுக்கித் தள்ளப்பட்டது." 15

Hitler's willing executioners என்ற இந்த நூலில் இத்தகைய உண்மைகள் குறிபபிடப்படவேயில்லை. யூதர்களைத் தவிர வேறு எவர் மீது என்றாலும் பாசிசம் தாக்கம் ஏற்படுத்திய விதம் பற்றி அவருக்கு அக்கறையே கிடையாது என்ற எண்ணத்தை கோல்ட்ஹகனின் நூல் தருகின்றது. இந்த இரக்கமற்ற மனோபாவம் அவரின் குறுகிய வெறுப்புக்குரிய நோக்கில் இருந்து பெறப்படுகின்றது. கொலோகோஸ்ட் "சாதாரண" ஜேர்மனியர்களால் யூதர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றமாகும் என்ற அவரின் குறுகிய நோக்கில் இருந்து பெறப்படுகின்றது.ஜேர்மனியர்கள் ஆளுக்காள் இழைத்தவை பற்றி அவருக்கு அக்கறை கிடையாது. எனினும் அவரின் கோட்பாடு ஹிட்லருக்கு ஜேர்னியர்களிடையே எந்த ஒரு கணிசமான அளவு எதிர்ப்பு இருந்ததை அங்கீகரிக்க அவரை அனுமதிப்பதாய் இல்லை.

ஒரு உண்மைச் சம்பவங்கள் என்ற அர்த்தத்தில் இது தவறானது மட்டும் அல்ல. பேராசிரியர் கோல்ட்ஹகனின் நிலைப்பாட்டின் வஞ்சனை அவரை கோலோகோஸ்டுக்கான காரணியையோ அல்லது அதன் உலகளாவிய உலக வரலாற்று சிறப்பு முக்கியத்துவத்தினையோ. புரிந்து கொள்ள இலாயக்கற்றதாக்குகின்றது.

வரலாற்று ரீதியில் ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற முறையில் யூத மக்களின் தலைவிதியும் தொழிலாளர் வர்க்கத்தின் தலைவிதியும் துன்பகரமான முறையில் பிரிக்க முடியாத விதத்தில் இணைக்கப்பட்டு இருந்தது. ஜேர்மன் சோசலிச இயக்கத்தின் வீழ்ச்சி ஐரோப்பிய யூதர்களை நாசமாக்குவதற்கு கதவுகளைத் திறந்து விட்டது. யூதர்களின் ஜனநாயக உரிமைகள்-உண்மையில் அவர்களின் உயிர்வாழும் உரிமை கூட- தொழிலாளர் வாக்கத்தின் அரசியல் பலத்திலேயே தங்கியிருந்தது. யூதர்கள் பிரமாண்டமான முறையில் கொலை செய்யப்படுவது 1937ல் ஆரம்பமாகவில்லை. இந்த அளவிலான பிரமாண்டமான அளவிலான குற்றங்களை இழைப்பதற்கு முன்னர் ஜேர்மன் சமுதாயத்தின் புத்திஜீவி ரீதியில் முக்கியமானதும் முற்போக்கானதுமான மனித மூலகங்களை நாஸிகள் பயமுறுத்தி நாசமாக்க வேண்டியிருந்தது.

இறுதி ஆய்வுகளில் கோலோகோஸ்ட் யூதமக்களும் முழு மனித இனமும் தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவத்தை தூக்கிவீச தவறியதற்கு செலுத்திய விலையாகும்.

இது மறக்க முடியாத ஒரு படிப்பினையாகும். முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் மீண்டும் ஒது தடவை வெடித்துச் சிதறும் பரிமாணத்தை எட்டியுள்ள ஒரு உலகில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். பூகோள ரீதியான முதலாளித்துவத்தின் வெறிபிடித்த தொழிற்பாடுகள் பிரமாண்டமான மக்களை உற்பத்திப் போக்கில் இருந்து முழுமனே அன்னியப்படுத்தி விடாவிடினும் குறைத்து விட்டது. ஒவ்வொரு ஐரோப்பிய நாடுகளிலும் வேலையின்மை10 வீதத்தில அல்லது அதற்கு கூடுதலாக உள்ளது.உலக முதலாளித்துவ சந்தையின் சமூக வெறியாட்டத்துக்கு ஒரு நிஜமான பதிலீட்டை அபிவிருத்தி செய்யாமல் முதலாளித்துவத்தினால் தவறான வழியில் இட்டுச் செல்லப்பட்ட பலிகடாக்கள் வலதுசாரி பிரசங்கிகளால் பாதிக்கப்படுவர்.

நேற்றுத்தான் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை ரூஷ்யாவில் யூதர் எதிர்ப்பின் புனர்வாழ்வு பற்றிய செய்தியுடன் வெளிவந்தது. "1991ல் கம்யூனிசம் சோவியத் யூனியனும் வீழ்ச்சி கண்டதோடு தோன்றியுள்ள சமூக, பொருளாதார மாற்றங்களால் ஏமாற்றமடைந்தவர்களும் அதில் இருந்து தோன்றும் வெறுப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்போருமான பலர் பாரம்பரியமான பலிகடாக்களான யூதர்கள் திசைக்கு திரும்பியுள்ளனர்."

இத்தகைய அபிவிருத்திகள் தோற்றுவிக்கும் ஆபத்துக்களுக்கு எதிராக கோல்ட்ஹகனின் நூலின் பெறுமதி என்ன?

ஆழமாகி வரும் பொருளாதார நெருக்கடியினதும் குழப்பங்களதும் நிலைமைகளின் கீழ் 1930பதுகளின் படிப்பினைகள் அசாதாரணமான சமகால முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது. எனவேதான் இந்த கோலோகோஸ்டின் மூலத்தினையும் நிஜ காரணிகளையும் ஆய்வதும் உள்ளீர்ப்பதும் அவசியமாகியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

## ஆசிரியருக்குக் கடிதம்

மன்னார் தொண்டர் ஆசிரியர் அமைப்பு,
சன்ஜீதா வத்த, கல்பிட்டி வீதி, நுரைச் சோலை

**இடம்பெயர்ந்த முஸ்லீம் தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் மறுக்கப்பட்டதேன்?**

4.10.1990 ஏற்பட்ட பலவந்த வெளியேற்றத்தின் பின்னர் நாட்டின் பல பாகங்களிலும் சொல்லொணாத் துயரில் வாழும் தொண்டர் ஆசிரியர்கள் மன்னார் கல்வித் திணைக்களத்தில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு பலத்த கடல் பெருக்குக்கு மத்தியிலும் கடல் மார்க்கமாக 7.10.1990ல் தோற்றினார்கள். 1.1.1989 தொடக்கம் 31.12.1989 வரை சேவையாற்றிய 39 முஸ்லீம் தொண்டர் ஆசிரியர்கள் 22.2.90 வர்த்தமானி அறிவித்தலின் படி சகல தகைமைகளையும் உள்ளடக்கியவாறு தெரிவுசெய்யப்பட்டார்கள். அத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அவர்களுக்குரிய பாடசாலைகளும் ஒதுக்கப்பட்டன. அத்தோடு அவர்களுடன் சமகாலத்தில் சேவையாற்றிய தமிழ் தொண்டர் ஆசிரியர்கள் ஏற்கனவே சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். ஆனால் அகதிகளாக்கப்பட்ட ஒரே காரணத்தால் நாம் நியமனம் மறுக்கப்பட்டு நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

பல அமைச்சர்களும் அதிகாரிகளும் பல வாக்குறுதிகள் அளித்தும் பாராளுமன்றத்தில் பலமுறை பேசப்பட்டும் இன்று வரை எதுவித விமோசனமும் இன்றித் தவிக்கின்றார்கள் 38 முஸ்லீம் தொண்டர் ஆசிரியர்கள்.

## கல்பிட்டி பொதுமக்களின் உரிமைகளைக் காக்கும் போராட்டம்

கல்பிட்டியில் அனல் மின்சார நிலையம் அமைக்கப்படுவதற்கு எதிராக மக்களின் அமைதியான பிரச்சாரத்துக்கு பொதுஜன முன்னணி அரசாங்கம் நடாத்திய கொலைகாரத் துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் பிரதேச மக்களுக்கு எதிரான பயங்கரமும் ஒடுக்குமுறை இயக்கமும் பொலிசாரினால் தொடுக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டினால் காயம் அடைந்த ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை, கலகம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. பொதுமக்களின் அமைதியான பிரச்சாரத்துக்கு பொதுஜன முன்னணி அரசாங்கம் தொடுத்த கொலைகாரத் தாக்குதலை வன்மையாகக் கண்டனம் செய்யும் சோசலிச சமத்துவக் கட்சி, முன்வைக்கப்பட்டுள்ள பொய்க் குற்றச்சாட்டுக்களை உடனடியாக வாபஸ்பெறும்படி நெருக்குகின்றது. அவ்வாறே இப்பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதலை கண்டனம் செய்யவும், பிரதேச மக்களைக் காக்கும் பொருட்டும் முன்வருமாறு சகல தொழிலாளர்களையும் நாம் வேண்டிக் கொள்கின்றோம்

அத்தோடு மேலும் வளர்ச்சி கண்டுவரும் பொதுமக்களின் பிரச்சாரத்தினை தடம்புரளச் செய்யும் பொருட்டு யூ.என்.பி, ஈ.பீ.டி.பீ. எம்.பி.மார்கள் பிரதேசத்தில் நடமாடிக் கொண்டு அம்மக்களின் துயரங்களையும் அனல் மின்சார நிலையம் அமைப்பது சம்பந்தமான தகவல்களையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக வாக்குறுதியளித்துவருகின்றனர்.முதலாளித்துவ எம்.பி.மார்கள் அல்லது மதத் தலைவர்களின் பின்னால் அலைவதன் மூலம் இந்தக் கொலைகார முதலாளித்துவ அரசாங்கத்துக்கு நெருக்குவாரம் கொடுப்பதன் மூலம் பொதுஜன வாழ்க்கையைப் பாதுகாக்க முடியாது. தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் முதலாளித்துவ அரசியலில் இருந்து சுயாதீனமாகி ,சோசலிச வேலைத்திட்டத்தின் கீழ் அணிதிரண்டு போராட வேண்டும். இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பிரதேசத்தின் சகல ஒடுக்கப்படும் மக்களும் அணிதிரள வேண்டும். அரசாங்கத்துக்கு நெருக்குவாரம் கொணரும் வேலைத் திட்டங்களின் மூலம் நடைபெறுவது பொதுஜன வாழ்க்கையை அழிப்பதற்கு அரசாங்கத்திற்கு அவகாசம் வழங்குவதேயாகும்.

தூப்பாக்கிச் சூட்டினால் இறந்த எஸ்.ஏ.சோமசிரியின் குடும்பத்துக்கு இதுவரை எந்தவிதமான நஷ்டஈடும் வழங்கப்படாததோடு சம்பவத்தை பூசிமெழுக பொலிசாரும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் தொழிற்பட்டு வருகின்றன. காயமடைந்து இன்னமும் சுகமடையாத இருவர் தொடர்ந்து ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற்று வருவதோடு வேறு இருவர் வெளியில் இருந்து சிகிச்சை பெற்றுவருகின்றனர். கைவிலங்கு போடப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு கைவிலங்கு அகற்றுவதற்காக சிறைச்சாலை உயர் அதிகாரிகளுக்கு ரூபா.3000, ரூபா.5000 வீதம் லஞ்சம் கொடுக்க நேரிட்டதோடு ஜெயிலர்களுக்கு காலையில் ரூபா.50 வீதம் வீச வேண்டி நேரிட்டதாகவும் காயமடைந்தவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

பொலிஸ் தலைமைநிலைய பொலிஸ் அதிகாரி ஆனந்த அல்விஸ்சின் வழநடாத்தலில் வீடுகளைச் சோதித்து, இளைஞர்களை விசாரணை செய்துள்ளனர். மக்களிடம் ஆயுதம் இருக்கிறதா எனச் சோதித்த பொலிசார் வீடுகளில் இருந்த வாள், மண்டா, மற்றும் வெட்டும் கருவிகளை எடுத்துச் சென்றுள்ளனர். சில விவசாயிகள் வசம் இருந்த லைசென்சுடன் கூடிய துவக்குகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

"நான் தான் துப்பாக்கிப் பிரயோகம் செய்யக் கட்டளையிட்டது. அதனால் பொலிசார் சுட்டனர். பிக்குமார்களுக்கும் வெட்கம் கிடையாது. மக்களைத் தூண்டிவிட்டு பிரச்சாரத்தைத் தொடங்கினர். பொலிசில் இருப்பது ஜீவன் இல்லாதவர்கள் அல்ல என்பதை பிக்குமார் அறிந்து கொள்ள வேண்டும்." என்று பொலிஸ் அதிகாரி பொரிந்து தள்ளியுள்ளார்.

ஒரு விடயம் தற்சமயம் தெளிவாகி உள்ளது. அது பொதுஜன முன்னணி அரசாங்கத்தை வெளியேற்றி, யூ.என்.பி.க்கோ அல்லது வேறு எந்த ஒரு பிற்போக்காளர்களுக்கோ இடமளியாது சோசலிச வேலைத்திட்டத்தை நடைமுறைக்கிடும் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்வதை விட வேறு எந்த விதத்திலும் பொதுமக்களின் உரிமைகளைக் காக்க முடியாது.

## இனவாத யுத்தத்தின் படிப்பினைகளைக் ....

1ம் பக்கத் தொடர்ச்சி

(வெலிக்கடை சிறைக்கு )கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர். இதே குற்றச்சாட்டின் மீது வேறு ஒரு இராணுவக் கப்டனுக்கும் 53 படையாட்களுக்கும் எதிராக வழக்கு விசாரணை ஆரம்பமாகியுள்ளது. இது படையில் உள்ள படையாட்களை ஓட்டம் பிடிக்க வேண்டாம் என அரசாங்கம் விடுக்கும் ஒரு எச்சரிக்கையாகும். இந்த ஆண்டு இனவாத யுத்தத்துக்காக 5000 கோடி ரூபாக்களை ஒதுக்கிக் கொண்டுள்ள அரசாங்கம் இந்த யுத்த அழிவுகளை சந்திக்கும் அடிக்கு அடி மேலும் அளவற்ற பொதுஜன நிதியை கரைக்கின்றது. தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் மனித வளங்களும் நிதியும் ஆளும் வர்க்கத்தினால் இம்மக்களுக்கு எதிராக ஒடுக்குமுறை அரச இயந்திரத்தினைக் கட்டியெழுப்பவே பயன்படுத்தப்படுகின்றது.

× பொதுஜன முன்னணி - யூ.என்.பி. இருதரப்பு உடன்பாட்டின் மூலம் நடைமுறைக்கிடப்படும் இந்த அழிவுமிக்க திட்டங்களின் ஒரு பாகமாக அதிகாரப் பரவலாக்கல் மூலம் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜதம் செய்வதாகவும் யுத்தத்துக்கு முடிவு கட்டுவதாகவும் இந்நாட்களில் அரசாங்கம் உயர்ந்த மட்டத்திலான பிரச்சாரத்தினை முன்னெடுத்து வருகின்றது. அரசாங்க தரப்பு பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு ஜூலை 14-15ம் திகதிகளில் களுத்துறை டன்கரின் ஹோட்டலில் நடைபெற இருந்த அரசியல் தீர்வு பற்றிய கருத்தரங்கம் மக்களின் கண்களில் மண்தூவும் ஒரு முயற்சியாகும். இனவாத ஒற்றையாட்சி முறையின் ஆளுமை தொடர்ந்தும் அப்படியே இருந்து வரும் எனவும் பௌத்த மதத்துக்கு முதலிடம் வழங்கப்படும் புதிய சரத்துக்கள் குறிப்பிட்டுக் கொண்டுள்ளன. இவை 1972 அரசியலமைப்புச் சட்டம் கொண்டிருந்த பௌத்த மதச் சார்பு அதிகாரங்களை விட வெறியான சரத்துக்களை உள்ளடக்கிக் கொண்டுள்ளன. இந்தப் புதிய அரசியலமைப்புக்கள் பொதுஜன முன்னணி-யூ.என்.பி. சமரசத்தினைச் சூழ விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் முதலாளித்துவக் கட்சிகளையும் இணைத்துக் கொள்ளும் இலக்கிலானவை.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் யூ.என்.பி.யினதும் இருதரப்பு உடன்படிக்கையின் நோக்கம் தமிழ் மக்களதோ அல்லது தென் மாகாணங்களின் மக்களினதோ ஜனநாயக உரிமைகளை வழங்குவதல்ல. அதற்கு முற்றிலும் முரண்பட்ட விதத்தில் பொதுமக்களை ஒடுக்கி அடக்கும் ஒரு இராணுவ ஆட்சிக்கான நிலைமைகளைச் சிருஷ்டிப்பதேயாகும்.

× விடுதலைப் புலிகள் ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டின் மூலம் செய்யும் சமரசத்துக்குத் தமது தயார் நிலையை ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளனர். இந்த அமைப்பு, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாவும் மக்களை விடுதலை செய்யும் ஒரு அமைப்பல்ல. கொடூரமான ஒடுக்குமுறைக்கு அவர்களை உள்ளாக்கும் ஒரு அமைப்பாகும். இதனை அது ஏற்கனவே காட்டிக் கொண்டுள்ளது. தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் அவர்களின் ஆட்சி நிலவும் பிராந்தியங்களில் இருந்து வெளியேறுவது இந்தக் கொடிய ஒடுக்குமுறைகளைக் சகித்துக் கொள்ள முடியாமலாகும். சிங்கள, தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான அவர்களின் இனவாதத் தாக்குதல்களின் ஒரு பாகமாக விடுதலைப் புலிகள் 35வறிய முஸ்லீம் மக்களையும் பாடசாலை மாணவர்களையும் கடத்திச் சென்றுள்ளார்கள். ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டலை உறுதி செய்யும் திட்டத்தின் கீழ் அதன் கையாட்களாகச் செயற்பட தமது தயார் நிலையை விடுதலைப் புலிகள் காட்டிக் கொண்டுள்ளனர்.

### பிற்போக்கு இலக்கு

இனவாத யுத்தம் , அரசியல் தீர்வுத் திட்டம், பொதுஜன முன்னணி-யூ.என்.பி. சமரசம், தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுடனான பேரம் பேச்சுக்கள் என்பவை எல்லாம் முதலாளி வர்க்கத்தின் ஒரே பிற்போக்கு இலக்கில் வழிநடாத்தப்படுபவை ஆகும். அது அனைத்துலக மூலதனத்தின் உக்கிரமான சுரண்டல் ஆதாள பாதாளத்தினுள் பொதுமக்களை தள்ளி விழுத்துவதேயாகும். ஏகாதிபத்திய ஆளும் வர்க்கத்துக்கு அவசியப்படுவது இலங்கையின் கொம்பிரதோர் முதலாளிகளின் மூலம் அவற்றை செய்து முடித்துக் கொள்வதேயாகும். எஞ்சிய ஏகாதிபத்தியவாதிகளதும் அவசியத்தை வெளியிட்டவாறு பொதுஜன முன்னணி-யூ.என்.பி.சமரசத்தில் பிரித்தானிய டோரி அரசாங்கம் கைபோட்டதற்குக் காரணம் அதுவேயாகும்.

தொழில், சம்பளம், நலன்புரிசேவை, உதவிமானியங்களை ஒழித்துக் கட்டியவாறு நடாத்திவரும் வேலைத் திட்டத்துக்கு எதிராக தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களிடையே வளர்ச்சி கண்டு வரும் எதிர்ப்பு ஒரு பெரும் இராட்சத போராட்டமாக வளர்ச்சி காண்பதற்கு முன்பாக வே தாக்குதலைத் தொடுக்கும் அக்கறையில் முதலாளித்துவ பொதுஜன முன்னணி-யூ.என்.பி. கட்சிகள் ஏகாதிபத்தியவாதிகளின் வழிநடாத்தலில் வேலையில் இறங்கியுள்ளன.

1972 இனவாத அரசியலமைப்புச் சட்டம், 1983 கறுப்பு ஜூலை தொடக்கம் அவ்வாறே 1987 இந்திய-இலங்கை உடன்படிக்கை தொடக்கம் முழுக் காலப்பகுதியிலும் முதலாளித்துவ காட்டுமிராண்டி வேலைத்திட்டத்தினை தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வாக சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ கட்சிகளும் தொழிற்சங்க அதிகாரிகளும் மாஜி.தீவிரவாதிகளும் அவர்களின் இயக்கங்களும் காட்டி வந்தன என்பது அப்படி ஒன்றும் இரகசியம் அல்ல.

சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் மட்டுமே சந்தர்ப்பவாதிகளின் துரோகத்தை அம்பலப்படுத்தியது. ஆளும் வர்க்கத்தின் பிற்போக்கு திட்டங்களை எதிர்த்து தொழிலாளர் வர்க்கத்தை சுயாதீனமான புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டப் போராடியது.

தொழிலாளர் வர்க்கத்தின் எதிரில் நிரந்தரப் புரட்சிக் வேலைத்திட்டம் இருந்து கொண்டுள்ளது. அனைத்துலக சோசலிசத்தை உறுதி செய்யும் வகையில் இந்திய துணைக்கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக ஈழம்——சிறீலங்கா சோசலிச குடியரசு ஒன்றியத்தினை ஸ்தாபிதம் செய்யப் போராடுவதாகும். சோசலிசத்துக்கான இப்போராட்டத்தின் உள்ளேயே தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும். இந்த யுத்தம் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் யுத்தம் அல்ல. முதலாளிகளின் அபிலாசைகளின் பேரிலான ஒரு இனவாத யுத்தம். யுத்தத்துக்கு ஒரு ஆளோ அல்லது ஒரு சதமோ கொடுக்காதே. விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதம் சிங்கள-தமிழ் தொழிலாளர்களை பிரிக்கும் பிற்போக்கு அரசியலாகும். பிரிவினஜவாதம் வேண்டாம்

## பிலியந்தலை மக்பெக் பக்டரிக்கு மூடுவிழா?

## 1500 தொழிலாளர் வேலைகளுக்கு ஆபத்து

"மறு அறிவித்தல் வரை வேலைத்தளம் மூடப்பட்டிருக்கும் " என்ற அறிவித்தலை நிறுவன் வாயிலில் தொங்க விட்டுவிட்டு மக்பெக் முதலாளிகள் முன் அறிவித்தல் எதுவும் இல்லாது பக்டரியை ஜூன் 16ம் திகதியில் இருந்து இழுத்து மூடியுள்ளனர்.

விசித்திர பண்டங்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுவந்த இந்த பக்டரியின் முதலாளிகள் இந்நிறுவனத்தைச் சேர்ந்த அலுபோவில்ல, பண்டாரகம, வேக்கடை கிளைகளை இதற்கு முன்னதாக மூடி அதன் ஊழியர்களையும் பிலியந்தலை கிளையுடன் சேர்ந்து இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த "மறு அறிவித்தல்" ஒட்டுவதற்கு முன்னதாக முதலாளிகள் நிறுவனம் நஷ்டத்தில் இயங்குவதாகக் கூறும் கதையளப்புக்களை பரப்பி வந்தனர். இதன் அடிப்படையில் கடந்த ஜனவரி மாத சம்பளத்தைக் கூட உரிய காலத்தில் செலுத்தவில்லை. லங்கா சமசமாஜக் கட்சி தலைமையிலான அகில இலங்கை வர்த்தக, கைத்தொழில் தொழிற்சங்கம் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக செய்தது ஜனாதிபதிக்கும் தொழில் ஆணையாளருக்கும் கடிதம் அனுப்பியதும் அதற்கு மேலதிகமாக தொழில் ஆணையாளருடன் பேச்சுவார்த்தை நடாத்தியதுமேயாகும்.

இந்தப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதன் மூலம் குறுகிய காலத்துக்கு தன்னும் தொழில் உட்பட்ட உரிமைகளைக் காக்க முடியும் என்ற நப்பாசையை பரப்ப இந்த சமசமாஜத் தொழிற்சங்கத் தலைவர்கள் முயற்சிக்கின்றார்கள். அதன் மூலம் தொழிலாளர் போராட்டத்தை தடம்புரளச் செய்ய முயற்சிக்கப் படுகின்றது. தொழிலாளர் தலைவர்களின் இந்தப் பொறிக் கிடங்கில் வீழ்ந்து போகாது தொழிலாளர் வர்க்கத்தின் ஏனைய பகுதியினரதும் பிரதேச மக்களதுஞ் ஆதரவுடனும் தொழில் காக்கும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இந்த மக்பெக் கம்பனி முதலாளிகள் முன்னர் காலை 8மணி முதல் மாலை 5 மணி வரை இருந்து வந்த வேலை சுற்றினை இப்போது மாலை 6மணி வரை - 1 மணித்தியாலத்தால் நீடித்துள்ளனர். தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ரூபா.60, ரூபா.70 வீதத்தில் அற்ப சம்பளமே செலுத்தப்பட்டு வந்துள்ளது. தொழிலாளர்கள் 1995 வேலை நிறுத்தம் மூலம் மாதச் சம்பளமும் வருடாந்த விடுமுறையும் அததோடு தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையையும் வென்றெடுத்தனர்.

www.padippakam.com

**கிளிநொச்சிக் கடிதம்:**

# மக்களின் சகிப்புத்தன்மை எல்லை கடந்துவிட்டது

ஜய சிக்குருயி இராணுவ நடவடிக்கையினால் ஓமந்தை, நெடுங்கேணி, ஒட்டுச்சுட்டான், புளியங்குளம் கனகராயன் குளம், மாங்குளம் பகுதிகளில் விவசாயிகள் தமது பயிர்ச் செய்கை நிலங்களைக் கைவிட்டு விளைச்சலுக்கு பயன்வடுத்திவந்த சாதனங்களையும் கைவிட்டுவிட்டு ஓட்டம் பிடித்துள்ளனர். இம்மக்கள் புதுக்குடியிருப்பு, மல்லாவி, துணுக்காய், முழங்காவில் முதலான விவசாயப் பிராந்தியங்களுக்கு வந்து பாடசாலைக் கட்டிடங்களிலும் மரங்களின் அடியிலும் ஜீவிக்கின்றார்கள்.

கிளிநொச்சியைக் கைப்பற்ற இடம்பெற்ற 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையினால் வசிப்பிடங்களை இழந்த மக்களும் இக்கிராமங்களில் வசிக்கின்றார்கள். 8 மாதங்களுக்கு மேல் கழிந்து விட்டது. ஆனால் அவர்களுக்கு எதுவிதமான உதவியும் கிடைக்கவிலலை. அவர்கள் நோய்நொடிகளுக்கு உள்ளாகி உள்ளதோடு பட்டினி கிடக்கவும் நேரிட்டுள்ளது.

அவ்வாறே ஜயசிக்குறுயி இராணுவ நடவடிக்கையினால் அகதிகளான மக்கள் எதுவும் அற்ற நிலையில் பட்டினியால் இறக்க நேரிட்டுள்ளது.யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த அகதிகளுக்கு இது வரையும் எதுவிதமான உதவியும் கிடைக்கவில்லை.பொதுவில் வன்னியில் இருக்கும் மக்கள் யாழ்ப்பாணத்துக்கு கால்நடையாகவோ அல்லது மன்னார் வழியாகவோ செல்ல முடியாமல் -கப்பல் பயணத்துக்காக மூன்று மாதங்களாக உணவின்றிக் காத்துக் கிடக்கின்றனர். மன்னார் செல்லப் பணம் இல்லாத மக்கள் பட்டினியால் சொல்லொணாத் துயரங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை வாங்க எவரும் கிடையாதா? செத்தல் மிளகாய் கிலோ 1. ரூபா.35க்கு வாங்கவும் எவரும் கிடையாது உள்ளது. "ஒரு கிலோ மீன் ரூபா.40-60க்கும் வாங்க ஆளின்றிச் சந்தையில் நாற்றம் கண்டு வருகின்றது." இந்த விலைக்குத் தன்னும் மீனை எவரும் வாங்காத நிலையில் பேரம் பேசிக் கொண்டிருந்த பெண் தெரிவித்தார்.

மன்னார் விவசாயிகள் நாட்டரிசியை கிலோ ரூபா.18க்கு வீட்டில் விற்பனை செய்கின்றனர். எனினும் அதை வாங்கவும் ஆள் கிடையாது.

விடுதலைப் புலிகளின் கடை கூரையை உடைத்துக் கொண்டு அங்கிருந்த சாமான்களை திருடிச் சென்றுள்ளார்கள். விடுதலைப் புலிகளின் கடைக்கு இது நடந்தால் ஏனைய தனியார் கடைகளைப் பற்றிச் சொல்லவா வேண்டும் ? சாமான் இருந்த இடத்தில் களவு பட்டினியாலேயே இடம் பெற்றுள்ளது எனக் கூறி மக்கள் இதைக் களவாகக் கணக்கெடுக்கத் தயார் இல்லை.

மக்களின் சகிப்புத் தன்மை எல்லை கடந்து விட்டது. பாடசாலை செல்லாமல் உள்ள பாடசாலைச் சிறுவர்கள் எண்ணிக்கை 30000க்கும் அதிகம். ஜயசிக்குறுயி இராணுவ நடவடிக்கையினால் பிள்ளைகள் ஒன்றரை மாதத்துக்கும் மேலாக பாடசாலை செல்லவில்லை.இருப்பிடம் இல்லாத பிள்ளைகள் பாடசாலை செல்வது எப்படி?

இங்கு உள்ள விலைவாசிகளின் நிலைமை வருமாறு :

| | |
|---|---|
| சைக்கிள் டயர்-ரியூப் | ரூபா.800 |
| தேங்காய் | ரூபா. 15 |
| அரிசி(கிலோ) | ரூபா. 18 |
| மீன் | ரூபா. 40 |
| செத்தல் மிளகாய் | ரூபா. 35 |
| பச்சை மிளகாய் | ரூபா. 25 |
| கத்தரிக்காய் | ரூபா. 40 |
| கிளங்கு | ரூபா. 60 |
| பீ வெண்காயம் | ரூபா. 40 |
| வாழைப்பழம் | ரூபா. 18 |
| பயற்றங்காய் | ரூபா. 30 |

கரட், பீட்ரூட், போஞ்சி, கோவா மரக்கறி வகைகள் இங்கு கிடையாது.

ஒரு நாள் ஒரு பிள்ளை ஒரு "ட்ரவலிங் பாக்கை" வாங்குகிறீர்களா எனக் கேட்டு எமது வீட்டுக்கு வந்தார். அதை ஏன் விற்கிறீர்கள் எனக் கேட்டதும் அவர் கண்ணீர் விட்டார். அவரை வெட்கம், பயம் , பசி வாட்டியது. அவரின் துயரத்தைக் கண்ட ஒருவர் ரூபா.500க்கு அதை வாங்கினார். கடைகளில் அது ரூபா.600 விலை போகின்றது. இந்த விதத்தில் பலர் தமது பொருட்களை குறைந்த விலையில் விற்றுத் தள்ளுகின்றனர்.

ஆதலால் இந்த நிலைமையைச் சிருஷ்டித்த இந்த அமைப்பை ஒழிக்க வேண்டும். அத்தகைய ஒரு நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க எமது வேலைத்திட்டத்துக்கு போராட வேண்டும். அந்த உத்வேகம் என்னுள் குடிகொண்டுள்ளது.

# புதிய அரசியலமைப்புச் சட்டம்: இனவாத, மதவாதத்தின் சிகரம்



ஜீ.எல் பீரிஸ்

புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் 1வது அத்தியாயத்தின் கீழ் பொதுஜன முன்னணி அரசாங்கம் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவதாக சமீபத்தில் கொழும்பில நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசிய நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்தார். பௌத்த மத பீடங்களின் ஆலோசனைப்படி செயற்படும் சட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்படும் சபைகள் பௌத்த சாசனத்தை காக்கும் பரப்பும் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்து செயற்படும் என பீரிஸ் தெரிவித்தார்.

இந்த புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்படி பௌத்த மத ஆதிக்கம் இல்லாத பிராந்தியங்களில் பௌத்த மதத்தினை பரப்புவதில் அக்கறை காட்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். பௌத்த மத ஆதிக்கம் இல்லாத பகுதிகளுக்குள் பிராந்திய நிர்வாக அலகுகள் பௌத்தத்தினை பிரச்சாரம் செய்யும் பணிக்கு பொறுப்பாக இருக்கும் எனப் புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் இன்றைய வரைவு குறிப்பிடுவதாக அமைச்சர் அங்கு மேலும் குறிப்பிட்டுள்ளார். இதன்படி உத்தேச அரசியலமைப்புச் சட்டம் 1972 சிங்கள பௌத்த. இனவாத, மதவாத அரசியலமைப்புச் சட்டத்தை காட்டிலும் பன்மடங்கு பிற்போக்கானதும் மதச்சார்பு உடையதுமாக இருக்கும். பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குவதுடன் நின்றுவிடாது அதைப் பிரச்சாரம் செய்யும் சிறப்பு சபைகளும் சட்டத்தின் மூலம் அமைக்கப்படும். புதிய அரசியலமைப்புச் சட்டம் சிறப்பாக தமிழ் மக்களதும் மற்றும் சிறுபான்மை இன, மதக் குழுக்களதும் "ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டி" தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அத்திவாரத்தினை இடும் என்ற பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும், முன்னாள் தீவிரவாதக் கும்பல்கள் உட்பட்ட அதன் கையாட்களதும் கதையளப்புக்களும் அரசியலமைப்பு விவகார அமைச்சரின் பேச்சின் மூலம் தவிடுபொடியாகியுள்ளது.

அதற்கு மாறாக இந்த அரசியலமைப்புச் சட்டம் ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் உட்பட்ட சிறுமான்மை இன, மதக் குழுக்களின் மீது பேரினத்தினதும் அவர்களின் மதத்தினதும் ஆளுமையை பலாத்காரமான முறையில் திணிப்பதாக விளங்கும்.

பௌத்த மத ஆதிக்கம் இல்லாத பகுதிகளில் பௌத்த மதத்தினைப் பரப்புவதை சட்டத்தினால் உத்தரவாதம் செய்வதோடு அப்பகுதிகளின் நிர்வாக அலகுகள் அதைச் செய்யக் கடமைப்பட்டுள்ளன என அமைச்சர் பீரிஸ் குறிப்பிடும் போது அதன் அர்த்தம் என்ன? அப்பகுதியில் வாழும் பௌத்த மதத்தினர் அல்லாத மக்கள் மீதும் நிர்வாக அலகின் மீதும் பேரினத்தின் ஆளுமையை அவர்களின் மதத்தின் ஊடாக ஆத்திரமூட்டும் வகையில் பலாத்காரமாகத் திணிப்பதாகும்.

இதன்படி பிராந்திய அலகுகளுக்கு எதுவிதமான சுயாதீனமும் கிடையாது என்பதும் அவை இனவாத பேரின அரசாங்கத்தின் மதவாத ஆதிக்கத்துக்கு முழுமீனே அடிபணிந்தவை என்பதையும் சுட்டிக் காட்டுகின்றது. பிராந்திய அலகுகளுக்கு அதிகாரத்தை பரவலாக்குவது என்பது அப்பட்டமான ஒரு பொய்யாகும் என்பதை இது அம்பலமாக்குகின்றது. மறுபுறத்தில் பௌத்த மத ஆதிக்கம் இல்லாத பிராந்தியங்களில் அரசின் தலையீட்டின் மூலம் பௌத்த மதத்தினைப் பரப்புவதானது மதப் பிளவுகளை தூண்டிவிட்டு தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களை இன.மத கோட்டின் ஊடாக ஆளுக்காள் முட்டி மோத வைப்பதேயாகும்.

1972ன் இனவாத, மதவாத அரசியல்மைப்புச் சட்டம் இன்றைய காட்டுமிராண்டி மட்டத்துக்கு வளர்ச்சி கண்டு இனவாத யுத்தத்தின் தீப்பிளம்புகளைத் தூண்டி விட்டுள்ள ஒரு நிலையில் அந்த அரசியலமைப்புச சட்டத்தையும் தாண்டிச் செல்லும் அரசியல்மைப்பு சிங்கள-தமிழ் தேசிய இனங்கள் இரண்டினையும் சேர்ந்த பொதுமக்களின் உயிர்களை மேலும் பல்லாயிரக் கணக்கில் பலியெடுக்கும் ஒன்றாக விளங்கும்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜூலை 20ம் திகதி நடைபெற்ற "சர்வதேச சமத்துவம்" என்ற தலைப்பிலான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் பீரிஸ் 1970பதுகளில் பிற்போக்கு கூட்டரசாங்கத்தினால் அமுலுக்கு கொணரப்பட்ட தரப்படுத்தலைத் தொடர்ந்து தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெறும் முறைக்கு ஆப்புவைப்பதற்கு வக்காலத்து வாங்கும் முறையில் "மாவட்ட ரீதியிலும் இன ரீதியிலும்" சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்றுள்ளார்.





சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 8 | ரூ.40 |
| இதழ் 12 | ரூ.60 |
| இதழ் 24 | ரூ.120 |
| இதழ் 48 | ரூ.240 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு -10
தொ.பே. 682220

**சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்**

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . . . திகதி . . . . . . .

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு-10
தொ.பே. 682220


90, 1 வ்து மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்ப்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்